விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 22 ஞாயிற்றுக்கிழமை (05.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 137

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலையலைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## கத்திகள் மற்றும் வாள்களை பொலிஸாரிடம் ஒப்படையுங்கள்

### பொதுமக்களுக்கு 2 நாள் காலக்கெடு

(கொழும்பு)

இராணுவ சீருடை போன்ற ஆடைகள், கத்திகள் மற்றும் வாள்களை அருகில் இருக்கும் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்குமாறு பொதுமக்களுக்கு 2 நாட்கள் காலக்கெடு வழாங்கப்பட்டுள்ளது.

கடந்த ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை தாக்குதலை தொடர்ந்து பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது வெடிபொருட்கள் ஆயுதங்களுடன் பலரும் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இரு 16

## வடக்கு பாடசாலைகள் 8 மணிக்கு ஆரம்பிக்க தற்காலிக ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளால் பாடசாலைகளை காலை 7.30 மணிக்கு தொடங்குவதில் உள்ள சிக்கல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளை காலை 8 மணிக்கு தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 16

## பாடசாலைகள் திறக்கும் திகதிகளில் திடீர் மாற்றம்

### தரம் 1 - 5 வரை மே 13-ம் திகதி, தரம் 6 - 13 வரை நாளை திங்கள்

(கொழும்பு)

தரம் 1 தொடக்கம் 5 வரையான அனைத்து அரச ஆரம்ப பாடசாலைகளும் மே மாதம் 13ஆம் திகதியே ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டது.

அத்துடன் தரம் 6 தொடக்கம் 13 வரையான பாடசாலைகள் நாளை திங்கட்கிழமை 16

## பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட பின் பல்கலைகள் ஆரம்பமாகும்

(கொழும்பு)

பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதன் பின்னர் கல்வி நடவடிக்கைக்காக பல்கலைக்கழகங் 16

## சஹ்ரானின் மைத்துனர் சவூதியில் கைது

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரியாக கருதப்படும் சஹ்ரான் 16

## வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல்

### மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் வரும் நவம்பர் 10 அல்லது டிசெம்பர் 10ஆம் திகதி இடம்பெறும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 15

# பயங்கரவாதிகள் பலர் வெளியே உள்ளனர்

## கைது செய்ய நடவடிக்கை எடுப்போம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு) நாட்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடைய 25- 30 பேர் வரையிலானவர்கள் வெளியில் உள்ளனர். பாதுகாப்புப் படைகள் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கும் பணிகளை முன்னெடுத்துள்ளன என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.(15-ம் பக்...)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மிகவும் ஆபத்தான ஒன்று!

### சட்டத்தை தடுக்கும் பொறுப்பு எதிர்க்கட்சிக்கு உள்ளது - மகிந்த



(கொழும்பு)

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை சமர்ப்பிக்காதிருப்பது தொடர்பாக கலந்துரையாடுவதுடன், அது கொண்டுவரப்படுவதை தடுக்கும் பொறுப்பு எதிர்க்கட்சிக்கு உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மெல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் இடம்பெற்ற சந்திப் 15

### யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு

## தேசிய தௌஹீத் ஜமாத் பெயரால் எச்சரிக்கை கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு பயங்கரவாத அமைப்பு ஒன்றின் பெயரில் எச்சரிக்கைக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் 15

## தமிழ் இளைஞர்களை மீண்டும் எழுச்சி கொள்ள இடமளியாதீர்!

### ஜனாபதிக்கு விக்னேஸ்வரன் கடிதம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ அடக்குமுறைகளை மேற்கொண்டு மீண்டும் தமிழ் இளைஞர்களை எழுச்சிகொள்ள இடமளித்துவிடவேண்டாம் என முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். 15

### 4 கோடி ரூபாய் பெறுமதியான

## 296 கிலோ கேரள கஞ்சா யாழில் எரித்து அழிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா நேற்று சனிக்கிழமை எரித்து அழிக்கப்பட்டது. அவ்வகையில், 16

### நெஞ்சுவலியிலும்

## பயணிகளை காப்பாற்றிய ஹயஸ் சாரதி

### சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரை அண்மித்த பகுதியில் சாரதி ஒருவர் தனக்கு நெஞ்சுவலி ஏற்பட்டும் தனது ஹயஸ் வாகனத்தில் பயணித்த பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய 15

## யாழ். ஜும்மா பள்ளிவாசல் மற்றும் சூழவுள்ள வர்த்தக நிலையங்களில் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் மற்றும் அதை சூழவுள்ள வர்த்தக நிலையங்களில் இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தீவிர 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகம் தேவை

B அல்லது O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:
**076 239 9874**

(8686)


# தியாக தீபம் திலீபனின் ஒளிப்படம் வைத்திருந்தவர்

## 16ஆம் திகதிவரை விளக்கமறியலில்

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் சிற்றுண்டிச்சாலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரான தியாகதீபம் திலீபனின் ஒளிப்படத்தை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிற்றுண்டிச்சாலை நடத்துபவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இராணுவத்தினரும் சிறப்பு அதிரடிப்படையினரும் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் மருத்துவபீட சிற்றுண்டிச்சாலையில் குறித்த ஒளிப்படம் மீட்கப்பட்டது.


இந்நிலையில் குறித்த சிற்றுண்டிச் சாலையை நடத்துபவர் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த நபர் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம-3,10)


**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**


# அறிவித்தல்

யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு அருகில் செல்லும் றக்கா வீதி மற்றும் மருதடி வீதி என்பவற்றின் பகுதிகளைப் பாடசாலை நாட்களில் காலை 7.00 மணி முதல் 8.00 மணி வரையும் பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரையும் ஒரு வழிப்பாதையாக மட்டும் பயன்படுத்த முடியும் என்பதை வீதிப் பாவனையாளருக்கு இத்தால் அறியத் தருகின்றேன். இவ்வீதி ஒழுங்கினை கிரமமாகக் கடைப்பிடித்து ஒத்துழைக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.




**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்**

(C-6294)



தெல்லிப்பளை வித்தகபுரம்

## பொற்கலந்தம்பை ஞானவைரவர் ஆலய

# சித்திரைப் பரணி உற்சவம்


**காலம்:**
**இன்று (05.05.2019) ஞாயிற்றுக்கிழமை**

உற்சவம் காலை 10 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகி விசேட அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வரும் நிகழ்வினைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் அடியவர்கள் யாவரும் பங்குகொண்டு வைரவர் அருளினை பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

உபயகாரர் **அமரர் சரவணமுத்து குடும்பத்தினர்**
**திரு.திருமதி கௌரிதரன் கலைவாணி குடும்பத்தினர்**

(6293)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணப் பாடசாலைகளிலும் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்

## நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் நேற்று பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

### "நம்பிக்கையின் பிரதிபலிப்பே நாட்டில் நடந்த குண்டுத்தாக்குதல்"

(சாவகச்சேரி)

**வடக்கு மாகாணப் பாடசாலைகளில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக சாவகச்சேரி பொலிஸார் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளனர்.**

நேற்றுச் சனிக்கிழமை காலை பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடலின் போதே தென் மராட்சிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் தஸநாயக்க மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்

தமிழீழ விடுதலைப்புலிக ளின் காலத் தின் பின்னர் நாங் கள் எல்லோரிடத்திலும் நம்பி க்கை வைத்திருந்ததன் பிரதிப லிப்பே நாட்டில் குண்டுத்தாக் குதலில் 250 இற்கும் மேற்பட் டோர் உயிரிழந்தமை. இப்போது கண் திறந்து விழிப்பாக இருக் கின்றோம்.

விடுதலைப்புலிகள் சமய,மத ரீதியாக ஒருபோதும் செயற்பட வில்லை.அவர்கள் தமிழ் மக்க ளின் பிரச்சினைக்காக மாத்தி ரமே செயற்பட்டனர். சகல முஸ் லிம்களும் பயங்கரவாதிகள் அல்ல. குறிப்பிட்ட ஒரு குழுவி னரே முஸ்லிம் சமூகத்தில் இருக் கின்றனர். அவர்கள் வடக்கு மாகாண பாடசாலைகளிலும் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர். பாடசாலை மாணவர்க ளைப் பாதுகாக்க வேண்டும்.

எமது பாடசாலை மாணவர்கள் பாடசா லையில் எந்தவித பிரச்சினைகளுமின்றிக் கல்வி கற்க வேண்டும். காலையில் பாட சாலை செல்லும் பிள்ளை கள் மாலையில் பாதுகாப்பாக வீடு திரும்ப வேண்டும். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் கள், பழைய மாணவர்கள் மற்றும் மாண வர்கள் இணைந்து சக்தி வாய்ந்த ஒரு குழுவை உருவாக்க வேண்டும்.

முதலில் இவர் பாடசாலை மாணவன் தானா? என்பதை இனங்கண்டு பின்னர் சோத னைகளை மேற்கொள்ள வேண் டும். பாடசாலை பாதுகாப்பாக இருக்கின்றதா? என்பதனை பொலிஸார் மற்றும் இராணு வத்தினர் பாடசாலை ஆரம்பிக்கும் முன் னராக உறுதிப்படுத்தித் தருவார்கள். இரவு வேளைகளிலும் பாடசாலை பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

சகல பாடசாலைகளிலும் முறைப்பாட்டுப் பெட்டி ஒன்றை வைத்துள்ளோம். உங்கள் பாது காப்புத் தொடர்பான பிரச்சினை களை அதன் மூலமும் தெரிவித் துக்கொள்ள முடியும். அத்துடன் எமக்கு இராணுவத்தி னர் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின் றனர்.



கடந்த 21 ஆம் திகதி தாக்கு தல் இடம்பெ ற்றதன் பின்னர் இராணுவத்தினருக்கு முழு அதி காரமும் வழங்கப்பட்டுள்ளது. எனது சேவைக்காலத்தில் மூன்று முறை இவ் வாறான பிரச்சினைகள் இடம்பெற்றுள் ளன. ஆகவே பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் எனக்கு நல்ல அனுபவம் உள்ளது.

1985 விடுதலைப் புலிகளாலும், 1993 இல் ஜே.வி.பி.போராட்டத்தின் போதும் காயமடைந் தேன் என அவர் மேலும் தெரி வித்தார். (இ-30)

## இலங்கையில் நிரந்தர இராணுவத் தளத்தை அமைக்கும் எண்ணமில்லை - அமெ.தூதுவர்

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர இராணுத்தள மொன்றை அமைப்பதற்கான திட்டம் எதுவுமில்லை என அமெரிக்கா மீண்டும் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ் இதனைத் தெரி வித்துள்ளார்.

இலங் கை ஊடகங் களில் நான் இத னைத் தொடர்ந்தும் வாசித்து வருகின்றேன். ஆனால் நான் உங்களுக்கு உண்மையை தெரிவிக்கவேண்டும்.

அமெரிக்காவிடம் அவ்வாறான திட்டம் எதுவும் இல்லை.

இலங்கையில் தாக்குதல்களை மேற் கொள்வதற்கான திட்டங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என அமெரிக்கா கருதுவ தையே அதன் பயண எச்சரிக்கை வெளிப்ப டுத்துகின்றது எனவும் தூதுவர் தெரிவித்து ள்ளார். அமெரிக்க பிரஜைகளை பாதுகாக்க வேண்டியது எங்களின் கடமை எனக் குறிப் பிட்டுள்ள அவர் இதன் காரணமாகவே நாங்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள் ளோம் என தெரிவித்துள்ளார்.

பாடசாலை செல்லும் சில அமெரிக்க சிறுவர்களை அமெரிக்காவிற்கு திருப்பி அனுப்பினோம்.

குறிப்பிட்ட காலத்திற்கு எச்சரிக்கையுடன் இருப்பதற்காக இதனை செய்தோம் என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பிரஜைகள் தங்கள் பயணங் கள் குறித்த சிறந்த முடிவுகளை எடுப்பதற் கான அண்மைய தகவல்களை வழங்கு வதற்காக நாங்கள் எச்சரிக்கையை அவ்வப் போது புதுப்பிக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எங்களுடைய தற்போதைய பயண எச்சரிக்கை இலங்கைக்கு வருவதை அமெரிக்கர்கள் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கின்றது எனவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணைகளில் அமெரிக்கா இலங்கை க்கு முழுமையான உதவிகளை வழங்கி வருகின்றது. இலங்கையுடன் பாதுகாப்பு புலனாய்வு விவகாரங்களில் அமெரிக்கா ஒத்துழைக்க விரும்புகின்றது எனவும் தூதுவர் தெரிவித்துள்ளார். (இ)

## பயங்கரவாதிகளுடன் எனக்கு கொடுக்கல்-வாங்கல் இல்லை

### அமைச்சர் பதவியிலிருந்து விலகவும் தயார்-ராஜித

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய இஸ்லாமிய அடிப்படை வாதிகள் சம்பந்தமான விசாரணைகளுக்கு தான் தடையேற்படுத்துவதாக பரவி வரும் செய்திகள் முற்றிலும் பொய்யானவை என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்து ள்ளார்.

பயங்கரவாதிகளுடன் தனக்கு எந்தக் கொடுக்கல் வாங்கல்களும் கிடையாது எனவும், தான் பயங்கரவாதத்திற்கு உதவும் நபர் அல்ல எனவும் ராஜித தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்டத்தின் பேருவளை தொகுதியில் பாதுகாப்புத் தரப்பினர் நடத்தும் விசாரணைகளுக்கு தான் அழுத்தம் கொடுப் பதாக வெளியாகியுள்ள செய்தி குறித்து பதிலளித்துள்ள அமைச்சர் ராஜித, .

தான் எந்த அழுத்தங்களையும் கொடுக்க வில்லை எனவும், இலங்கையிலுள்ள எந்த பொலிஸ் நிலையத்திலும் இது தொடர்பாக கேட்டறிந்து கொள்ளுமாறும் தெரிவித்துள் ளார்.

எந்த வகையிலும் குற்றவாளிகளுக்காக தான் குரல் கொடுப்பதில்லை எனவும், குற்றவாளிகளைக் காப்பாற்ற தான் அழுத்தங் களை கொடுத்ததாக உறுதிப்படுத்தினால், அமைச்சர் பதவியில் இருந்து விலகவும் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித் துள்ளார்.

அளுத்கமை தர்கா நகரில் விசாரணை களை ஆரம்பிக்குமாறு தானே பொலிஸாரு க்கு ஆலோசனை வழங்கியதாகவும், பேருவளையிலுள்ள தனது வீட்டுக்கு அரு கில் வீடொன்றை வாடகைக்கு பெற வந்த சந்தேகத்திற்கிடமான நபர்கள் பற்றி தானே பொலிஸாருக்கு அறிவித்ததாகவும் ராஜித மேலும் தெரிவித்துள்ளார். (இ)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்.திரு.சுப்பிரமணியம் இராஜேந்திரன்

அன்னை மடியில் 08 02 1939

ஆண்டவன் அடியில் 08 04 2019



2019 ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் **அமரர்.திரு.சுப்பிரமணியம் இராஜேந்திரன்** அவர்களது மறைவுச்செய்தி கேட்டு வந்து பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கு, அத்துடன் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் தொலைபேசி மூலம் இரங் கலை தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரம் வழங்கியும், மலர் வளையம் அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கிறோம்.

அன்னாரின் அந்தியேஷ்டி கிரியைகள் (06.05.2019) நாளை திங்கட்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். மறுநாள் 07.05.2019 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன் புடன் அழைக்கின்றோம்.

**(தயவுகூர்ந்து இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்)**

வல்லியானந்தம் வீதி,
[illegible]லை வடக்கு,
கரவெட்டி.

(சி-6291)

குடும்பத்தினர்.
( 021 205 6336)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராஜ்ஜியம் இழந்தது ராஜஸ்தான்

## டில்லி மீண்டும் வெற்றி

ஐ.பி.எல்., தொடரின் 'பிளே ஓப்' வாய்ப்பை இழந்து வெளியேறியது ராஜஸ்தான். நேற்று தனது கடைசி போட்டியில் டில்லியிடம் 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது.

இந்தியாவில் 12வது சீசன் ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. நேற்று டில்லியில் நடந்த லீக் போட்டியில் ராஜஸ்தான், டில்லி அணிகள் தங்களது கடைசி போட்டியில் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணியின் அணித் தலைவர் ரகானே, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**இஷாந்த் அபாரம்**

ராஜஸ்தான் அணிக்கு ரகானே, லிவிங்ஸ்டோன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. மறுபக்கம் இஷாந்த் சர்மா வேகத்தில் மிரட்டினார். இவரிடம் முதலில் ரகானே (2) சிக்கினார். இஷாந்த் பந்தில் சிக்சர், பவுண் டரி அடித்து தொல்லைக் கொடுத்த லிவிங்ஸ்டோன் (14) அவரிடமே போல்டானார். சஞ்சு சாம்சன் (5) வீணாக ரன் அவுட்டானார். மீண்டும் மிரட்டிய இஷாந்த், லாம்ரோரை (8) வெளியேற்றினார்.

**பராக் அரைசதம்**

போட்டியின் 12வது ஓவரை அமித் மிஸ்ரா வீசினார். 2, 3வது பந்துகளில் ஸ்ரேயாஸ் கோபால் (12), பின்னி (0) வீழ்ந்தனர். 4வது பந்தில் கௌதம் கொடுத்த 'பிடியை' போல்ட் கோட்டை விட, 'ஹட்ரிக்' வாய்ப்பு நழுவியது. துணிச்சல் ஆட்டத்தை வெளிப்படுத்திய ரியான் பராக், ஐ.பி.எல்., அரங்கில் குறைந்த வயதில் அரைச்சதம் அடித்த வீரர் ஆனார். இவர் 50 ஓட்டங்களுடன் கிளம்பினார்.

20 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. வருண் ஆரோன் (3) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**ரிஷாப் கலக்கல்**

எளிய இலக்கைத் துரத்திய டில்லி அணிக்கு தவான் (16), பிரித்வி ஷா (8) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் 15 ஓட்டங்கள் எடுக்க, இங்ராம் (12), ரூதர்போர்ட் (11) அணியை கைவிட்டனர். பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரிஷாப் பண்ட், இந்த சீசனில் 3ஆவது அரைச்சதம் எட்டினார்.

16.1 ஓவர்களில் டில்லி அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்ள் எடுத்து வெற்றி பெற்றது. ரிஷாப் பண்ட் (53), அக்சர் படேல் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**17 வயது, 175 நாள்**

ஐ.பி.எல்., அரங்கில் குறைந்த வயதில் அரைச்சதம் அடித்த வீரர் ஆனார் ரியான் பராக் (17 வயது, 175 நாள்). இதற்கு முன் சஞ்சு சாம்சன் (18 வயது, 169 நாள், 2013), பிரித்வி ஷா (18 வயது, 169 நாள், 2018) முதல் இடத்தில் இருந்தனர். ரிஷாப் பண்ட் (18, 212 நாள், 2016), சுப்மன் கில் (18, 237 நாள், 2018) 4, 5வதாக உள்ளனர்.



அரைச்சதம் அடித்த ராஜஸ்தானின் பராக்




## 'ஆஸி., நாயகன்' அலன்



அவுஸ்திரேலிய அணியின் அசைக்க முடியாத அணித் தலைவராக விளங்கியவர் அலன் போர்டர் (வயது -63). கடந்த 1987ல் நடந்த உலக கிண்ணத் தொடர், இவரது வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது.

கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களை எடுத்தது.

அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 17 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்த நேரத்தில் பதட்டப்படாத அலன் போர்டர் அருமையான வியூகம் அமைத்தார். இதற்கேற்ப மெக்டர்மட் துல்லியமாக பந்துவீச, இங்கிலாந்து அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது. அவுஸ்திரேலிய அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்று, முதல்முறையாக் உலக கிண்ணத்தை வென்றது.

இதற்கு பின் 1992ல் நடந்த உலக கிண்ணத் தொடரில் போர்டரின் அவுஸ்திரேலிய அணி பெரிதாக சாதிக்கவில்லை. இவர், 25 உலக கிண்ணப் போட்டிகளில் 452 ஓட்., எடுத்தார். இதில் 16 போட்டிகளில் அணித் தலைவராகச் செயற்பட்டு 11ல் வெற்றி தேடிக் கொடுத்தார். இவர் 273 ஒரு நாள் போட்டிகளில் 6,524 ஓட்., 73 விக்கெட் எடுத்தார்.

டெஸ்ட் அரங்கில் ஓட்ட மழை பொழிந்த இவர், எண்ணற்ற சாதனைகளை படைத்தார். 156 டெஸ்டில் 11,174 ஓட்டங்கள், 156 'பிடி", 39 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். கடந்த 1982ல் 'விஸ்டன்" சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்ட இவர், 1994ல் ஓய்வு பெற்றார். கடந்த 2009ல் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த வீரர்களுக்கான 'ஹோல் ஒப் பேம்' பட்டியலில் இடம் பிடித்தார்.

**சக்லைன் சாதனை**

உலக கிண்ண வரலாற்றில் தொடர்ந்து மூன்று விக்கெட் வீழ்த்தி 'ஹட்ரிக்' சாதனை படைத்த முதல் சுழற்பந்து வீச்சாளர் பாகிஸ்தானின் சக்லைன் முஷ்டாக். இவர் 1999ல் லண்டன், ஓவலில் நடந்த சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் ஹென்ரி ஒலங்கா, அடம் ஹக்கில், மபாங்வா ஆகியோரை வெளியேற்றி, இச்சாதனையை நிகழ்த்தினார்.

## இந்தியன் பிறிமியர் லீக் - 2019 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| Q1 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 13 | 9 | 4 | 18 |
| Q2 | டில்லி கப்பிட்டல்ஸ் | 14 | 9 | 5 | 18 |
| Q3 | மும்பை இந்தியன்ஸ் | 13 | 8 | 5 | 16 |
| 4 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 14 | 6 | 8 | 12 |
| 5 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 13 | 6 | 7 | 12 |
| 6 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 14 | 5 | 8 | 11 |
| 7 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 14 | 5 | 8 | 11 |
| 8 | கிங்ஸ் XI பஞ்சாப் | 13 | 5 | 8 | 10 |


## அறிவித்தல்

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு அருகில் செல்லும் சென்.பற்றிக்ஸ் வீதி மற்றும் மத்தியூஸ் வீதி என்பனவற்றின் பகுதிகளைப் பாடசாலை நாட்களில் காலை 7.00 மணி முதல் 8.00 மணிவரையும் பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணிவரையும் ஒரு வழிப்பாதையாக மட்டும் பயன்படுத்த முடியும் என்பதை வீதிப் பாவனையாளருக்கு இத்தால் அறியத் தருகின்றேன். இவ்வீதி ஒழுங்கினை கிரமமாகக். கடைப்பிடித்து ஒத்துழைக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.




மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

(C-6295)



## மரண அறிவித்தல்



திருமதி
**அன்னம்மா கைலாயநாதன்**

முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் நவாலி வீதி, ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா கைலாயநாதன் அவர்கள் நேற்று (04.05.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கைலாயநாதனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் சகோதரியும் காலஞ்சென்ற நாகபூஷணியின் மைத்துனியும் இரத்தினேஸ்வரன், சிவசுப்பிரமணியம், துரைராசரத்தினம், காலஞ்சென்ற கணேசலிங்கம், காலஞ்சென்ற கணேசவேல் மற்றும் பஞ்சலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகாம்பிகை, சகுந்தலாதேவி, அம்பிகைவதனா, கனகாம்பிகை ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2019) ஞாயிற்றுக்கிழமை அவருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் ஆனைக்கோட்டை கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(8687)

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:-
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமையாள்புரத்தில் உழவியந்திரத்தை உருக்குலைத்த யாழ்தேவி புகையிரதம்





(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து நேற் றுக்காலை கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண் டிருந்த யாழ் தேவி கடுகதிப் புகையிரதம் உமை யாள்புரம் பகுதியில் உழவியந்தி ரம் ஒன்றுடன் மோதி விபத்துக்கு ள்ளாகியது. குறித்த விபத்தில் உழவியந்திரம் சேதம டைந்துள் ளதுடன் சாரதி எவ்வித காயமுமி ன்றி உயிர்தப்பியுள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியி லுள்ள தனியார் நிறுவ னம் ஒன்றின் கழிவு அகற்றலை மேற்கொண்டு வரும் இவ் உழ வியந் திரம் கழிவுகளை கொட்டி விட்டு திரும்பிச் செல்லும் போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளி நொச்சி பொலிஸார் மேற்கொ ண்டு வருகின்றனர். (இ-312)

## உழவுயந்திரத்திலிருந்து விழுந்த இளைஞன் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கைதடிப் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை வேளையில் உழவியந்திரப் பெட்டியில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞன் ஒரு வர் பெட்டியில் இருந்து தடுமாறி வீதியில் விழுந்ததில் படுகாய மடைந்துள்ளார்.

உழவியந்திரம் வீதி வளை வொன்றில் திருப்பும் வேளையில் இச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இதில் கைதடி கிழக்கைச் சேர்ந்த 32 வயது ந.கிருபாகரன் என்ற இளைஞனே தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசா லைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (5-30)


அதி கூடிய வட்டிக்கு ஈடு வைத்து மீட்க முடியாமல் உள்ள உங்களது காணிகளை மீட்க அழையுங்கள்

→ குறைந்த வட்டி
→ குறைந்த ஆவணங்கள்
→ விரைவான சேவை

070-5979286



**காணி விற்பனைக்கு**

வர்த்தலவிளான் பிள்ளையார் கோயிலடி தெல்லிப்பழையில் 80 பரப்பு காணி, போக்குவரத்து வசதி உண்டு. (C.T.B போக்கு வரத்து வசதி)

தோட்டமும் செய்யலாம், தொழிற்சாலையும் போடலாம்.

தொடர்பு:- 077 948 2731 (8663)


# மரண அறிவித்தல்

## அமரர் திருமதி சோதிநாதன் தவச்செல்வி



குண்டங்கரை களபூமி காரைநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிநாதன் தவச்செல்வி அவர்கள் 03.05.2019 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் சோதிநாதனின் அன்பு மனைவியும், சண்முகம்-தவமலர் தம்பதியரின் அன்பு மகளும், சுப்பிரமணியம்-அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகளும், ஹர்சன், கம்சிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியபாமா , சிவசுப்பிரமணியம் (மணி ஐயப்பா நகைப்பூங்கா, கிளிநொச்சி), பத்மராணி, திருச்சற் குணேஸ்வரன் (VST Industrics) முருகவேள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரஞ்சோதி (உணவு ஒப்பந்தகாரர்), நந்தினி, பரமலிங்கம் (சிவா உணவகம், ஓமந்தை), கனகமலர், ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், தவறஜனி, சிவலிங்கம், ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ஜெகன், சிந்துஜா, லிங்கன் ஆகியோரின் சகலியும், மயூரி, தயாளன், சோபிதன், சத்தீபன், றஜிதன், ஐதுசா ஆகியோரின் சிறியதாயாரும், சுகன்யா, சுமிதா, சிவறாஜி, சுகிர்தா, ஜனனி, பிரதீபன், தர்மினி, வர்மிலன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.05.2019 இன்று காலை 7.30 மணியளவில் அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு தில்லை மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**திக்கரை வீதி, குண்டங்கரை, களபூமி, காரைநகர்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(சி-6284)

# கண்ணீர் அஞ்சலி

## சுப்பிரமணியம் பத்மலிங்கம்



பிறப்பு:- 03.02.1943 இறப்பு:- 03.05.2019

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி பாமினி ஜனார்த்தன் அவர்களின் அன்புத் தந்தையார் **சுப்பிரமணியம் பத்மலிங்கம்** அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்க ளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(8671)

ஆசிரியர், ஊழியர் நலன்புரிக்கழகம்
யா/ மல்லாகம் மகா வித்தியாலயம், மல்லாகம்.

# இராசி பலன்

**05.05.2019**
சித்திரை 22, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பிரதமை பின்னிரவு 4.47 மணிவரை
பரணி பிற்பகல் 5.08 மணிவரை
சுபநேரம் 8.56-10.26 மணிவரை
இராகுகாலம் 4.26-5.56 மணிவரை
கார்த்திகை விரதம்,
சித்திரைப் பரணி

கிரகநிலை: சுக் | புத, சூரி, சந் | செவ் | ராகு | சனி, குரு, கேது

சந்திராஷ்டமம்: சுவாதி, விசாகம்

**மீனம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.

**மேடம்:** பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது. சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கையுடன் பணிபுரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்:** முத்தான வாய்ப்புக்கள் உங்களைத் தேடிவரும், வாக்கு மேன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு.

**கடகம்:** மனதில் நினைத்த விடயங்களை நிறைவேற்றும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**மகரம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், உடல் நலனில் கவனம் தேவை.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, எதிர்பார்ப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** சென்ற இடங்களில் சிறப்படையும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள். புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி:** நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான வெடி பொருட்கள் செயலிழப்பு



(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் புகையிரதக் கடவைக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கண்டு பிடிக்கப்பட்ட வெடிபொருட்கள் அன்றைய தினம் இரவு பாதுகாப்பாக வெடிக்க வைக்கப்பட்டுள்ளன.

சாந்திபுரம் புகையிரதக் கடவைக்கு அருகிலுள்ள பற்றைக்குள் இரண்டு பொதிகளை அவதானித்த நபர் ஒருவர் மன்னார் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் விரைந்து சென்று குறித்த இரு பொதிகளையும் பார்வையிட்டதோடு, சோதனையிட்டனர்.

இதன்போது குறித்த பொதியிலிருந்து சக்தி வாய்ந்த சி-4 வெடி மருந்துகள் 5 கிலோவிற்கு மேற்பட்டவையும் மற்றும் டெட்டனேற்றர் குச்சுகள், மின் சேமிப்பு கருவிகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சம்பவ இடத்திற்கு வந்த விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் பொலிஸாருடன் இணைந்து அப்பகுதியில் தேடுதல்களை மேற்கொண்டனர்.

இந்நிலையில் மீட்கப்பட்ட சி-4 வெடி பொருட்கள் நீதிமன்ற அனுமதியுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்குப் பின்னர் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-285)

# சாவகச்சேரியில் சட்டவிரோத சிம் அட்டைகள் போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர செருக்கல் பிள்ளையார் கேவிலில் சந்தேகத்திற்கிடமான ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோவிலில் திடீரென சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் படுத்துறங்கியுள்ளார். இதையடுத்து அப்பகுதி மக்கள் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறியப்படுத்தியுள்ளனர்.

இதனால் அப்பகுதியை சாவச்சேரி பொலிஸார் சுற்றி வளைத்து சந்தேகத்திற்கிடமான முறையில் செருக்கல் பிள்ளையார் கோவிலில் படுத்துறங்கிய ஒருவரை கைது செய்துள்ளனர். இதன்போது குறித்த நபரிடம் இருந்த சட்டவிரோத மூன்று சிம் அட்டைகள் மற்றும் போலி நாணயத்தாள்களையும் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5-30)

# விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை இன்று பதிவு மேற்கொள்ளுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்ட வடமாகாண விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களையும் வெளிமாகாணத்தைப் சேர்ந்த தமிழ் மொழி மூலம் பயிற்றுவிப்பாளர்களையும் பதிவு செய்யுமாறு அவர் அறிவித்துள்ளார்.

பதிவு செய்யப்பட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கு 45 நாட்கள் வதிவிடப் பயிற்சி வழங்கப்படும். இப் பயிற்சிகள் மன்னாரிலும் யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியிலும் இடம்பெறுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# திக்கம் வடிசாலைப் புனரமைப்பிற்கு அடிக்கல் நாட்டப்பட்டும் பயன் கிட்டவில்லை

## அதிகாரிகள் அசமந்தம்; உற்பத்தியாளர்கள் விசனம்

வடமராட்சி அல்வாய் திக்கம் வடிசாலைப் புனரமைப்பிற்கென ஏறக்குறைய 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டும் வினைத் திறனற்ற செயற்பாடே இடம்பெற்று வருவதாகப் பனை , தென்னை உற்பத்தியாளர் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு 09 ஆம் மாதம் அப்போதைய துறைசார் அமைச்சராக இருந்த டி.எம். சுவாமிநாதனால் குறித்த வடிசாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

எனினும் குறித்த வடிசாலையின் அபிவிருத்தி நடவடிக்கையோ உற்பத்தி நடவடிக்கையோ குறிப்பிடத்தக்க அளவிற்கு இடம்பெறவில்லை.

திக்கம் வடிசாலையை நம்பி தமது சங்கத்தில் 1500 மேற்பட்ட அங்கத்தவர்கள் அங்கம் வசித்தும் தற்போது 150 பேர் வரையில் மட்டுமே செயற்பாட்டில் உள்ளனர்.

தமது வாழ்வாதாரத்தையும் குடும்ப சூழலையும் கருத்தில் கொண்டு பலரும் வேறு தொழில் வாய்ப்பிற்கு மாறிச் செல்வதால் எதிர்காலத்தில் பனை, தென்னை உற்பத்திசார் பொருட்களை சேகரிப்பதற்கு ஊழியர்கள் இல்லாத சூழ்நிலை ஏற்படும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திற்கே உரித்தான வளத்தின் அருமையைக் கருத்தில் கொண்டு அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கோரிக்கை முன்வைத்தனர். (இ-5-30)

# மத்தியஸ்த சபை நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடைபெறும் நல்லூர் மத்தியஸ்த சபை அமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று 5 ஆம் திகதி நடைபெறாது என நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் நா.நித்தியானந்தன் அறிவித்துள்ளார். (5)

# கந்தபுராணப் படிப்பு

(கரணவாய்)

நாகர்கோவில் பூர்வீக நாக தம்பிரான் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 45 நாட்கள் இடம்பெறும். (இ-60)

# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



(சித்தன்கேணி )

சித்தன்கேணி வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினரும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தருமான ச.ஜயந்தன் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். (இ-5-17)

# அனர்த்தம், நல்லிணக்கம் தொடர்பான குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 21 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையை கருத்திற் கொண்டு இலங்கை தேசிய சர்வோதயமானது நாட்டினதும், மக்களினதும் நலனை கருத்திற் கொண்டு அனர்த்தம் மற்றும் நல்லிணக்க குழுவொன்றை உருவாக்கி வருகிறது.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல்10 மணியளவில்யாழ்மாவட்ட சர்வோதய நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் யாழ். மாவட்ட தேசோதயத் தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் உட்பட பல சமூக செயற்பாட்டாளர்கள்,பொது அமைப்புக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் 9 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அதேபோன்று எதிர்வரும் நாட்களில் பிரதேசமட்டத்தில் 8 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அத்தோடு ஒவ்வொரு பிரதேசத்திலும் 50 தொண்டர்களையும் இணைத்து அனர்த்தங்கள் ஏற்படும் இடங்களில் முப்படையினருடன்இணைந்துசேவை யாற்றும் முகமாக சர்வோதய நிறுவனம் செயற்படுத்துமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்டத்திற்கான குழுத் தலைவராக நா.தனேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய நிறுவன மண்டபத்தில் கூட்டம் நடத்துவ தாக தீர்மானம் எடுக்கப்பட்டது. (இ)

# குடும்பங்களுக்கிடையே கைகலப்பு

## இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரு குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் கணவன், மனைவி இருவரும் படுகாயமடைந்தனர். கொடிகாமம் நாவலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து மோதல் கைகலப்பாக மாறியதில் இவ் அனர்த்தம் ஏற்பட்டது. இச் சம்பவத்தில் படுகாயமடைந்த மு.ரவீந்திரன்(வயது-56),அவரது மனைவி (வயது-52) ஆகியோர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் கொடிகாமப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (10-30-114)

# தனியார் கல்வி நிறுவனங்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள்/ இயக்குநர்களை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்தில் ஒன்றுகூடுமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத் தியசீலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடமாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் தமது கல்வி நிறுவனப் பதிவை இதுவரை மேற்கொள்ளாத நிர்வாகிகள் தமது கல்வி நிறுவனம் தொடர்பான விபரங்களை மாகாணக் கல்வி அமைச்சில் அல்லது தமது கல்வி நிறுவனம் அமைத்துள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை (www.np.gov.lk) என்ற வடமாகாண இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# வரட்சி நிவாரணம் மூலமாக குடிநீர் வழங்க அனுமதி

வரட்சி நிவாரணம் மூலமாக ஆறு மாத காலத்திற்குக் குடிநீர் விநியோகிக்க சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு அனுமதி கிடைத்திருப்பதாக பிரதேசசபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார்.மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தென்மராட்சி பிரதேச செயலகத்திடம் நாம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே எதிர்வரும் பத்தாம் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு குடிநீர் விநியோகிக்க அனுமதி கிடைத்துள்ளது.

தென்மராட்சி பகுதியில் பிரதேச செயலகத்தினால் இனங்காணப்பட்டுள்ள 39பொது இடங்களுக்கும், 19 பாடசாலைகளுக்குமே வரட்சி நிவாரணம் ஊடாக குடிநீர் விநியோகிக்குமாறு பிரதேச செயலரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடம் குடிநீர் சேவை வழங்கும் போது வாகனம் பழுது, சாரதி இன்மை போன்ற பல அசௌகரியங்கள் ஏற்பட்டன.

ஆனால் இவ் வருடம் புதிய குடிநீர் பவுசர் ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது. அதனைப் பயன்படுத்தி சிறந்த சேவை ஆற்ற முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாவற்குழி முந்நூறு வீட்டுத் திட்டம்,மறவன்புலோ, அறுகுவெளி,மட்டுவில் ,தனங்கிளப்பு, வரணி உள்ளிட்ட பகுதிகளுக்கே குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனைத் தவிர நாம் ஏற்கனவே 6 பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலும் குடிநீர் சேவையை வழங்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த வரட்சி நிவாரண குடிநீர் சேவையை பத்தாம் மாதத்திற்கு பின்னரும் தொடர்ந்து நடத்துவதற்கு சபை உறுப்பினர்கள் முயற்சி எடுக்க வேண்டும். அத்துடன் குடிநீர் சேவையை வழங்கும் போது நீரின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF INDUSTRY & COMMERCE, RESETTLEMENT OF PROTRACTED DISPLACED PERSONS , CO-OPERATIVE DEVELOPMENT AND VOCATIONAL TRAINING &SKILLS DEVELOPMENT

UNIVERSITY COLLEGE OF JAFFNA

### VACANCIES

TVEC RegNo :P25/0071

Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna.

### 1. LECTURER (PROBATIONARY)IN HOSPITALITY MANAGEMENT&FOOD TECHNOLOGY

**Qualifications:**

1. A Degree with specialization in a relevant subject with First Class or Second Class (Upper Division) Honours.

OR

2. A degree with specialization in a relevant subject with Second Class (Lower Division) Honors and at least 01 year of experience in teaching /research/professional work in recognized mercantile establishment /postgraduate studies in a recognized University or Higher Education Institution;

OR

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other general degree with at least Second Class Honors,

AND

(b) A Postgraduate Degree with duration of at least 02 academic years in the relevant subject with a research component by way of thesis/dissertation;

OR

4. (a) A Degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) One year Master Degree in the relevant subject or equivalent further professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka.

AND

(c) Five (5) years professional experience after graduation or after securing professional qualification given in 4(a).

OR

5 (a) A degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by Act of parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) Eight (8) years professional and/ or teaching experience after graduation or after securing professional qualification given in 5(a)

**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure:** Through an Interview.
**Salary Scale:** U-AC 3 (IV) –2016 A Rs. 54,600 – 10 x 1,335 – 67,950 p.m. (as at 01.01.2020)

### 2. VISITING LECTURER INBUILDING SERVICES TECHNOLOGY/ CONSTRUCTION TECHNOLOGY/ FARM MACHINERY TECHNOLOGY/ COSMETOLOGY/ FOOD TECHNOLOGY/ HOSPITALITY MANAGEMENT/ MECHATRONICS TECHNOLOGY/ PRODUCTION TECHNOLOGY

**Qualifications:**
Candidates shall possess the academic qualifications required for the Category 1 Mentioned above.
**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure:** Through an Interview.
**Payment:**Rs. 600 / Hour for NVQ level 5 holders with 5 years relevant experience
Rs. 700 / Hour for NVQ level 6 holders with 5 years relevant experience
Rs. 800 / Hour for Degree holders
Rs. 1000 / Hour for Post Graduate degree holders or PhD holders

### 3. DEMONSTRATORS IN PRODUCTION TECHNOLOGY/ FOOD TECHNOLOGY/ FARM MACHINERY TECHNOLOGY/ BUILDING SERVICES TECHNOLOGY/ MECHATRONICS TECHNOLOGY/ COSMETOLOGY

**Qualification:**
- A Degree in the relevant field.
- NVQ Level 5 qualification in the relevant field will be considered for Cosmetology.

**Age Limit**- 22 – 45yrs
**Selection Procedure:** Through an Interview.
**Salary Scale:** U-AC-1 - Rs.40,920p.m (Fixed)(as at 01.01.2020)

### 4. ASSISTANT LIBRARIAN

**Qualifications:**
(a) External:
Bachelor's Degree and at least 01 year of experience in library / research/ professional work in a recognized mercantile establishment or /postgraduate studies in a recognize University or Higher Educational Institution.

(b) Internal:
Employees who have completed a minimum of five (05) years satisfactory service in the relevant field in a post in Grade I of the "Management Assistant" Category.
**Age Limit** - 22 – 45yrs
**Selection Procedure:** Written competitive Examination &Structured Interview.
**Salary Scale** :U-EX 1 (II)2016 A - Rs.50,625 -3x 1,125-54,000(EB) 55335; 12x1,335- 71,355p.m.(01.01.2020)

**Nature of Appointment:**
- ✓ Assistant Librarian - Permanent with entitlement to EPF & ETF
- ✓ Demonstrator (Contract -1Yr) –withentitlement to EPF & ETF
- ✓ Lecturer (Prob) - Permanent with entitlement to EPF & ETF
  Entitled for Academic Allowance of 25%
- ❖ Other Government Approved Allowances.
- ❖ Salary scales for permanent positions are fully operative w.e.f 2020

- **Specimen Application** form and **further details** are available atwww.ucj.ac.lk.Duly filled applications forms indicating academic and professional qualifications shall besent to **"Assistant Registrar, University College of Jaffna,No 29, Brown Road, Kokuvil, Jaffna"** by Registered post on or before **24th May 2019**.
- Desired **post applied** should be indicated clearly on the top left hand corner of the envelope.
- Applicants from Higher Education Institutions, Government Departments and Government Corporations should apply through the Heads of such Institutions. Applications which do not conform to this requirement will be rejected. Such applicants are strongly advised to submit an **advance copy** to the address given above.
- Only short listed applicants will be called for the interview.

**Assistant Registrar**
**University College of Jaffna**

05.05.2019 (C-6279)



## வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் - 20.05.2019 திங்கட்கிழமை

வியாபார நிலையங்களுக்கான இடம் வழங்கல்

**வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் 20.05.2019 திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. பொங்கல் உற்சவகாலத்தில் உணவு சார்ந்த வியாபாரம் செய்வதற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும். வடமாகாணத்தை வதிவிடமாகக் கொண்ட வியாபாரிகளுக்கு மட்டும் வியாபார நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படும். வியாபார நிலையங்களை அமைக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டோருக்கு மட்டும் வியாபார நிலையங்களை அமைப்பதற்கு இடங்கள் வழங்கப்படும்.**

**விண்ணப்ப முடிவுத்திகதி 11.05.2019 சனிக்கிழமை, அனுமதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கான இடங்கள் 15.05.2019 புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 18.05.2019 சனிக்கிழமை பி.ப. 5.00 மணிவரை வழங்கப்படும்.**

மு.குகதாசன்
தலைவர் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன்
ஆலய பரிபாலன சபை.

(C-6285)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் விஷேட அறிவித்தல்



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் என்ற எமது ஆலயத்தின் பெயரில் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ ஸ்தாபன ரீதியான கட்டடங்களோ, அமைப்புக்களோ, முகவர்களோ எவரும் இல்லை என்பதை சகல மக்களுக்கும் இவ் விளம்பரத்தின் மூலம் பகிரங்கப்படுத்துகின்றோம். அவ்வாறு யாராவது செயற்படுவதையோ, அமைப்பு ரீதியாகவோ, தனியாகவோ, இயங்குவதையோ, நாம் வேதனையுடன் ஆட்சேபிக்கின்றோம். அவ்வாறு யாராவது செயற்பட்டால் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிர்ப்பந்தம் ஆலய நிர்வாகத்திற்கு ஏற்படும் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

இதேபோல், இவ்வாலயத்தில் தினசரி அன்னதானம் வழங்கும் பணியை நீண்டகாலமாக ஆலய நிர்வாகமே அடியார்களின் மனமுவந்த உதவியோடு எவ்வித தளர்வுமின்றி செய்துவருகின்றது. இங்கு நடைபெற்று வரும் தினசரி அன்னதான பணிக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தை தவிர வேறு எவருக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. நிர்வாகமே முழுப்பொறுப்புக்கும் உரியது. பொறுப்புக் கூறலுக்கும் உரியது என்பதை அனைவருக்கும் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாய தேவைப்பாடு எமக்கு ஏற்பட்டுள்ளதால் அதனையும் தெளிவுப்படுத்திக் கொள்கின்றோம். அடியார்களிடம் முறைப்பாடுகள் வருவதால் இதனை விளம்பரப்படுத்த வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெயரால் சிலர் திருவிழாக் காலங்களிலும் விசேட தினங்களிலும் கிராமங்கள் தோறும் சென்று பணமும் பொருளும் வசூல் செய்து வருவதாகவும் அறிகின்றோம். எமது ஆலயத்தின் பெயரில் நிதியோ பொருளோ சேகரிப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அடியார்கள் தாமாகவே விரும்பி முன்வந்து பங்களிப்புச் செய்வதை மட்டுமே நாமும் விரும்புகின்றோம், ஏற்கின்றோம்.

"நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு நிதியுதவி செய்ய விரும்பும் அடியார்கள் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் வங்கிக் கணக்குகளுக்கோ அன்றி "பொருளாளர் அறங்காவலர் சபை, நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு, ஸ்ரீலங்கா" என்னும் முகவரிக்கு நேரடியாகவே அனுப்பி வைக்கலாம் என்பதை அறியத்தருவதோடு வங்கி மூலமாகப் பணத்தினை அனுப்புவோர் அது பற்றிய விபரத்தினை எமக்கு அறியத் தரும் பட்சத்தில் நிதிக்குரிய பற்றுச்சீட்டினையும் அம்பாளின் பிரசாதத்தையும் அனுப்பி வைக்க எமக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென்பதனையும் அறியத்தருகின்றோம்.

### வங்கிக் கணக்கு விபரம்

- ➢ க/கு இல 012426285-01 வர்த்தக வங்கி,- பெற்றா, கொழும்பு
- ➢ க/கு இல 1060012330 வர்த்தக வங்கி - வேலணை
- ➢ க/கு இல 007687860 இலங்கை வங்கி - வேலணை

ஆலயத்திற்கு, அன்பர்கள் ஏதாவது செலுத்த விரும்பும் இடத்து, ஆலய அறங்காவலர் சபையினருடன் நேரடியாகத் தொடர்புகொண்டு, உரிய தகவல்களைப் பெற்று அதன் பிரகாரம் செயற்படுமாறு, அனைத்து அன்புள்ளங்களையும் தயவன்புடன் வேண்டி நிற்கின்றோம். தயவுசெய்து எமது ஆலயத் தொடர்புகள் எதுவும் இல்லாதவர்கள் எவரிடமும், ஏமாற்றம் அடைய வேண்டாம் எனவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம். அம்பிகையின் அருளாசிகள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைப்பதாக.

**நேரடித் தொடர்புக்குரிய தொலைபேசி இலக்கங்கள்**
**021 321 3024, 021 321 3025, 021 320 7785**

(C-6283)

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்துக்குள் வெடிபொருட்களுடன் 20 வாகனங்கள் நுழைவு

## பீதியடைய வேண்டாம் - இராணுவம்

(கொழும்பு)

வெடிபொருட்களுடன் 20 வாகனங்கள் வடக்கு மாகாணத்துக்குள் நுழைந்துள்ளதாக வெளியாகின்ற தகவல்கள் குறித்து யாரும் பீதியடைய வேண்டியதில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.



வெடிபொருட்களுடன் 20 வாகனங்கள் நுழைந்துள்ளதாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில், வவுனியாவில் நான்கு சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.


அத்துடன், சந்தேகத்துக்குரிய வாகனங்களின் பதிவு இலக்கங்கள் அடங்கிய பிரசுரங்களும் வெளியிடப்பட்டிருந்தன. இந்த நிலையில், கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து,

"வடக்கிற்குள் வெடிபொருட்களுடன் 20 வாகனங்கள் நுழைந்துள்ளதாக வெளியான அறிக்கைகளுடன் நாங்கள் இணங்கவில்லை.

எல்லா பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதால், இதுகுறித்து யாரும் பீதியடைய வேண்டாம்"

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களையடுத்து நாடு முழுவதும் நடத்தப்பட்டு வரும் தேடுதல்களில் முப்படைகளையும் சேர்ந்த 15 ஆயிரம் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், இராணுவத்தைச் சேர்ந்த 10 ஆயிரம் படையினர் இந்தத் தேடுதல்களில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (இ)




கேலிச்சித்திரம்

# குண்டைப்பொருத்தி விட்டு தப்பிச்சென்ற சஹ்ரான்!

## புலனாய்வு அமைப்புக்கள் சந்தேகம்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிம், ஷங்ரி-லா விடுதி குண்டுவெடிப்பில் உயிரிழந்தமை குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ள புலனாய்வு அமைப்புக்கள், அவன் உயிருடன் இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.**

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவன் சஹ்ரான், ஷங்ரி-லா விடுதி தற்கொலைக் குண்டுவெடிப்பில் உயிரிழந்தானா? என்பது தொடர்பாக, புலனாய்வு அமைப்புக்கள் இன்னமும் சந்தேகம் கொண்டுள்ளன.

இந்தத் தாக்குதலுக்காக தற்கொலைக் குண்டுதாரி ஒருவனுடன் சஹ்ரான் ஷங்ரி-லா விடுதிக்கு வந்தான் என்றும், ஆனால், சஹ்ரான் குண்டைவெடிக்க வைத்து தற்கொலை செய்து கொள்ளவில்லை என்றும் அவன், நேரக் கணிப்புக் குண்டைப் பொருத்தி விட்டு, அல்லது தொலைக்கட்டுப்பாட்டு கருவி மூலம் குண்டை வெடிக்கச் செய்து விட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

உயிரிழந்த தற்கொலைக் குண்டுதாரியின் படத்துக்கும் சஹ்ரானின் படத்துக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை உறுதி செய்வதற்கு மரபணுச் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.



தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பை நிறுவிய சஹ்ரான், ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின் ஆதரவைப் பெற்று, தற்கொலைக் குண்டுதாரிகளுக்குப் பயிற்சிகளையளிக்க கடுமையாக உழைத்திருந்தான்.

அவன், தனது அமைப்பின் இரண்டாவது தலைவனாக யாரையும் பெயரிடவில்லை என்றும் அறியப்படுகிறது.

தற்கொலைக் குண்டுதாரியாக அவன் சாவைத் தழுவியிருந்தால், அவனது அமைப்பின் செயற்பாடுகள் சாத்தியமற்றதாகி விடும்.

எனவே தான், சஹ்ரான் இன்னமும் உயிருடன் இருக்கலாம் என்று புலனாய்வு அமைப்புக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

சஹ்ரான் மறைவாக இருந்து கொண்டு தீவிரவாதச் செயல்களில் அல்லது ஏனைய வழிகளில் தாக்குதல்களில் ஈடுபடக் கூடும் என்றும் புலனாய்வு அமைப்புக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன. (இ)

# வடக்கில் இராணுவ பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோரவில்லை

## மாவை சேனாதிராசா மறுப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களையடுத்து வடக்கில் இராணுவப் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு தான் கோரவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.



நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு, வடக்கு-கிழக்கில் இராணுவப் பாதுகாப்பை பலப்படுத்துமாறு அரசாங்கத்திடம் தாம் கோரியதாக வெளியான செய்திகளை அவர் நிராகரித்துள்ளார்.

"ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ள, இந்தத் தாக்குதல்களில் பல தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்பதால், வடக்கு-கிழக்கில் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவுவதற்காக அனைத்துலக புலனாய்வு அதிகாரிகள் இலங்கைக்கு வர முடியும் என்றே நான் கூறியிருந்தேன்.

அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற பல நாடுகள், தீவிரவாதத்துக்கு எதிராகப் போரிடுவதற்காக தமது புலனாய்வுப் பிரிவுகளை உதவிக்கு அனுப்ப விருப்பம் வெளியிட்டுள்ளன" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் இலங்கைப் படையினர் நிலைமைகளைக் கையாளுவது திருப்தியளிக்கவில்லையா? என்று எழுப்பிய கேள்விக்கு அவர், இதுகுறித்து பதிலளிக்க காலம் தேவைப்படுவதாகக் கூறி பதிலளிக்க மறுத்துள்ளார். (இ)

# தொழிற்கல்வி தொடர்பான தேசிய கொள்கை பிரகடனம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

தேசிய கல்வி ஆணைக்குழுவின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பற்றிய தேசிய கொள்கைப் பிரகடனம் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஐ.சிறிவீர, அக்கொள்கை பிரகடனத்தை ஜனாதிபதியிடம் கையளித்ததோடு, அதன் உப தலைவர் (கொள்கைகள்) கலாநிதி பி.வி.குணவர்தன, உப தலைவர் (திட்டமிடல்) கலாநிதி பீ.ஏ. பியசிறி மற்றும் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் தயந்த விஜேசேகர உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதத்துக்காக சாகப்போவதாக கூறிய சஹ்ரான் - மனைவி பாத்திமா தகவல்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமாவும் கடுவாபிட்டிய தேவாலயத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்திய மொகமட் ஹஸ்துனின் மனைவி சாரா எனப்படும் புலஸ்தினி ராஜேந்திரனுமே ஏப்ரல் 19 ஆம் திகதி கிரிஉல்லவில் உள்ள ஆடையகத்தில் ஒன்பது வெள்ளை மேற்சட்டை மற்றும் பாவாடைகளை வாங்கியுள்ளனர்.

சாய்ந்தமருது குண்டுவெடிப்பில் காயமடைந்த நிலையில் அம்பாறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சஹ்ரானின் மனைவி பாத்திமா இதனைத் தெரிவித்துள்ளார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது மேலும் பல தகவல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

"எதிர்காலத்தில் தேவை என்பதாலேயே அதனை வாங்கியதாகவும் அந்த ஆடைகள் மற்றும் ஏனைய பொருட்கள் ஏன் வாங்கப்பட்டன என்று பின்னர் தெரியவரும் என்றும் சாரா என்னிடம் கூறினார்.

எதற்காக வெள்ளை ஆடைகள் வாங்கப்பட்டன என்பது சாராவுக்கு மட்டும் தான் தெரியும்" என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் சாரா, ஏப்ரல் 26 ஆம் திகதி சாய்ந்தமருது குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டு விட்டார்.

மதத்துக்காக உயிரைக் கொடுக்கப் போவதாக தனது கணவன் சஹ்ரான் கூறினார் என்றும் எனினும் அது தற்கொலைத் தாக்குதலாக இருக்கும் என்று தனக்குத் தெரியாது என்றும் பாத்திமா தெரிவித்துள்ளார்.

கடைசியாக ஏப்ரல் 19 ஆம் திகதி சஹ்ரானைப் பார்த்ததாகவும் அன்று சம்மாந்துறைக்குத் திரும்பும் போதே வெள்ளை ஆடைகளை வாங்கியதாகவும் அவர் கூறியுள்ளார்.

"ஒரு பையில் சஹ்ரான் என்னிடம் பணத்தைக் கொடுத்தார். அந்தப் பையில் எவ்வளவு பணம் இருந்தது என்று எனக்குத் தெரியாது. அந்தப் பையில் இருந்து எடுத்த பணத்தில் தான், சம்மாந்துறைக்குச் சென்ற வாகன கட்டணத்தைக் கொடுத்ததுடன், 29 ஆயிரம் ரூபாவுக்கு உடைகளையும் வாங்கியிருந்தேன்" என்றும் பாத்திமா தெரிவித்துள்ளார்.

குண்டுவெடித்த வீட்டில் இருந்து 9 இலட்சம் ரூபாவைக் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தான், வத்தளை, கொள்ளுப்பிட்டி, கல்கிஸை, பாணந்துறை, கட்டான என பல்வேறு இடங்களில் வசித்ததாகவும் ஏப்ரல் 20 ஆம் திகதி தொடக்கம் 26 திகதி வரை நிந்தவூரிலுள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்ததாகவும் பாத்திமா தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தேடுதல் நடத்தும் என்ற அச்சத்தில் ஏப்ரல் 26 ஆம் திகதி அந்த வீட்டிலிருந்து வெளியேறி, வான் ஒன்றில் சஹ்ரானின் இரண்டு சகோதரர்கள், சகோதரி, அவரது கணவன், பெற்றோர் மற்றும் குழந்தைகளுடன் சாய்ந்தமருது வந்ததாகவும் அங்கு வந்து சற்று நேரத்தில் குண்டு வெடிப்பு இடம்பெற்றதாகவும் அவர் விசாரணைகளில் தெரிவித்துள்ளார். (இ)

## மத்ரஸாக்கள் கல்வியமைச்சின் கீழ்

# அனைத்து தௌஹீத் ஜமாத் பள்ளிகளையும் மூடுங்கள்

## தயாசிறி மீண்டும் வலியுறுத்து



(கொழும்பு)

மக்களைக் கொன்று குவித்து விட்டு சஹ்ரான் சொர்க்கத்திற்கு சென்றுள்ள நிலையில் அவரது மனைவியை பார்ப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.


இவ்வாறு செயற்படுபவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்காமையால் அரசாங்கம் மீது பேராயர் போன்றவர்கள் சந்தேகத்துடன் பார்க்கின்றார்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

அரச நிர்வாக கட்டமைப்பிற்குள்ளும் இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்கள் செயற்பட்டுள்ளன. ஆகவே அனைத்து மத்ரஸா பாடசாலைகளையும் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வந்து கண்காணிப்பதோடு நாடளாவிய ரீதியில் காணப்படும் தௌஹீத் ஜமாத் பள்ளிவாசல்களையும் மூடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இஸ்லாம் மத அமைச்சு என்றில்லாது அனைத்து மதங்களையும் ஒரு அமைச்சின் கீழ் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு - 10, டாலி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே தயாசிறி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சுமந்திரன் பாரதூரமான கருத்து

## எதிராக சட்ட நடவடிக்கை–தினேஷ்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் கருத்துக்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் சிறுபான்மையினரை உரிய முறையில் கவனிக்காத காரணத்தால் இவ்வாறான தீவிரவாதத் தாக்குதல்கள் இடம்பெறுவதாக சுமந்திரன் எம்.பி.வெளியிட்டுள்ள கருத்து பாரதூரமானது.

இந்தக் கூற்று முறுகல் நிலைமைகளை மேலும் உக்கிரப்படுத்தக்கூடியவை. எனவே, சுமந்திரனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்கள் மற்றும் அவர்களது தலைவர்கள் தாக்குதலுக்கான காரணங்களை வெளிப்படுத்தியுள்ள நிலையில், சுமந்திரன் பாரதூரமான கருத்துக்களை வெளியிட்டு வருவது ஆபத்தானது எனவும் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (இ)

# பரிசளிப்பு விழா பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோயில்) ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட 35 ஆவது சைவசமய அறிவுப்போட்டி, விளையாட்டுப்போட்டி என்பவற்றில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. பரிசளிப்பு விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (இ-102)


## பணிப்பெண்கள் தேவை

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையல் வேலைகள் செய்வதற்கு நல்லூர் ஆனைப்பந்தி ஆகிய இடங்களில் தங்கி நிற்பதற்கும் வந்து போவதற்கும் இரு பணிப்பெண்கள் தேவை.

தொடர்புகளுக்கு
[illegible]

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1959 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 34<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L,அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/9625 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/9667 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: 62 ½ செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Diploma, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்,உள்நாடு<br>தொ.இ: B/9626 | பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்:MBBS, MRS Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, அரச,தனியார் உயர் உத்தியோகம்/வெளிநாடு<br>தொ.இ: G/9675 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 29 ½ செவ் 7 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: BA, HNDE. அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்,உள்நாடு<br>தொ.இ: B/9627 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 31<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.Sc IT(BCA),ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி,அரசதொழில்/வெளிநாடு<br>தொ.இ: G/9676 |
| பிறப்பு: 1987 கிறிஸ்தவம்<br>உயரம்: 169cm<br>தகைமை/தொழில்: BBA,HNDA, வங்கி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில், வங்கி,கிறிஸ்தவம் மட்டும் உள்நாடு<br>தொ.இ: B/9628 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 60 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:B.Sc(QS),வெளிநாடு<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுPRமட்டும். கிறிஸ்தவ சமயமும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/9677 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் பயங்கரவாதம் அத்திபாரமிட கூட்டமைப்பே வாய்ப்புக்களை வழங்கியது

## இப்போது முதலைக் கண்ணீர் வடிப்பதாக கருணா காட்டம்

## குண்டுத் தாக்குதல், பாரியளவு வெடிபொருட்கள் மீட்பு குறித்து பூரண விசாரணைகளை முன்னெடுக்கவும் வலியுறுத்து



(கல்லடி)

இலங்கையில் பெருமளவான வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றன. இவை பாரிய சேதங்களை ஏற்படுத்தக்கூடிய வெடிபொருட்கள், இவை இலங்கைக்கு எவ்வாறு கொண்டுவரப்பட்டன, இதற்கான நிதி எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பான பூரண விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இன்றைய சூழ்நிலையில் அரசியல் வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரமான சூழ்நிலையை முடிவுக்கு கொண்டுவர முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பொன்றை விநாயகமூர்த்தி முரளிதரன் நடத்தினார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் உயிரிழந்துள்ளவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் வேதனையையும் தெரிவிப்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் என நாங்கள் கடந்த காலத்தில் வெளிப்படையாகவே தெரிவித்திருந்த நிலையிலும் அதனை யாரும் கருத்தில்கொள்ளாத நிலையிலேயே இவ்வாறான குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. சர்வதேச பயங்கரவாதத்திற்குள் இலங்கையும் உள்வாங்கப்பட்டு இவ்வாறான கொடூரமான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

புதிதாக பதவியேற்ற அரசாங்கம் இந்த நாட்டில் புலனாய்வுக் கட்டமைப்பினை முற்றுமுழுதாக பலவீனமடையச் செய்துள்ளது. அதன் காரணமாகவே இலகுவில் குண்டுத்தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இராணுவ புலனாய்வுக் கட்டமைப்பு என்பது மிகவும் வலுவானது. ஆனால் நல்லாட்சியென்று கூறிக்கொண்டு பல படைபுலனாய்வுத்துறை அதிகாரிகளை கைதுசெய்து பல விடயங்களை தடைசெய்தனர். முற்றுமுழுதாக புலனாய்வு இயங்காத காரணத்தாலேயே இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்திலேயே இந்த பயங்கரவாத தாக்குதலுக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. காத்தான்குடியை மையப்படுத்தி இயங்கிய பள்ளிவாசல் ஊடாக இனவாதம் வெளிப்படுத்தப்பட்டு தொடராக மதவாதம் ஊட்டப்பட்டு பயங்கரவாத செயலாக வடிவம் எடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த தாக்குதலின் பின்னர் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். கிழக்கில் இந்த பயங்கரவாதம் அத்திபாரமிடுவதற்கு அவர்களும் ஒரு காரணமாகும். கிழக்கு மாகாண முஸ்லிம் அரசியல்வாதிகள் மேலோங்குவதற்கான வாய்ப்புகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வழங்கியது. கிழக்கு மாகாண சபையிலும் அவர்களிடம் ஆட்சி அதிகாரங்களை வழங்கி அவர்களை மேலோங்கச்செய்யும் நடவடிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே செய்தது.

கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் இந்தத் தாக்குதலுக்கு பின்பாவது இதனை உணர்ந்து செயற்பட வேண்டும். பல விடயங்களில் கிழக்கில் பல பிரச்சினைகளை தமிழ் மக்கள் எதிர்நோக்கி வந்தனர். தமிழர்களின் வளங்கள் அபகரிக்கப்பட்டன.

மட்டக்களப்பு பல்கலைக்கழகம் என்னும் பெயரில் அமைக்கப்பட்ட அரபுக்கல்லூரி பல பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது. அரசாங்க அனுமதியைப்பெற்றுள்ளபோதிலும் அங்கு நடைபெறவுள்ள பாடங்கள் சிந்திக்க வேண்டிய விடயங்களாகும். முஸ்லிம் சட்டங்கள் தொடர் பாகவும் முஸ்லிம் மதவாதம் தொடர்பான பாடங்களையும் கற்பிப்பதற்கு அனுமதி எடுக் கப்பட்டுள்ளது.

இன்று ஏற்பட்டுள்ள இந்தப் பயங்கரவாத சூழ்நிலையை முறியடிப்பதற்கு என்னாலான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு தயாராகவிருக்கின்றேன். நாங்கள் இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு கடுமையாக உழைத்துள்ளோம். அந்த அமைதியை சீர்குலைக்கும் வகையில் செயற்படுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத்தில் ஏதிலிகள் போல் செயற்பட்டு வருகின்றனர். இதுபோன்ற விடயங்களுக்கு குரல் கொடுப்பதற்கே அவர்கள் அச்சமடைகின்றனர்.

சுமந்திரன் இதனை கோத்தபாய, மகிந்த திட்டமிட்டு செய்ததாக கூறுகின்றார். இவ்வாறான மடமைத்தனமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமானால் கிழக்கிலும் வடக்கிலும் மீண்டும் குண்டுவெடிப்பதற்கான வாய்ப்புக்கள்தான் உள்ளன. இதுபோன்ற விடயங்களில் பாதுகாப்பு தரப்பினருக்கு ஒத்துழைத்து இது போன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டக்களப்பில் இழப்பீடு வழங்கல்





(ஏறாவூர்)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் இழப்பீடு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தாக்குதலில் 29 பேர் உயிரிழந்ததாகவும் 67 பேர் காயம் அடைந்துள்ளதாகவும் மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தது. இழப்பீடுகள் வழங்குவது தொடர்பாக மரணமடைந்த 27 பேருக்கு அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் 27 மில்லியன் ரூபா மொத்தமாக வழங்கப்பட்டது. அத்துடன் காயமடைந்த 67 பேர்களில் மருத்துவ சான்றிதழ்களை சமர்ப்பித்த 35 பேருக்கு அவர்களது அங்கவீன சதவீதத்தின் அடிப்படையிலும் அவர்களது வருமான இழப்பீட்டின் அடிப்படையிலும் ஒருவருக்கு தலா ரூபா 5 இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத வகையில் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன. இக்கொடுப்பனவுகள் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சால் மேற்கொள்ளப்படுகின்றது.

இறுதிக் கொடுப்பனவுகள் இறப்புச் சான்றிதழ் மற்றும் ஏனைய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் அடிப்படையில் வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

மேலும் மட்டக்களப்பு தேவாலயத்தை புனரமைப்பதற்கு இராணுவம் மற்றும் கடற்படையினரின் உதவிகள் பெறப்பட்டதுடன் அவர்களுக்கான முற்பணக் கொடுப்பனவுகளை வழங்கி தேவாலயப் புனரமைப்புக்கான வேலைகளை வேகப்படுத்தும்படி அறிவுறுத்தப்பட்டது. மட்டக்களப்பு சீயோன் தேவாலய விஜயத்தின் போது பிரதமருடன் அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, மத்தும பண்டார மற்றும் இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரட்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார், மீள்குடியேற்ற அமைச்சின் பணிப்பாளர் திருமதி. எஸ். ஜலதீபன் மற்றும் இழப்பீட்டு அலுவலகப் பணிப்பாளர் ஆனந்த விஜயபால மற்றும் பிரதேச செயலாளர்கள் உட்பட அலுவலர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | கொடிகாமம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | .60 | 40 | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 120 | 95 |
| பச்சைமிளகாய் | 100 | 60 | 80 | 80 | 70 |
| தக்காளி | 140 | 70 | 120 | 120 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 160 | 80 | 120 |
| கோவா | 80 | 70 | 60 | 80 | 50 |
| கரட் | 80 | .80 | 100 | 120 | 50 |
| பூசணி | 50 | 50 | 40 | 40 | 30 |
| புடோல் | 60 | 80 | 80 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 70-150 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 70 | 80 | 65 |
| பாகற்காய் | 160 | 160 | 160 | 120 | '120 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 100 | 40 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 | 80 | 70 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 120 | 70 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 120 | 40 |
| கறிமிளகாய் | 120 | 70 | 100 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 120 | 120 | 100 |
| போஞ்சி | 180 | 340 | 250 | 400 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | — | 50 | 20 |
| கீரை-1பிடி | 40 | 40 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 260 | 250 | 280 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 10-40 | 30-50 | 35 |
| இராசவள்ளி | 140 | 160 | 150 | 150 | 100 |
| வெங்காயப்பூ | 200 | 300 | — | — | — |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 100 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 50 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 100 | 60 | — | 110 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் பிரதமரிடம் கேள்வி எழுப்பப்படும்

## ஜே.வி.பியின் விஜித ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பப்படும் என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்துள்ளார்.



அடுத்த வாரம் இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளின் போதே இவ்வாறு கேள்வி எழுப்பப்படவுள்ளதாக விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் கேள்வி எழுப்புவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில் இந்தக் கேள்விகள் எழுப்பப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் நாடாளுமன்ற விவாதமொன்றை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# காத்தான்குடியில் ஆயுதங்கள் மீட்பு





(காத்தான்குடி)

காத்தான்குடி பிரதேசத்தில் நேற்றுக் காலை தேடுதலில் ஈடுபட்ட படையினர் கத்தி, வாள் உள்ளிட்ட ஆயுதங்கள் சிலவற்றை மீட்டுள்ளனர்.

காத்தான்குடி பெரிய மீரா பள்ளிவாசல் மையவாடியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த ஆயுதங்களைப் படையினர் மீட்டுள்ளனர்.

கல்லடி 231 ஆவது படைப்பிரிவினரே குறித்த ஆயுதங்களை மீட்டுள்ளனர். (இ)

# “ஒரு தரப்பின் முறையற்ற செயற்பாடே இஸ்லாத்தின் புனிதத் தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது” - சுசில்

(கொழும்பு)

பள்ளிவாசல்களிலிருந்து மீட்கப்படும் ஆயுதங்கள் தொடர்பில் பாரிய சந்தேகங்கள் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

ஆயுதங்கள் பள்ளிவாசலின் சுற்றுச்சூழலை துப்புரவு செய்ய வைத்திருப்பதாக முஸ்லிம் மத அலுவல்கள் அமைச்சர் குறிப்பிடுவது பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்துவதாகவும் தீவிரவாதத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் சுசில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் பள்ளிவாசல்களில் பொருத்தமற்ற விதமாக ஆயுதங்களை வைத்திருந்தமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. மத மற்றும் அமைதி வழி போதனைகளை போதிக்கும் இடங்களில் ஆயுதங்களை வைத்திருப்பது மதக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டது.



இவ்வாறான செயற்பாடுகளே இன்று தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தியுள்ளது. ஒரு தரப்பின் முறையற்ற செயற்பாடுகள் இன்று இஸ்லாத்தின் புனிதத் தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளமை வருத்தத்திற்குரியது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# 2 வெளிநாட்டு கைத்துப்பாக்கிகளுடன் நாத்தாண்டிய பகுதியில் ஒருவர் கைது

(நாத்தாண்டிய)

நாத்தாண்டிய அசோகபுர பிரதேசத்தில் வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட இரண்டு கைத்துப்பாக்கிகளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

மதர வீதி, ஹெட்டிவத்த, நாத்தாண்டிய பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், மாரவில பொலிஸார் சந்தேக நபருடைய வீட்டை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சோதனை செய்தனர்.

இதன் போது, சந்தேக நபரின் வீட்டிலிருந்து இத்தாலியில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்றும் மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் ரவை ஒன்றும், ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 30 வயதுடைய குறித்த நபரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

மாரவில பொலிஸார் இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ-7)

# மியன்மாரில் நிராயுதபாணிகள் மீது இராணுவம் திடீர் துப்பாக்கிச்சூடு

## ஆறு பேர் உயிரிழப்பு

(ரங்கூன்)

மியன்மாரின் ராக்கின் மாநிலத்திலுள்ள கிராம பாடசாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பேர் மியன்மார் இராணுவத்தினரின் திடீர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளனர்.

நிராயுதபாணியாக காணப்பட்டவர்கள் மீதே இவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் இராணுவத்தினரின் ஆயுதங்களைக் கைப்பற்ற முயற்சித்த வேளையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு ராக்கின் பகுதிகளுக்குள் நுழைவதற்கு ஊடகவியலாளர்களுக்கும் நிவாரண முகவர் நிலையங்களும் தடுக்கப்பட்டுள்ளன. இதனால் குறித்த சம்பவம் தொடர்பாக உறுதிப்படுத்துவது கடினமான விடயமாகக் காணப்படுகிறது.

குறித்த கிராம பாடசாலையில் 275 பேர் விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ)

# 600 கடிதங்களை அச்சிடப் பயன்படுத்தப்பட்ட கணனி மற்றும் இயந்திரம் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

600 கடிதங்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் கணனி மற்றும் நிழற்பிரதி இயந்திரம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.


இந்த உபகரணங்கள் பொது நிறுவனங்கள் அமைச்சிலிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு எதிராகவும் இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை சீர்குலைக்கக் கூடிய கருத்துக்களையும் உள்ளடக்கிய 600 கடிதங்களுடன் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்களும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ)

# சட்டம் ஒழுங்கு அமைச்சை சரத் பொன்சேகாவுக்கு வழங்க ஜனாதிபதியை கோரவுள்ளோம்

## ஆசு மாரசிங்க தகவல்



(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் பலமான பாதுகாப்பு அவசியமாகின்றது. எனவே ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சை வழங்குமாறு நாம் கோரியுள்ளோம். நாளை திங்கட்கிழமை இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் வலியுறுத்தவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பான யோசனையில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 50 இற்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டுள்ளதாகவும் இது தேசிய பாதுகாப்புக்கான ஒரு கோரிக்கையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் படையினர் நேற்று தீவிர சோதனை!





(மன்னார்)

மன்னாரில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடன் நாளை திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகப் போகும் பாடசாலைகளை நேற்றுப் பாதுகாப்புப் படையினர் தீவிர சோதனைகளுக்குட்படுத்தினர்.

பாடசாலைகளின் இரண்டாம் தவணை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாவதை முன்னிட்டு மாணவர்களின் பாதுகாப்புக் கருதி பாடசாலைகள் கடும் பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டும் எனவும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது சம்பந்தமாக அதிபர்களுடன் கலந்தாலோசிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர்கள் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கூட்டங்கள் இடம்பெற்றன.

கடந்த மாதம் 5 ஆம் திகதி பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு மீண்டும் இரண்டாம் தவணை கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருந்தது. ஆனால் கடந்து 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு அன்று நாட்டில் எட்டு இடங்களில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதனால் குறிப்பிட்ட தினத்தில் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியாத நிலையில் நாளை மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் மன்னார் மாவட்டத்திலுள்ள 140 பாடசாலைகளிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் முன்னெடுத்துள்ளனர்.

இதற்கமைய நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலாளர்கள் பிரிவிலும் பிரதேச செயலாளர்கள் தலைமையில் அந்தந்த பிரதேச செயலங்களில் மாணவர்கள் பாதகாப்பு விடயமாக ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

இக் கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள், பாதுகாப்புப் படையினர் ஆகியோர் இதில் பங்கேற்றனர். இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை அதிபர்களுடன் பாடசாலையை தீவிர பரிசோதனைக்குட்படுத்த வேண்டும் எனத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலை நாட்களில் பாடசாலை வாயிலில் மாணவர்களின் புத்தகப்பைகள் ஆசிரியர்களால் பரிசோதிக்கப்பட வேண்டும் எனவும் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தும் சின்னம் கொண்ட கழுத்துப்பட்டி அணிந்திருக்க வேண்டும் எனவும், பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின் பாடசாலை வாயில்கள் மூடப்படும் எனவும், பாடசாலைக்குள் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் தவிர்ந்த பெற்றோரோ அல்லது வெளியாரோ அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் பாடசாலை முடிந்ததும் பாடசாலைகளில் பிரத்தியேக வகுப்புக்கள், விளையாட்டுக்கள், ஒன்றுகூடல் போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் பாடசாலைக்கு அருகாமையில் வாகனங்களை நிறுத்தாது பார்த்துக் கொள்ளும்படியும் அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

தேவையேற்படும்போது பொலிஸாரின் உதவிகளையும் நாடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மட்டில் மிகவும் கவனம் செலுத்தும்படியும் தெரியாதவர்களிடம் பிள்ளைகள் பொருட்கள் ஒன்றையும் பெற்றுக் கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தும்படியும் கேட்கப்பட்டுள்ளனர். (இ-285)

# 150 முஸ்லிம் கல்வி நிறுவனங்களில் பர்தா,முகத்திரை அணியத்தடை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கும் விதமாக பல்வேறு அதிரடி உத்தரவுகளை அரசு பிறப்பித்துள்ளது.

இதில் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி முஸ்லிம் பெண்கள் பர்தா அணியத் தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தடை உத்தரவு மக்களை எளிமையாக அடையாளம் காணவும், பாதுகாப்புக் கருதியும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி கேரளாவில் பாலக்காட்டைச் சேர்ந்த ரியாஸ் அபுபக்கர் என்பவனும் காசர்கோட்டைச் சேர்ந்த அபுபக்கர் சித்திக், அகமது அராபத் ஆகியோர் சஹ்ரான் ஹாசீம் பேச்சை கேட்டு பயங்கரவாதிகளாக மாறியிருப்பது தேசிய புலனாய்வு அமைப்பின் தொடர் கண்காணிப்பு மூலம் தெரிய வந்தது.

29 வயது ரியாஸ் கடந்த ஓராண்டுக்கும் மேலாக தேசிய தௌஹீத் ஜமாத் பயங்கரவாதி சஹ்ரான் ஹாசீம் பேச்சுக்களை கேட்டு வந்ததாகவும் அந்தப் பேச்சின் அடிப்படையில் கேரளாவில் மனித வெடிகுண்டாக மாறி தற்கொலைத் தாக்குதல் நடத்தவும் திட்டமிட்டு இருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

கேரளாவிலுள்ள முக்கிய நகரில் அவன் தற்கொலைத் தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டி இருந்ததை ஒப்புக் கொண்டான்.

இந்நிலையில் கேரளா மாநிலத்திலுள்ள முஸ்லிம் கல்வி குழுமத்திற்குச் சொந்தமான 10 தொழில்முறை கல்லூரிகள், 18 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 12 உயர்நிலைப் பள்ளிகள், மற்றும் 36 சிபிஎஸ்இ பள்ளிகள் உட்பட 150 கல்வி நிறுவனங்களில் பாதுகாப்பு காரணமாக வளாகத்திற்குள் பர்தா போன்ற எவ்வித முகத்திரைகளும் அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது.


இது குறித்து கல்விக் குழுமம் வெளியிட்ட அறிக்கையில், 'முஸ்லிம் கல்வி குழுமத்தில் பயிலும் மாணவர்கள் யாரும் எவ்வித முகத்திரைகளையும் வளாகத்திற்குள் அணியக் கூடாது.

இது நடப்பு ஆண்டின் (2019-2020) புதிய விதிமுறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம், கல்வி நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் உடை நெறிகளில் மாற்றம் செய்யலாம் எனக் கூறியதன்படியே இந்த முடிவு பாதுகாப்புக் கருதி எடுக்கப்பட்டுள்ளது.

'எவ்வித கலாசாரத்தையும் பாதிக்க இந்த விதிமுறை அறிமுகப்படுத்தப்படவில்லை' என விளக்கமளித்துள்ளது. (இ)

# மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

கடந்த 21 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள், அதனைத் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக நாட்டு மக்கள் பல்வேறு இன்னல்களுக்குள்ளான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக பாடசாலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படாத நிலையில் நாளை 6 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பான பாடசாலைகளுக்கான பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கின்ற நடவடிக்கைகள் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக பொலிஸார், இராணுவத்தினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து அமைத்து வருகின்றனர்.



அந்தவகையில் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் அமைக்கப்பட்ட குழுக்களுடைய பிரதிநிதிகள் மற்றும் கிராம மட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களுடைய பிரதிநிதிகள், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பொது அமைப்புக்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து நேற்று மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பு தொடர்பான விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் நாளை 6 ஆம் திகதி பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்பதாக பாடசாலைகளினுடைய பாதுகாப்புக்களை குறித்த குழுக்கள் உறுதிப்படுத்தி அதனை சரியான முறையில் ஆரம்பிப்பது தொடர்பாகவும் பாடசாலை இடம்பெறுகின்ற காலப்பகுதிகளிலே பாதுகாப்பு வழங்குவது தொடர்பாகவும் கிராமங்களில் மற்றும் பொதுமக்கள் கூடுகின்ற இடங்களின் பாதுகாப்புக்களைப் பலப்படுத்துவது, பாதுகாப்பு தொடர்பான சவால்களுக்கு முகம் கொடுப்பது, பொலிஸார் மற்றும் ஏனைய தரப்புக்களைத் தொடர்பு கொண்டு ஏற்படுகின்ற சிக்கல் நிலைமைகளைப் போக்கும் வழிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக பொலிஸாருக்கும் சிவில் அமைப்புக்களுக்கும் இடையிலான இந்தக் கலந்துரையாடலின்போது விரிவாக ஆராயப்பட்டது. (இ-281)

## 136 பயணிகளுடன் ஆற்றில் விழுந்த விமானம்



136 பயணிகளுடன் சென்ற போயிங் 737 விமானம் ஆற்றில் நிலை தடுமாறி விழுந்துள்ளது.

கியூபாவில் இருந்து 136 பயணிகள், 7 ஊழியர்களுடன் புறப்பட்ட போயிங் 737 விமானம் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள ஜாக்சன்வில் என்ற இடத்திலுள்ள விமான நிலையத்தில் தரையிறக்கும் போது ஓடுபாதையின் இறுதியில் இருந்த செயிண்ட் ஜான் ஆற்றில் நிலை தடுமாறி விழுந்துள்ளது.

அமெரிக்க நேரப்படி நேற்று முன்தினம் இரவு 9.40 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இது குறித்து ஜாக்சன்வில் மேயர் தனது டுவிட்டர் பக்கத்தில், விமானம் தண்ணீரில் மூழ்கவில்லை. பயணிகள் அனைவரும் உயிருடன் இருக்கிறார்கள். இந்த விபத்தில் 21 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

அவர்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அனைவரும் நலமாக இருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும் உன் உழைப்பால் நீ எண்ணியது உன்னை வந்து சேரும். நீ நீயாக இரு.
- டாக்டர் ஏபிஜே.அப்துல் கலாம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முன்னாள் புலிப் போராளிகளை நிம்மதியாக வாழ விடுங்கள்

யுத்தம் நின்று போனாலும் முன்னாள் புலிப் போராளிகளின் வாழ்வியல் என்பது அச்சம் நிறைந்ததும் ஆபத்துமிக்கதுமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தத்துக்குப் பின்பாக; புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், மக்கள் சமூகத்துடன் இணைந்து வாழுதல் என்பதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருந்தனர்.

மண் மீட்புப் போருக்காகத் தங்களை விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைத்துக் கொண்டு இறுதிவரை தங்களால் இயன்றளவு போராடிய நிலையில், எதுவும் செய்ய முடியாது என்ற ஓர் இக்கட்டான சூழ்நிலைக்கு அவர்கள் ஆளாகினர்.

போரின் தோல்வி நிலை; போராளிகளை அவர்களின் குடும்பத்தின்பால், உறவுகளின் பால் திசை திருப்புகின்றது.

போருக்குப் பின்பாகத் தங்களின் குடும்ப உறவுகள் சந்திக்கக்கூடிய சவால்களையும் பொருளாதாரக் கஷ்டங்களையும் ஒரு கணம் சிந்தித்தபோது, புனர்வாழ்வுக்குட்பட்டு மீள வாழுதல் என்ற முடிவுக்கு அவர்கள் வருகின்றனர்.

ஒரு போராட்டத்தின் இழப்பு நிலையில், இத்தகைய முடிவுகள் விமர்சனத்துக்குரியவையல்ல.

மாறாக மானிடத்தின் அடிப்படையான உயிருடன் வாழுதல் என்ற முடிவுக்கு வருவதும் தவிர்க்ககூடியதல்ல.

இத்தகையதோர் சூழ்நிலையில் புனர்வாழ்வு பெற்று மக்கள் சமூகத்துடன் சேர்ந்து வாழுதல் என்ற கட்டத்துக்கு முன்னாள் போராளிகள் வந்தபோதுதான், அவர்கள் தங்களுக்கு இருக்கக்கூடியதும் தங்களோடு சம்பந்தமில்லாததுமான பல விடயங்களுக்குத் தாங்கள் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருப்பதை உணர்ந்தனர்.

இந்த உண்மை நிலை குறிப்பிட்ட சில விடயங்களோடு நின்றுவிடவில்லை.

மாறாக ஒவ்வொரு கால அசைவிலும் ஒவ்வொரு பிரச்சினைகளின் பின்னணியிலும் முன்னாள் போராளிகளை வலிந்து இழுத்து அவர்களைத் தொடுத்து விடுகின்ற துர்ப்பாக்கியம் நீண்டு செல்கிறது.

போர்க்களத்தில் அங்கம் இழந்து, அவயத்தைப் பறிகொடுத்து மீண்டபோதும் நிம்மதிக்கு இருக்கக்கூடிய பஞ்சத்தை அவர்கள் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை.

போராளிகளாக இருந்த காலத்தில் கிடைத்த மதிப்பு, போராளிகளாக இருந்து விடுதலைத் தீயில் ஆகுதியாகிய மாவீரர்களுக்கு வழங்கப்பட்ட கௌரவம் என்பவற்றின் அனுபவிப்பை உணர்ந்திருந்த முன்னாள் போராளிகள்; எந்த இடத்திலும் எவராலும் எதிர்மறையாகத் தாங்கள் பார்க்கப்படலாம் என்பதை முன்கூட்டியே உணர முடியவில்லை.

ஆம், அவரவர் அரசியல் இலாபத்துக்காக முன்னாள் போராளிகள் சாட்டுதல் செய்யப்படுகின்றனர்.

முன்னாள் போராளிகளால் தம் உயிருக்கு ஆபத்து என்று கூறுவோர் சில மாதங்கள் கடந்து, முன்னாள் போராளிகளுக்கும் அரச புலனாய்வுக்கும் தொடர்பு உண்டு எனக் கூறுகின்றனர்.

இது ஒருபுறமாக இருக்க, மறுபுறத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதும் முன்னாள் போராளிகளின் பட்டியல் வாசிக்கப்படுகிறது. இராணுவ அதிகாரிகள் வகுப்பெடுக்கின்றனர்.

ஆக, எது நடந்தாலும் முன்னாள் போராளிகளின் நிம்மதியோடு விளையாடுவதுதான் எங்கள் நாட்டின் வழமையாயிற்று.

# தமிழர்கள் மீது மீண்டும் துன்புறுத்தல்கள்

## செல்வம் எம்.பி.விசனம்

(வவுனியா)

நாட்டில் இடம்பெற்ற துன்பியல நிகழ்வுகளுக்கு காரணமானவர்களை இனம் காணுவதை விடுத்து தமிழர்கள் மீது தொடர்ச்சியாக துன்புறுத்தல்களையும் இயல்பு வாழ்வைச் சிதைக்கும் செயற்பாட்டையும் பாதுகாப்பு தரப்பு கட்டவிழ்த்துவிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுடன் இவற்றை வன்மையாகக் கண்டிப்பதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்பல்கலைக்கழகமாணவர்கள் கைது செய்யப்பட்டமையையும் அவர்களிடம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் விசாரணை நடத்த உள்ளமையையும் கண்டித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்பல்கலைக்கழகமாணவர்கள் இருவர் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையை காரணமாக வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அங்குள்ள உணவகத்தை நடத்தியவரும் கைது செய்யப்பட்டுள்ளார். அதற்கும் அப்பால் அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வைத்து விசாரணை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

கடந்த 30 வருட ஆயு தப் போர் தமிழர் தரப்பில் இருந்து நிறைவுக்கு வந்துள்ள நிலையில் தற்போது உலக பயங்கரவாதத்தின் பிடிக்குள் இலங்கை சிக்கியுள்ளது. இதற்கு சில இஸ்லாமியர்கள் துணைபோயிருக்கும் நிலையில் அதற்கு உடந்தையானவர்களையும் இவ்வாறான நிலைக்கு அனுசரணை வழங்கியவர்களையும் இனம கண்டு முழுமையாக கைது செய்வதை விடுத்து தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக தற்போதும் போலியான குற்றச்சாட்டுக்களையும் திட்டமிட்ட கைதுகளையும் தமிழர்கள் மீது தொடர்ந்தும் கட்டவிழ்த்து விடுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

அண்மையில் நாட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களால் தமிழ் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு காரணமான இஸ்லாமிய தீவிரவாதிகளையும் தீவிரவாத அமைப்புகளையும் கண்காணித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியது தற்போது அரசின் முன்னுள்ள பொறுப்பாகும். எனினும் இந்தச் செயற்பாட்டில் மெத்தனப்போக்கை தற்போதும் கையாள்வதாகவே காணத் தோன்றுகின்றது.

உயரிய சபையான பாராளுமன்றத்திலும் வேறு பல இடங்களிலும் வெளிப்படையாக இரத்த ஆறு ஓடும் என அச்சுறுத்திய அரசியல்வாதிகளும் இலங்கையின் வளங்களை குடியேற்றம் என்ற பெயரில் அழித்து பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு துணைபோனவர்களும் சுதந்திரமாக நடமாடுகையில் கல்வியால் உயர்வோம் என்ற தமிழ் மக்களின் தற்போதைய இலக்கை சீர்குலைக்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர்களை கைது செய்வதானது நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையைத் திசை திருப்பும் செயற்பாடாகவே பார்க்கத் தோன்றுகின்றது.

இந்நிலையில் பல்கலைக் கழக மாணவர்கள் மீது திட்டமிட்டு செயற்படுத்தப்பட்ட நாடகத்தை முடிவுறுத்தி அவரகளை விடுதலைசெய்ய வேண்டும் எனக் கோருவதுடன் இஸ்லாமிய தீவிரவாதத்தை நாட்டில் அடியோடு ஒழிக்க அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் தமிழ் மக்களை தொடர்ச்சியாக இராணுவப் பிரசன்னத்துக்குள் வைத்திருப்பதற்கு காரணமான தற்போதைய நிலையை அரசு பயன்படுத்துவதை விடுத்து மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்ப உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வன்முறைக்கெதிராக ஒட்டுமொத்த தேசமும் குரல் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது

## டக்ளஸ் எம்.பி.சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் மக்களின் பெயரால் இலங்கையில் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ள வன்முறையை எந்த இன சமூகத்தின் பெயரால் நடத்தப்பட்டதோ அந்த இன சமூக மக்களே அதை முழுமையாக எதிர்த்துள்ளார்கள். அதுமட்டுமல்லாது இலங்கையில் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் இதை கண்டித்திருக்கிறார்கள். இந்த எதிர்ப்பலையானது இந்த வன்முறைக் கலாசாரத்தை முற்றாக அழிக்க வழிகோலும் வகையில் அமைந்துள்ளது.

இதேபோல கடந்த கால ஆயுதப்போராட்டங்கள் அழிவு யுத்தமாக மாறியதால் இலக்கற்ற வன்முறைகளை எமது மக்கள் எதிர்கொண்டிருந்த போது குறிப்பாக 1987 இல் உருவாக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னராவது எமது மக்கள் குரல் கொடுத்திருந்தால் தமிழ் மக்கள் மட்டுமல்ல இந்த நாடும் இத்தனை அவலங்களையும் துன்ப துயரங்களையும் எதிர்நோக்கியிருக்க வேண்டியிருந்திருக்காது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டையே உலுக்கிய குறித்த சம்பவத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாமும் கண்டித்துள்ளோம். பாராளுமன்றிலும் சுட்டிக்காட்டியிருந்ததுடனஅறிக்கையையும் வெளிபபடுத்தியிருந்தோம்.

இன்று நாட்டில் உருவாகியுள்ள பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டம் எதுவித எதிர்ப்பும் இன்றி பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. இதுவும் ஒரு மாற்றமாகத்தான் தெரிகின்றது.

கடந்தகால வன்முறை நடத்திய வடுக்கள் இன்னும் தீரவில்லை. அதற்கான பரிகாரங்களும் இன்னும் வழங்கப்படவில்லை. அந்தவகையில் மீண்டும் ஒரு வன்முறையா? என்பதை கடந்தகால வன்முறைகள் எமது மக்களை வெகுவாக பாதித்திருக்கின்றது. அதுவே இந்த பயங்கரவாதத்திற்கான ஒருமித்த எதிர்ப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது என நம்புகின்றேன்.

கடந்த காலத்தில் வன்முறை எமது நீதியான போராட்டத்திற்கான நியாயமானது என்ற ரீதியில் அமைந்திருந்தது. ஆனாலும்ஆயுதப்போராட்டம் அழிவு யுத்தமாக மாறி வன்முறைகளை மட்டுமே எமது மக்கள் அனுபவித்துக் கொண்டிருந்த போது அதையும் நாம் எதிர்த்திருக்கின்றோம். இன்றைய வன்முறை எதிர்ப்பு மக்களிடமிருந்து அன்றும் எழுந்திருந்தால் எமது போராட்ட வழிமுறையை மாற்றி அன்றே எமது உரிமைகளை நாம் பெற்றிருக்க முடிந்திருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் டச்றோட் அச்சுவேலி பிரதேசத்திலும் வவுனியா பிரதேசத்தில் பட்டாணிச்சூர், லக்ஸபானா கிராமம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

# வவுனியாவில் ரி50 ரக துப்பாக்கியின் மகசீனுடன் தோட்டாக்கள் மீட்பு

வவுனியா மடுகந்த பகுதியில் குளத்திற்கு அருகில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த ரி56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் மகசீன் மற்றும் தோட்டாக்கள் என்பனவற்றை நேற்றுக் காலை மடுகந்தை விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை மடுகந்தை குளத்திற்கு அருகில் பட்டம் விடுவதற்காகச் சென்ற சிறுவன் ஒருவன் இப்பொருட்களை அங்கு அவதானித்துள்ளார்.

இதையடுத்து விமானப் படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு மடுகந்தை பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று பாதுகாப்பினை ஏற்படுத்தியுள்ளனர்.

பொலிஸார் விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்குச் சென்ற விஷேட அதிரடிப் படையினர் அங்கு காணப்பட்ட ரி56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் மகசீன் மற்றும் அதற்குரிய தோட்டாக்கள் என்பனவற்றை மீட்டுள்ளதுடன் அப்பகுதியில் மேலும வெடி பொருட்களைத தேடி தேடுதல் நடவடிக்கை ஒன்றையும் மேற்கொண்டனர். எனினும் சந்தேகத்திற்கிடமான வேறு எவ்விதமான பொருட்களும் அங்கு காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்லில் இருந்து வெளியேறுகிறார் டில்லி அணியின் வேகப் புயல் ரபாடா



டில்லி கேப்பிட்டல்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளரான ரபாடா முதுகு வலி காரணமாக எஞ்சிய போட்டிகளில் பங்கேற்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா, ஐ.பி.எல்.தொடரில் டில்லி அணிக்காக விளையாடி வருகிறார். இவரது அபார பந்துவீச்சின் மூலம் டில்லி அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

ரபாடா சென்னை அணிக்கு எதிரான போட்டியில் விளையாடவில்லை. இதற்குக் காரணம், உலகக்கோப்பையை கருத்தில் கொண்டு அவருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டிருக்கலாம் என கருதப்பட்ட நிலையில், முதுகு வலியால் தான் அவருக்கு ஓய்வளிக்கப்பட்டது என்று டில்லி அணி நிர்வாகம் தெரிவித்தது.

இந்நிலையில், ஐ.பி.எல்.போட்டிகளில் இருந்து ரபாடா வெளியேறுவதாக டில்லி நிர்வாகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. முதுகு வலி காரணமாகவே அவர் வெளியேறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொடரில் ரபாடா 12 ஆட்டங்களில் விளையாடி 25 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அவரது பந்துவீச்சு சராசரி 7.82 ஆகும். (க)

# நம்ம அணிக்கு ஜெர்சி ரெடி



இங்கிலாந்தில் நடக்கும் உலகக்கோப்பைக்கான இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிய ஜெர்சியை, இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான இலங்கை அணி கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது.

15 பேர் கொண்ட அணிப்பட்டியலில் அஞ்சலோ மத்யூஸ், மலிங்க ஆகிய முன்னணி வீரர்கள் இடம்பிடித்துள்ளனர். திமுத் கருணரத்ன அணித்தலைவராக செயற்பட உள்ளார்.

இந்நிலையில், உலகக்கோப்பைக்கான இலங்கை வீரர்களின் புது ஜெர்சியை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

மேலும், பயிற்சி ஆட்டத்தில் விளையாடுவதற்கான ஜெர்சியையும் வெளியிட்டுள்ளது. (க)

# தனிப்பட்ட வீரர்களை நம்பி நமது அணி இல்லை மறைமுகமாக டோனியை சாடிய சர்மா



தனிப்பட்ட வீரர்களை நம்பி நமது அணி இல்லை என்றும் அனைவரும் ஒருங்கிணைந்து விளையாடுவதே தங்களது தனித்துவம் என்றும் மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் ரோஹித் சர்மா தெரிவித்துள்ளார்.

வான்கடே மைதானத்தில் நடந்த ஐதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 'சுப்பர் ஓவர்' முறையில் அபார வெற்றி பெற்றது. அத்துடன் 'பிளே-ஒப்' சுற்றிலும் நுழைந்தது.

இந்நிலையில் தமது அணியின் நிலை குறித்து ரோஹித் சர்மா கூறுகையில்,

'போதுமான ஓட்டங்கள் குவித்து, அதன்மூலம் அனுபவம் இல்லாத துடுப்பாட்ட வரிசையை கொண்ட ஐதராபாத் அணிக்கு நெருக்கடி கொடுத்து மடக்க வேண்டும் என்ற நோக்குடன், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றதும் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தேன்.

எங்களது பந்து வீச்சாளர்கள் சிறப்பாகப் பந்து வீசுவார்கள் என்பதை அறிவேன். சென்னை அணிக்கு எதிராக இதே மைதானத்தில் 170 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்து வெற்றி பெற்றோம். இந்தத் தொடரில் நாங்கள் கடினமாக உழைத்திருக்கிறோம். அதற்குரிய பலனை அடைந்துள்ளோம்.

ஒரு ஆட்டம் மீதம் வைத்து 'பிளே-ஒப்' சுற்றை எட்டியிருப்பது நல்ல அறிகுறியாகும். பல வீரர்கள் பொறுப்பு எடுத்துக்கொண்டு விளையாடி அணியை இந்த நிலைக்கு உயர்த்தி இருக்கிறார்கள்.

எங்களது அணியைப் பொறுத்தவரை, ஒரு சில வீரர்களை மட்டும் நாங்கள் சார்ந்து இல்லை.

தனிப்பட்ட வீரர்களால் ஓரிரு ஆட்டங்களில் மட்டுமே வெற்றி தேடித்தர முடியும். ஆனால் கோப்பையை வெல்ல வேண்டும் என்று விரும்பினால், அனைவரும் ஒரு சேர தங்களது பங்களிப்பை அளிக்க வேண்டும்.

இதுதான் தற்போதைய மும்பை அணியின் தனித்துவமாகும். ஒவ்வொருவரும் தங்களது திறமையை வெளிப்படுத்தி வெற்றிக்கு உதவிட வேண்டும் என்பதே எங்களது விருப்பமாகும்' என அவர் தெரிவித்துள்ளார். (க)

# இருபது- 20 போட்டி தரவரிசை வெளியீடு

புதுப்பிக்கப்பட்ட ஐ.சி.சி இருபது-20 தரவரிசைப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தொடர்ந்து முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

கடந்த 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டில் அணிகள் பெற்ற வெற்றி-தோல்விகளின் அடிப்படையில், புதுப்பிக்கப்பட்ட ஐ.சி.சி. இருபது-20 தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் பல்வேறு மாற்றங்களுடன் அணிகளின் தரவரிசை அமைந்துள்ளது.

பாகிஸ்தான் அணி 286 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துள்ளது. இரண்டாவது இடத்தில் தென்னாபிரிக்கா உள்ளது. இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய அணிகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

5 ஆவது இடத்தில் இருந்த தென்னாபிரிக்கா அணி, 2 ஆவது இடத்திற்கு முன்னேறியது. ஆனால், இந்திய அணி 5 ஆவது இடத்திற்கு சரிந்துள்ளது. இலங்கை அணி 7 ஆவது இடத்தையும், ஆப்கானிஸ்தான் அணி 8 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

மேற்கிந்திய தீவுகள் அணி 9 ஆவது இடத்தில் உள்ளது. நேபாளம் அணி 14 ஆவது இடத்தில் 11 ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளது. நமிபியா 20 ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளது. (க)

# வீரர்களிடமிருந்து நல்ல விளைச்சல் பெற கோபப்பட வேண்டுமென்றால் அதை செய்வேன்




பந்துவீச்சாளர்களும் பீல்டர்களும் செய்தது சரியில்லை என்பதால் தான் அவர்களை திட்டியதாக கொல்கத்தா அணித்தலைவர் தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார்.

மொஹாலியில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல்.லீக் போட்டியில் கொல்கத்தா அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் பஞ்சாப் அணி துடுப்பாட்டம் செய்த போது, முதலாவது இடைவேளை வழங்கப்பட்டது.

அப்போது கொல்கத்தா அணித் தலைவர் தினேஷ் கார்த்திக், தனது அணி வீரர்களை அழைத்து கோபமாக பேசினார். அதிலும் குறிப்பாக சுனில் நரேன், உத்தப்பா ஆகியோரிடம் கடுமையாகப் பேசிவிட்டு பீல்டிங்குக்கு அனுப்பினார்.

போட்டி முடிந்ததும் தினேஷ் கார்த்திக் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது களத்தில் வீரர்களை திட்டியது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த தினேஷ் கார்த்திக் கூறுகையில்,

'ஆம், நான் வீரர்களிடம் கடுமையாகத்தான் பேசினேன். கடந்த சில நாட்களாக கடுமையாகத்தான் நடக்கிறார்கள். பந்து வீச்சாளர்களும் பீல்டர்களும் நடந்து கொண்ட முறை சரியில்லை. எனக்குப் பிடிக்கவும் இல்லை.

அந்த நேரத்தில் வீரர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிய நான் நினைத்து அவ்வாறு பேசினேன். நான் கோபப்பட்டு பேசியதை யாரும் அரிதாகவே பார்த்திருப்பார்கள். எங்கள் வீரர்களிடம் இருந்து நல்லவிதமான உழைப்பு கிடைக்க, முடிவு கிடைக்க கோபம் அவசியம் என்றால் அதையும் செய்ய வேண்டியது தான்' என தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத எதி...

பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதில் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட ஒன்றிணைந்த எதிரணியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஊடகங்களுக்கு அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது.

அத்துடன், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கும் பாதகமாக அமையவுள்ளது.

அவர்களின் போராட்டங்களை கட்டுப்படுத்தும் வகையில் இந்தச் சட்டமூலம் அமைவதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தி, அது கொண்டுவரப்படுவதை தடுக்கும் பொறுப்பு எதிர்க்கட்சிக்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## தேசிய தௌஹீத்...

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய தௌஹீத் ஜமாத். யாழ். மாவட்டம் என்ற பெயரிடப்பட்ட இந்தக் கடிதம் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இது முஸ்லிம் நாடு. கிறிஸ்தவர்களுக்கு இங்கு இடமில்லை" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடிதம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## பயங்கரவாதிகள்...

இந்திய ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு நேற்று வழங்கிய செய்தியிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பால் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் 250 பேருக்கும் மேல் உயிரிழந்தனர். அவர்களில் 42 பேர் வெளிநாட்டவர்கள்.

இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களை ஏற்கெனவே அடையாளம் கண்டுள்ளோம். அவர்களை இப்போது கைது செய்துள்ளோம். எனினும் 25 தொடக்கம் 30 பேர் வரையிலானவர்களே வெளியில் உள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் புலனாய்வு உதவிகளை அமெரிக்காவின் எப்.பி.ஐ உள்ளிட்ட 8 நாடுகளின் புலனாய்வுத் துறையினர் வழங்குகின்றனர். (ம-3)

## வருட இறுதியில்...

இந்தியா ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு நேற்று வழங்கிய செய்தியிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தாக்குதலால் ஜனாதிபதித் தேர்தல் ஒருபோதும் ஒத்திவைக்கப்படாது. அதனை நவம்பர் 10 அல்லது டிசெம்பர் 10ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார். (ம-3)

## தமிழ் இளைஞர்...

அத்துடன், கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக நிபந்தனையின்றி விடுவிக்குமாறும், எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் சுமுகமான முறையில் நடைபெறுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துமாறும் அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் சிலரின் படங்களையும் விடுதலைப்புலிகள் சம்பந்தமான ஆவணங்கள் சிலவற்றை வைத்திருந்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டு கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ் பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் விக்னேஸ்வரன், எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் சுமுகமான முறையில் நடைபெறுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு நேற்று சனிக்கிழமை அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கும் விக்னேஸ்வரன், பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடராதிருக்கும் வகையில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் அவர்களை கைது செய்யும் வகையில் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கலாம் என்று பொது மக்கள் அஞ்சுவதாகவும் சாதாரண சட்டத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தால் அவர்களுக்கு பிணை வழங்கப்படலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த நிலையில் அவசரகால தடை சட்டம் இல்லாமல் செய்யப்பட்டபின்னர், குற்றங்களாகக் காணப்படாத விடயங்களும் செயற்பாடுகளும், தற்போது உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களின் காரணமாக மீண்டும் அவசர கால நிலைமை கொண்டுவரப்பட்டு அவை குற்றங்களாகக் காணப்படும் நிலைமை உருவாகி இருப்பதாகவும் விக்னேஸ்வரன் தனது கடிதத்தில் எடுத்துக்கூறி இருக்கின்றார்.

அத்துடன், மீண்டும் அவசரகால நிலைமை கொண்டுவரப்பட்டதன் ஒரே நோக்கம், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன்பாக நிறுத்துவதற்காகவே என்று இருக்கும்போது, இதற்கு எந்த சம்பந்தமும் இல்லாத தமிழ் மாணவர்களைக் கைது செய்திருப்பது முறையற்றது என்றும் விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களின் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட படங்கள் நீண்ட காலமாகவே அங்கு இருப்பதைத் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள விக்னேஸ்வரன், அவசரகால பிரகடனத்துக்கு முன்பாக இந்தப் படங்களை வைத்திருப்பது, குற்றங்களாகக் கணிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு விகாராதிபதி மங்களராமய தேரர் பிரபாகரனை புகழ்ந்து பேசியமையையும், இதேமாதிரியான கருத்துக்களை அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்கள் வெளியிட்டுள்ளமையையும், பிரபாகரனின் நிர்வாகத்தை புகழ்ந்து பேசிய திருமதி விஜயகலா மகேஸ்வரன் தற்போது அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகிப்பதையும் எடுத்துக்காட்டியுள்ள விக்னேஸ்வரன், இவற்றின் அடிப்படையில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது வேண்டுமென்று செய்யப்பட்ட நடவடிக்கை போல் தோன்றுகின்றது என்றும் அதனால் அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

முஸ்லிம் மக்களின் வீடுகளையும் ஏனைய அவர்களின் இடங்களையும் சோதனையிடுவதற்கு உத்தரவிடப்பட்ட இராணுவம் ஏன் யாழ் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்தது என்று கேள்வி எழுப்பி இருக்கும் விக்னேஸ்வரன், குறிப்பாக கலைப்பீட மாணவர்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த வருடங்களில் வட மாகாண சபை முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் நிகழ்வுகளை ஒழுங்குசெய்தபோது இந்த மாணவர்களே பெரும் உதவிகளைச் செய்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாண்டு மே 18 ஆம் திகதி நடைபெற இருக்கும் முள்ளிவாய்க்கால் பத்தாம் வருட நினைவு கூரல் நிகழ்வுகளைக் குழப்பும் வகையிலும் இராணுவ பிரசன்னத்தை வடக்கில் தொடர்ந்து வைத்திருப்பதற்கும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளினால் உருவாக்கப்பட்டுள்ள துரதிர்ஷ்டவசமான தற்போதைய சூழ்நிலையை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றதா என்றும் விக்னேஸ்வரன் தனது கடிதத்தில் கேள்வி எழுப்பி இருக்கிறார்.

2013ம் ஆண்டு வட மாகாண சபை முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டது முதல் இராணுவத்தை வடக்கில் இருந்து வெளியேற்றுமாறு தாம் வலியுறுத்தி வருவதாக மீண்டும் இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அவர், 1960களில் இராணுவத்தைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளும், உயர் கல்வியில் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டு தமிழ் மாணவர்கள் பாகுபாடு காட்டப்பட்டமையும் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு வழிவகுத்தன என்றும் அதேபோல மீண்டும் இராணுவ அடக்குமுறைகளை மேற்கொண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைப் பாதிக்கச் செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ் இளைஞர்களை எழுச்சி கொள்ள இடமளித்துவிடவேண்டாம் என்றும் அவர் தனது கடிதத்தில் ஜனாதிபதிக்கு வலியுறுத்தி இருக்கின்றார்.

அதேவேளை, விடுதலைப்புலிகள் மீளெழுச்சி பெறுவது சாத்தியம் இல்லை என்றும் அவர்களினால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்றும் இராணுவ தளபதி அண்மைய காலங்களில் சுட்டிக்காட்டியுள்ளதை குறிப்பிட்டுள்ள விக்னேஸ்வரன்,

"ஒவ்வொரு சம்பவங்களுக்கும் விடுதலைப்புலிகளை காரணம் காட்டுவதை நான் விரும்பவில்லை. எப்பொழுதும் ஏதாவது நடைபெறும்போது விடுதலைப்புலிகளை அவற்றுடன் தொடர்புபடுத்துவது இலகுவானது. ஆனால் இது உண்மைக்கு வெகுதூரம் புறம்பானது என்று இராணுவ தளபதி ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளதை உதாரணம் காட்டியுள்ளார்.

ஆதலால், எந்தவித நிபந்தனைகளும் இன்றி கைது செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு மாணவர்களின் சார்பாக வேண்டிக்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## யாழ். ஜும்மா...

தேடுதல் நடவடிக்கை நேற்று சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், இதன்போது சந்தேகத்திற்கிடமான பொருட்கள் எதுவும் காணப்படவில்லை எனவும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களையடுத்து நாடளாவிய ரீதியில் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக நடைபெறும் பாதுகாப்புத் தரப்பினரின் இந்த சோதனை நடவடிக்கையின்போது, பல்வேறு ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதோடு, பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பயணிகளை காப்...

சம்பவம் ஒன்று நேற்றுச் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

வாகனம் செலுத்திக்கொண்டிருந்த போது சாரதிக்கு திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது. இருப்பினும் நிலைதடுமாறாத சாரதி வாகனத்தை வீதியோரமாக நிறுத்திவிட்டு தனது நிலைமையை பயணிகளிடம் தெரிவித்துள்ளார். உடனடியாக விரைந்து செயற்பட்ட பயணிகள் அவரை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

பின்னர் உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த 72வயதான சாரதியே இவ்வாறு தனது பயணிகளைக் காப்பாற்றியுள்ளார். (ம-30)

### வோக்கி டோக்கியுடன்

# வெளிநாட்டவர்கள் உட்பட 4பேர் சாவகச்சேரியில் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கனகம்புளியடிச் சந்திப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை மாலை காரில் வோக்கி டோக்கியுடன் (வைலஸ்) பயணித்த மூன்று வெளிநாட்டவர்கள் உட்பட நால்வர் சாவகச்சேரி பொலிஸாரால் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பாரிய கோழிப் பண்ணையில் பணியாளர்களுக்கு கட்டளைகள் பிறப்பிப்பதற்காக குறித்த வோக்கி டோக்கி பயன்படுத்தப்பட்டு வந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சாவகச்சேரி -கனகம்புளியடிச் சந்தியில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருவதுடன், வாகனங்களையும் சோதனையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-30)

# துன்னாலையில் வழிப்பறியில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் கைது

துன்னாலைப் பகுதியில் வழிப்பறியில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்களை தாம் கைது செய்துள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் மந்திகை - கலிகைச் சந்திக்கு இடைப்பட்ட துன்னாலைப் பகுதியில் வயோதிப மாது ஒருவர் தனது பேரக்குழந்தையுடன் நின்ற போது பேரக்குழந்தையை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வலுக்கட்டாயமாக பிடித்த போது அவர்களுடன் வயோதிப மாது இழுபட்ட போது அவரின் கழுத்தில் இருந்த 4 பவுண் தங்கச் சங்கிலியை வழிப்பறி கொள்ளையர்கள் அறுத்துச் சென்றனர்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றத்தடுப்பு பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி மறுநாள் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை பகுதியில் வைத்து வழிப்பறி கொள்ளைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டதுடன் அதே இடத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். (ம-60)

### சுபிரி வாசனா

திகதி 2019/05/04
சீட்டிழுப்பு இலக்கம் 1423

| எழுத்து | வெற்றி இலக்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 03 | 02 | 10 | 54 | 66 | 44 | 64 |

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 04-05-2019
சீட்டிழுப்பு இலக்கம் 537

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| V | 2 | 6 | 5 | 3 | 5 | 8 |

### கொவிசெத

திகதி 2019.05.04
சீட்டிழுப்பு இலக்கம் 2109

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| D | 46 | 67 | 76 | 80 |

### செவன

திகதி 2019/05/04
சீட்டிழுப்பு இலக்கம் 181

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| Q | 09 | 31 | 54 | 65 |

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைகள் ஆர...

களை திறக்க நடவடிக்கை எடுப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

பல்கலைக்கழகங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது சம்பந்தமாக ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறு துணை வேந்தர்களுக்கு அறிவித்துள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் மொஹறான் டி சில்வா கூறினார்.

அதன்படி அது சம்பந்தமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பது பற்றி இறுதித் தீர்மானம் எடுப்பதாக அவர் கூறினார்.

இதேவேளை பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு சிறந்த சூழல் இல்லை என்று அதிபர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதாது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் சுனில் பிரேமரத்ன கூறினார். (ம-3)

## கத்திகள் மற்றும்...

நாட்களுக்குள் பொதுமக்கள் தங்களிடமிருக்கும் இராணுவ சீருடை போன்ற ஆடைகள், கத்திகள் மற்றும் வாள்களை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சஹரானின் மைத்...

ஹாசீமின் மைத்துனர் மற்றும் அவரது உதவியாளர் ஒருவர் சவூதி அரேபியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்தியாவின் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை இந்த செய்தியினை வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் புலனாய்வு தகவலுக்கமைய குறித்த சந்தேக நபர்கள் சவூதி அரேபியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் இருவரும் மாற்று பெயர்களில் இவ்வாறு சவூதி அரேபியாவிற்கு சென்றுள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


**Chemistry**

**2019, 2020, 2021 A/L**
**தனி, குழு வகுப்புக்கள்**
**0773777502**
(8678)

**வீடு வாடகைக்கு**

நான்கு பேருக்கு உட்பட்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு இரண்டு அறை, சமையல் அறை, ஹோல், விறாந்தை, இணைந்த மலசலகூடம் ஆகியவற்றுடன் கூடிய வீடு சுண்டிக்குளியில் வாடகைக்கு உண்டு. தொடர்பு:
**021 222 5395**
(C-6262)

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**
UK - 550 */=Kg
கனடா - 900 */=Kg
ஜேர்மனி - 700 */=Kg
நெதர்லாந்து - 700 */=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-6232)
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**O/L DAY CLASS**

**பிரிவு - 2 - ஆரம்பம்**
**06.05.2019**
**திங்கள் - காலை 8.00 மணி**
Mon - Fri - 8.00am - 2.00pm
**2-ம் தவணைக்கான வகுப்புகள்**
**ஆரம்பம் - 06.05.2019 திங்கள்**
**தரம் 1 முதல் O/L வரை**
**புதிய நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 459 8440
(C-6288)


இலங்கையின் பயங்கரவாத தாக்குதலுக்கு தாமே காரணம் என ஐ.எஸ் அமைப்பு பொறுப்பேற்றுள்ள நிலையில், இந்தியாவிலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## 296 கிலோ கஞ்...

சுமார் 4 கோடி ரூபாய் பெறுமதியான 296 கிலோ கேரள கஞ்சா போதைப் பொருள் யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்கு அருகிலுள்ள வெற்றுக் காணியில் எரியூட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியில் 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் கைப்பற்றப்பட்ட இந்த கஞ்சா போதைப்பொருள்கள் குறித்த வழக்குகள் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் சான்றுப் பொருள்களான கஞ்சா போதைப் பொருளை எரியூட்டி அழிக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய நீதிமன்றப் பதிவாளரின் ஏற்பாட்டில் மேல் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் குறித்த கஞ்சா போதைப் பொருள் எரித்து அழிக்கப்பட்டது. (ம-3)

## வடக்கு பாடசா...

இவ்வாறு தெரிவித்துள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். அச்சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளால் பாடசாலைகளைத் தொடங்குதல் தொடர்பாக ஏராளமான அதிபர்கள், ஆசிரியர்களின் கருத்துக்கள் கண்டறியப்பட்டு இவ்விடயம் தொடர்பாக வடக்கு- கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதில் பாதுகாப்புப் படையினரின் சோதனை நடவடிக்கைகளால் மாணவர்களின் போக்குவரத்து, அதிபர்கள், ஆசிரியர்களின் போக்குவரத்தில் ஏற்படும் தாமதம் என்பன சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் பாடசாலைகளை காலை 8 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 2 மணிக்கு நிறைவு செய்வதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் அனுமதி வழங்கியுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக அவர்கள் தெளிவாக அறிவுறுத்தியுள்ளனர்.

அதாவது பாடசாலைகளை காலை 8 மணிக்கு ஆரம்பிக்க, பாடசாலையின் அதிபர்கள் அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும் எனக் கூறியுள்ளனர். தாம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இது பற்றி அறிவுறுத்துவதாகவும், இது ஒரு தற்காலிக ஏற்பாடாகவே இருக்கும் எனவும் அவர்கள் கூறியுள்ளதோடு குறித்த அதிபர்களின் வேண்டுகோள்கள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படும் என உறுதியளித்தனர்.

ஆகையால் இடர்பாடுகள் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள் உடனடியாக வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுமதியைப் பெற்று பாடசாலைகளை காலை 8 மணிக்கு தொடங்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (ம-3)


**வேலையாள் தேவை**

வீட்டு வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. தொடர்பு:
**0767148059**
(C-6278)

**பணியாளர்கள் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் முன்னணி மருத்துவ நிலையம் ஒன்றுக்கு பணியாளர் தேவை.
● தாதிய உதவியாளர்
● மருந்தக உதவியாளர்
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
**தொடர்பு: 0776274919**
(C-6290)

**கணித வகுப்புக்கள்**

தரம் 6 முதல் O/L வரையான கணித பாட வகுப்புக்கள் பல வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் வீடு வந்து தனியாகவோ or குழுவாகவோ Model Paper, Past Paper ஊடாக கற்பிக்கப்படும். பயிற்சிப் பரீட்சைகளும் செய்து விடப்படும். மறுபடியும் பரீட்சைக்கு தோற்றும் O/L வகுப்பு மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும்.
**0775776999**
(8668)

**வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**
WESTERN UNION **070 330 5500** WESTERN UNION
**அண்ணா பொதிகள் சேவை**
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை
(C-6233)


## பாடசாலைகள்...

ஆரம்பமாகும் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அனைத்து அரச பாடசாலைகளிலும் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் நாளை 6ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

அத்துடன், தரம் 1 தொடக்கம் 5 வரையான ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

நாட்டில் உயிர்த்த ஞாயிறன்று (ஏப்ரல் 21) நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து ஏற்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்களால் ஏப்ரல் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டிய இரண்டாம் தவணை நாளை 6ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதாகப் பொலிஸாரால் அறிவிக்கப்பட்ட பின்னரும் மீளவும் ஆரம்பப் பிரிவுகளை ஆரம்பிப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-3)



**ஐரோப்பா செல்ல அரிய வாய்ப்பு**

**Latvia Student Visa**
**Europe Senkan Visa (செங்கன்)**
குறைந்த செலவு
CTHI
T.P 077 104 1923, 021 314 6171
உப்புமடம் சந்தி, K.K.S வீதி
கோண்டாவில், யாழ்ப்பாணம்
(8658)

**தொழில் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு**

எமது Everest Lanka நிறுவனம் இறக்குமதி மற்றும் மொத்த விற்பனையில் முன்னணி வகித்து வருகின்றது. இந்நிறுவனம் தனது புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது.
● **புதிய கிளை ஆரம்பிக்கவுள்ள இடம்:** (கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா)
● **ஆரம்பிக்கவுள்ள புதிய கிளைகளுக்கு பூர்த்தி செய்யவுள்ள வெற்றிடம்:** அலுவலகர், உதவி முகாமையாளர், முகாமையாளர், களஞ்சியக் காப்பாளர்.
● **சம்பளம்:** நேர்முகத் தேர்வின் போது தீர்மானிக்கப்படும்.
**தொடர்புகளுக்கு:**
**0772986763, 0762121409**
(8630)


# மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 07 . 1950

மறைவு 03 . 05 . 2019

## நல்லையா கந்தவனம் (கவி போட்டோ - இணுவில்)

யாழ். கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா கந்தவனம் கடந்த (03.05.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - கனகம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - மிதுனேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், தவமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும், சுதனன் (முகாமையாளர் கொமர்ஷல் வங்கி, முள்ளியவளை), அனுஜன் (பிரான்ஸ்), காயத்திரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிஷாந்தி (ஆசிரியை -மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை), சிந்துஜா (பிரான்ஸ்), சுகதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அத்விகா, ஆரோன், அபிஷா, அபிநவ் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஞானசுந்தரம், கணேஸ்வரி, யோகச்செல்வன், சிவகுமாரன், ஞானப்பூங்கோதை, தெய்வநாயகி, யோகதாசன், கங்கேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும், தவஞான ஞானலக்ஷ்மி, கணேசமூர்த்தி, காலஞ்சென்ற நாகரஞ்சினி, யோகேஸ்வரி, சோதிநாதன், குமாரசாமி, ராதிகா, இளவழகன் ஆகியோரின் மைத்துனரும், சிறிதரன் அவர்களின் அன்பு அத்தானும், றஞ்சினி அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2019) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் ஊரியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சுதனன் (மகன்)
077 940 5803

(8682)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, விறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை : 30.00
Registered as a Newspaper in Srilanka
வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்
நாதம் 215
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2050 05.05.2019 தொலைபேசி : 021 222 3378




## சுற்றிவளைப்பு

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## முஸ்லிம் பல்கலைக்கழகம் முற்றுகையிடப்படவில்லை

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவமும் கல்முனை, சாய்ந்தமருதுவில் இடம்பெற்ற மோதலில் சின்னப்பிள்ளைகள் இறந்த செய்தியும் பொதுமக்கள் மத்தியில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பண்டிதர் பரமலிங்கம் கூறினார்.

பண்டிதர் கூறியதை வழிமொழிந்த விதானையார் விசுவலிங்கம் குண்டை வெடிக்கவைத்து இறந்தால் அல்லாவிடம் நேரடியாகச் செல்லமுடியும் என்றும் அங்க சொர்க்கத்தில 21 பெண்கள் தங்களுக்காகக் காத்திருக்கின்றனர் என்றும் குண்டைத் தன் உடலில் கட்டி வைத்திருந்த ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதி ஒருவர் கூறியதைக் கேட்டு நான் விறைச்சுப் போனன்.

அதிலும், தான் பெற்ற பிள்ளையை தன் மடியில் வைத்துக்கொண்டு குண்டை வெடிக்கவைப்பதென்பது... கடவுளே!

**சாத்திரியார்:** இதைத்தான் சொல்லுறது மூளைச்சலவை எண்டு. மனித மனங்களை நம்ப வைத்து அதை அடையவேணும் என்கிற வெறித்தனத்தை ஏற்படுத்த, அது நாளடைவில மனவக்கிரமாக மாறிவிடுகிறது. அத்தகையதொரு கட்டத்தில தான் இப்படியான செயல்களைச் செய்ய முடியும்.

**மூப்பர்:** 21 ஆம் நூற்றாண்டில இப்படியொரு அநியாயம் எண்டால் என்ன செய்யிறது.

**கங்காணி:** அது சரி தாக்குதல் நடத்தினது ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள். ஆனால் நேற்று முன்தினம் மே 03 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை இராணுவம் சுற்றிவளைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவரையும் செயலாளரையும் கைது செய்திருக்கினமல்லோ.

**வாத்தியார்:** எங்கட பல்கலைக்கழக வரலாற்றில இல்லாத சம்பவம் இது. விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் சண்டை நடந்த காலத்திலகூட இராணுவம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள்ள நுழையவில்லை. ஆனால் இப்ப ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதத்தை முன்வைத்து நுழைந்திருக்குது.

**சிறாப்பர்:** அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வரவேணுமெண்டு எங்கட மாவை. சேனாதிராஜா எம்.பி. கேட்டவரல்லோ. அப்ப அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் இருக்கிறபோது அதைப் பயன்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சோதனையிடலாம்தானே!

**கங்காணி:** அதெண்டால் உண்மைதான். டெங்கு எனகிற சாட்டில காணியைத் துப்புரவு செய்யிறது நடக்குதாக்கும்.

**பண்டிதர்:** தெரியாமல் தான் கேட்கிறன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் இராணுவம் சென்றது தொடர்பில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கண்டனத்தைத் தெரிவிக்குமோ.

**விதானையார்:** பண்டிதர் ஐயா இதென்ன கேள்வி. அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் இருக்கிறபோது இப்படியான சோதனை நடவடிக்கையைச் செய்யலாமெண்டு கூட்டமைப்புச் சொல்லிப்போட்டுது.

**மூப்பர்:** அப்ப வடக்கில அரசாங்கத்தின்ர பேச்சாளர்களாகவும் கூட்டமைப்புத்தான் இருக்குது போல.

**சாத்திரியார்:** தெரியாமல்தான் கேட்கிறன் கூட்டமைப்புச் சொல்லுற சட்டங்கள் அப்பவும் இருந்தது தானே. அந்த நேரத்தில இராணுவம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள்ள செல்லல்லத் தானே!

**வாத்தியார்:** சாத்திரியார் இங்க நடக்கிற நாடகத்தை ஆரும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் அம்பாறை, ஒலுவிலில முஸ்லிம் மக்களுக்கான தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குள்ள இன்னமும் இராணுவம் நுழையவும் இல்லை. தேடுதல் நடத்தவும் இல்லை.

**பண்டிதர்:** வாத்தியார், முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு இந்த அரசாங்கம் பயப்படுகிற பயத்தைப் பார்த்தால் ஆச்சரியமாகத் தான் இருக்குது.

**சிறாப்பர்:** முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்கள் இனம் சார்ந்த விடயத்தில மிகவும் உறுதியாக இருக்கினம். அதால அவர்களை ஏமாற்றவோ அவர்களை முண்டவோ இலங்கை அரசு மட்டுமல்ல தென்பகுதியில இருக்கிற எந்த அரசியல்கட்சியும் தயாராக இல்லை.

**விதானையார்:** எங்கட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தானே தமிழர்களின்ர நலன்களைப் புறந்தள்ளிப் போட்டு அரசாங்கத்தோடு சேர்ந்து தாளம் போடுது.

**கங்காணி:** ஐயோ கடவுளே! அரசியலமைப்புச் சீர்திருத்தம் வருகுது எண்டினம். இப்ப அதுவும் நிண்டு போய்ச்சுது. தமிழ் அரசியல்கைதிகளின்ர விடுதலை சாத்தியமாகும் எண்டு கூறிச்சினம். இனி அதுவும் நடக்கிற மாதிரியாக இல்லை. ஆனாலும் எங்கட மக்கள் இன்னமும் அவையள நம்புகினம் எண்டால்,

குண்டுவெடிச்சு மௌத்தாகினால் சொர்க்கத்திற்குப் போய் அங்க அழகான 21 பெண்களைத் திருமணம் செய்யலாம் எண்ட மனநிலையில தான் நாங்களும் இருக்கிறம் என்பதுதானே பொருள்.

**மூப்பர்:** வவுணதீவுச் சம்பவம் தொடர்பிலகூட எங்கட கூட்டமைப்பினர் கதைக்கல்ல.

ஆக, அமைச்சர் மனோ கணேசன் தான் அது பற்றிக் கதைத்திருக்கிறார் எண்டால், எங்கட அரசியல் நிலைமை எப்படி என்பது புரிகிறது தானே!

**சாத்திரியார்:** எங்கட கூட்டமைப்புக்கு விடுதலைப்புலிகளைப் பிடிக்காது. அதால முன்னாள் போராளிகள் தொடர்பில அரசாங்கம் என்ன குற்றச்சாட்டை முன்வைத்தாலும் அதற்குத் தலையாட்டுற நிலையில்தான் இருக்கினம்.

அதுமட்டுமல்ல, முன்னாள் போராளிகளுக்கும் புலனாய்வுத்துறைக்கும் தொடர்பு இருக்கிறது எண்ட மாதிரியான கதைகளையும் அவிட்டுவிட்டு முன்னாள் போராளிகளின்ர அர்ப்பணிப்புக்கு களங்கம் நடக்குது.

**வாத்தியார்:** முன்னாள் போராளிகளை தேர்தல் களத்தில இறங்க விடாமல் தடுக்கிறதுக்கான வழியாகவும் இது இருக்கும்.

இப்படி வாத்தியார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் தேடுதல் நடாத்தியது ஏன்?

ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் எதிரொலிப்பு இன்னமும் குறைந்தபாடில்லை.

புலனாய்வுத் தகவல்களும் வெளிநாடுகளின் எச்சரிக்கைகளும் நிலைமையை கொதிநிலையிலேயே வைத்துள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில், இருபது வாகனங்கள் பாரியகுண்டுளுடன் வடபுலத்திற்குள் நுழைந்துள்ளன என்ற செய்தி மக்களை நடுங்க வைத்துள்ளது. யாரைப் பார்த்தாலும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் போலவே தெரிகிறது.

போதாக்குறைக்கு எங்கள் இளைஞர்களும் தாடிகளுடன் நடமாடுவதால் குண்டுத்தாக்குதல் பயம் இரட்டிப்பாகிறது.

இவை ஒருபுறமிருக்க, கடந்த 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தாக்குதல்தாரிகளின் இலக்கு தமிழினத்தை நோக்கியதா? என்ற ஐயத்தை எழச் செய்துள்ளது.

இத்தகைய ஐயுறவு ஏற்படுவதை மேலும் வலியுறுத்துவதாக கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல் அமைந்துள்ளது.

அதாவது கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் சிங்கள, தமிழ் கத்தோலிக்க மக்கள் வழிபாடாற்றுவதால் அங்கு சிங்களத்திலும் தமிழிலும் வெவ்வேறு நேரங்களில் ஆராதனை இடம்பெறுவது வழக்கம்.


இதில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடந்த நேரம் தமிழில் ஆராதனை இடம்பெறும் நேரமாக இருந்துள்ளது.

எனவே இவற்றை மையப்படுத்தி தற்கொலைக் குண்டுதாரிகளின் இலக்கு தமிழ் இனமாகவே உள்ளது என்ற ஊகத்திற்கு இடம் கொடுக்கப்படுகிறது.


எதுவாயினும் கடந்த 21 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை இனம் சார்ந்து பிரித்து நோக்காமல் இலங்கை மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் எனப் பார்ப்பதுதான் பொருத்துடையது.

எனினும் நாட்டில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நாட்டின் ஆட்சியாளர்களும் படைத்தரப்பும் எவ்வாறு பார்க்கிறது என்பதுதான் இங்கு நோக்குதற்குரியது.








தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியதற்கு ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் உரிமை கோரிய போதிலும் படைத்தரப்பின் சோதனை நடவடிக்கைகளை அவதானிக்கும் போது தமிழ்ப் பகுதிகளில் இடம்பெறும் சோதனை நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக இருப்பதைக் காணமுடிகின்றது.

அதாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதலைக் காரணமாகக் கொண்டு தமிழர் பகுதிகளில் கடுமையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும் அதனோடு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் தினம் என்பவற்றை நினைவுகூருவதை தவிர்க்கக் கூடியதான ஏற்பாடுகளைச் செய்தல் என்ற அடிப்படையிலும் படைத்தரப்பின் சோதனை நடவடிக்கைகளைப் பார்க்க முடிகின்றது.

இதன் ஒரு முக்கிய அம்சமே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மீதான சுற்றிவளைப்பும் தேடுதல் நடவடிக்கையுமாகும்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் படைத்தரப்பினர் நுழைந்து தேடுதல் நடத்துவதென்பது சாத்தியமற்றதாகவே இருந்தது.

ஆகவே கடந்த 21 ஆம் திகதி நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை சோதனையிடவேண்டும் என்ற தனது இலக்கை இராணுவம் நிறைவேற்றிக் கொண்டது என்பதுதான் உண்மை.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சுற்றிவளைத்து சந்து பொந்தெல்லாம் தேடுதல் நடத்திய படையினர், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் படங்கள் பல்கலைக்கழகத்தினுள் இருந்ததாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சரி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அறை ஒன்றில் இருந்து பிரபாகரனின் புகைப்படம் கைப்பற்றப்பட்டது என்பதற்கும் ஐ.எஸ்.ஐஎஸ். தீவிரவாதத்திற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? என்றால் எதுவும் இல்லை என்பதே பதில்.

அப்படியானால், பிரபாகரனின் படத்தைக் கைப்பற்றியமையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் ஆகியோரைக் கைது செய்தமை, தியாகி திலீபனின் புகைப்படம் வைக்கப்பட்டிருந்தது என்பதற்காக யாழ். பல்கலைக்கழகத்தின் தேநீர்ச்சாலை ஒப்பந்தகாரரைக் கைது செய்தமை என்பன எதற்காக? என்ற கேள்வி ஏற்படும்.


ஆக, இஸ்லாமிய தீவிரவாதம் நடத்திய தற்கொலைக் குண்டுத்தாக்குதலைக் காரணமாகக் கொண்டு தமிழ் மக்களின் அடிப்படை நலனுக்காகக் குரல்கொடுக்கின்ற அமைப்புகளையும் கட்டிப் போடவேண்டும் என இராணுவம் முடிவு செய்துள்ளது என்ற தீர்மானத்திற்கு நாம் வரமுடியும்.

ஆக, இலங்கையில் யார் சரி தாக்குதல் நடத்தினாலும் தமிழர்களை நசுக்குதல் என்ற காரியத்தை நிறைவேற்றுவதில் படைத்தரப்பு முனைப்புக் காட்டிய வண்ணம் இருக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

**திருநீலகண்டன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேதீசன் அக்ஷிதா,
தரம் 1 ஏ, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

# அழகிய ரோஜா



புன்னகைபுரி என்ற ஊரை தயாளன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனிடம் விலை மதிக்க முடியாத ஒரு பெரிய வைரக் கல் இருந்தது. அது அவர்களது மூதாதையர் வைத்துச் சென்ற பரம்பரைச் சொத்து. அதைத் தன் நாட்டின் பெருமையாக அவன் கருதினான். இந்நிலையில் அந்த வைரக் கல்லில் தலைமுடி போல் ஒரு கீறல் விழுந்தது.

மன்னன் துடித்துப் போனான். வைரத்தின் அழகே போய் விட்டது என்று வருந்தினான். உடனே அரசன் தன் நாட்டின் நகை விற்பனையாளர்களை வரவழைத்து ஆலோசித்தான். "அவ்வளவுதான் இந்த வைரத்தை ஒன்றும் செய்வதற்கில்லை.

அது தன் மதிப்பைப் பெரும் பகுதி இழந்துவிட்டது. அது இன்னும் விரிசல் கொடுக்கும்" என்று வைர வியாபாரிகள் கூறினர். "யாராவது இந்த வைரத்தை இதன் பழைய மதிப்பிற்குக் கொண்டு வந்தால் அவருக்குத் தக்க பரிசு வழங்குவேன்" என்று அரசன் அறிவித்தான். கடைசியாக ஓர் ஏழை பொற்கொல்லன் ஒருவன் அந்த ஊரில் இருந்தான். அவனது திறமையை பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத பணக்கார நகை வியாபாரிகள் அவனை சீந்துவதே இல்லை. "அரசே இந்தக் கீறலை வைத்தே வைரத்தின் மதிப்பைப், பல மடங்கு உயர்த்த முடியும்" என்றான்.

வைரக்கல் அவனிடம் ஒப்படைக்கப்பட்டது. சில நாட்களுக்குப் பின் அந்தப் பொற்கொல்லன் ஒரு சிறிய நகைப் பேழையுடன் திரும்பி வந்தான். பேழையைத் திறந்ததும் அரசன் பிரமித்து விட்டான். வைரத்தின் மீது அழகான ரோஜா ஒன்று செதுக்கப்பட்டிருந்தது. முன்பு அரசனுக்குக் கவலை அளித்த கீறல். இப்போது ரோஜாவின் காம்பாகி இருந்தது. மகிழ்ச்சியடைந்த ராஜா அவனுக்கு பல பரிசுகள் கொடுத்ததுடன் ராணிக்கு புதுவிதமான நகைகள் பல செய்து தரும்படி ஓடர் கொடுத்தான்.

அவ்ளோ தான் சீந்துவார் இல்லாமல் இருந்த பொற்கொல்லர் ஒரே நாளில் மிகவும் பிரபலமானான். அவனிடம் ஓடர் கொடுக்க பல நகைக் கடைக்காரர்கள் "கியூ"வில் நின்றனர். பேரும் புகழுமடைந்தான் வயதான பொற்கொல்லன்.

# குடும்ப ஒற்றுமைக்கு அருளும் சோமாஸ்கந்தர்

சிவபெருமானின் அற்புதத் திருக்கோலங்களுள் உன்னத வடிவமாகத் திகழ்வது சோமாஸ்கந்த மூர்த்தி வடிவம் ஆகும். இது சிவபெருமானின் இருபத்தி ஐந்து மூர்த்தங்களில் ஒன்றாகும்.

சிவபெருமான் உடையவளோடு அமர்ந்திருக்க தாய்-தந்தை இருவர்க்கும் நடுவில் முருகப்பெருமான் சிறு குழந்தையாக வீற்றிருக்கும் திருக்கோலமே சோமாஸ்கந்தர் திருக்கோலமாகும்.

"இல்லறம் அல்லது நல்லறம் அன்று" எனும் ஔவைப் பிராட்டியின் அமுதமொழியை உலகுக்கு உணர்த்துவதாக இத்திருக்கோலம் அமைந்துள்ளது.

பெற்றவர்கள் கவனம் பிள்ளைகள் மீது இருந்தால் தான் பின்னாளில் பேர் சொல்லும் நல்ல பிள்ளைகளாக வளர்ந்து வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லவர்களாக இருப்பார்கள் என்பதையும் எடுத்துச் சொல்கிறது. தமிழ் எவ்வளவு பழைமைவாய்ந்ததோ அத்தனை பழைமையானது சிற்பக்கலை. தமிழர்களது வாழ்வோடு இணைந்து போன பல கலைகளுள் இதுவும் ஒன்று. சங்க இலக்கியங்களில் பக்கங்களிலும் காப்பிய ஏடுகளிலும் செழித்து வளர்ந்த சிற்பக்கலைக்கு நித்திய தரிசனமாகவே கல்லில் வடிவம் தந்தவர்களுள் பல்லவர்கள் முதன்மையானவர்கள். இவர்களே சோமாஸ்கந்தர் என்ற படைப்பு சிற்பத்தை



முதன்முதலில் வடித்தார்கள். பின்புவந்த சோழர்கள் பல்லவர்களின் கலைமுறையை வளப்படுத்தி கல்லில் மட்டுமல்லாமல் செம்பிலும் கலைப்படைப்புக்களை உருவாக்கி சிற்க கலையின் சிகரத்தை தொட்டார்கள். சோழர் காலத்தின் செப்பு திருமேனிகள் வார்ப்பு கலையின் வடிவழகு சாதனைகளாகும். தற்போது சில சிவாலயங்களில் காணப்படும் சோமாஸ்கந்தர் உட்பட பல செப்பு திருமேனிகள் சோழர்கள் உருவாக்கியவையே.

சிவாலயங்களில் சோமாஸ்கந்தரின் திருக்கோலம் கருவறையின் வலது புறத்தில் தனிச்சந்நிதியில் அமைந்திருப்பார்கள். சிவபெருமான் கம்பீரமாக அமர்ந்த கோலத்தில் தமது இடதுகாலை மடித்து வைத்து வலது காலை தொங்கவிட்ட கோலத்தில் காட்சியளிப்பார். இவர் அணிகலன்களுடன் பட்டாடையும் புலித்தோலும் அணிந்திருப்பார். சதுர்புஜம் கொண்ட இப்பெருமானின் மேல் இரு கரங்களில் மழுவும் மானும் ஏந்தியிருப்பார். முன் வலது திருக்கரம் அபயமுத்திரையும் முன் இடது திருக்கரம் வரதமுத்திரையும் இருக்கும். இவர் ஜடாமகுடம் மற்றும் பூரண அணிகலங்கள் அணிந்து திவ்வியமான தோற்றத்துடன் திகழ்கின்றார்.

இதேபோன்று இடதுபுறமாக அமர்ந்திருக்கும் உமாதேவியும் தமது இடது காலை தொங்கவிட்டவாறும் வலது காலை மடித்தும் எழிலுடன் காட்சி தருகின்றார். அன்னையின் வலது திருக்கரம் தாமரை மலரை ஏற்றியபடியும் இடது திருக்கலம் ஆசனத்தில் ஊன்றியபடியும் இருக்கும். இவ்வாறு தம்பதியர் திருக்கோலத்தில் இருக்கும் சிவபெருமானுக்கு இடையே கந்தன் சின்னஞ்சிறு குழந்தையாக அன்னையின் மடி மீது அமர்ந்த நிலையிலோ அல்லது நடனமாடிய நிலையிலோ காட்சியளிப்பார்.


இணையற்ற அழகையும் அருளையும் தெய்வ சாந்நித்யமும் பொங்கிப்பெருகும் எழில் வடிவமான் "சோமாஸ்கந்தர்" வடிவம் முழுவதும் சைவசமயத்தவர்க்கு பெருமைசேர்ப்பதும் இவரை வழிபடுபவர்க்கு தாலிப்பாக்கியம், மகப்பேறு, குடும்ப ஒற்றுமை, சகல பாக்கியங்களும் வீடுபேறும் கிடைக்கும் என திருக்கோவில் கல்வெட்டு வரலாற்று ஆய்வாளர்கள் உறுதியாகக் கூறுகின்றனர்.

-சிவனடியான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்த உலகத்தை அமைதிக்குக் கொண்டு வர என்ன செய்ய வேண்டும்?

கூட்டமைப்பு காலங்காலமாக விளக்கம் கொடுக்கின்றதே ஏன்?

இந்த உலகக் கிண்ணத்தில் டோனியின் பங்கு மிக அதிகம் தானே?

**நித்தியன் — யாழ்ப்பாணம்**

**இந்த உலகக் கிண்ணத்தில் டோனியின் பங்கு மிக அதிகம் தானே?**

டோனியைப் போல ஒரு மிகச் சிறந்த தலைவரை இந்திய அணி இழப்பது என்பது பெரிய இழப்பே. ஒரு தலைவன் தன் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் பணியை மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார். விமர்சனங்கள் எழும் போதெல்லாம் விஸ்வரூபம் எடுத்து இகழ்ந்த வாயால் புகழச் செய்வதில் வல்லவர் டோனி.

**யதுசன் — சாவகச்சேரி**

**முதலாவது காதல் தோல்வியில் முடிவடைந்த பின்பு இன்னொரு காதலை மனம் ஏற்கிறது இல்லையே. ஏன்?**

சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது. நல்ல மாட்டிற்கு ஒரு சூடு. நல்ல பிள்ளைக்கு ஒரு சொல்லு இது போன்ற பழமொழிகள் இதற்காகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது போல

**நேதாஜி — வதிரி**

**வவுணதீவு பொலிஸ் கொலை வழக்கில் உள்ள முன்னாள் போராளிகளுக்கு விடுதலை கிடைக்குமா?**

கிடைக்க வேண்டும் நிச்சயம் கிடைக்கும். ஆனால் தயவுசெய்து இவர்களின் விடுதலையை அரசியல் ஆக்காதீர்கள் பிளீஸ். ஒரு இனத்தின் விடிவுக்காகப் போராடி தமது வாழ்வையே தொலைத்து விட்டு நிர்க்கதியாய் நிற்கும் முன்னாள் போராளிகளின் வாழ்வில் அரசியலைப் புகுத்தி அவர்கள் வாழ்வை சீரழித்து விடாதீர்கள்.

**சுதன் — குப்பிளான்**

**கூட்டமைப்பு காலங்காலமாக விளக்கம் கொடுக்கின்றதே ஏன்?**

விளக்கம் இல்லாத தமிழினத்திற்கு விளக்கம் தருவதுதானே அவர்களின் வேலை. ஏதோ தமிழன் அ, ஆ கூடத் தெரியாத இனம் போலவும் எங்களை அவர்கள் வழிப்படுத்துவதாயும் நினைக்கிறார்கள். என்ன செய்ய பிள்ளை இல்லா வீட்டில் கிழவன் துள்ளி விளையாடினானாம் என்ற பழமொழியை நினைத்து அழுவதை விட வேறு ஏதும் இல்லை. அவ்வளவுதான்.

**திகழன் — யாக்கரு**

**புலிகள் இவ்வளவு கெட்டவர்களே இல்லை என்று சிங்கள அரசியல்வாதிகள் பாராட்டும் போது பேஸ்புக்கில் லைக் போட்டவரை அழைப்பது எதற்கு?**

அதுதான் இப்போது எமக்கும் புரியவில்லை. ஆரம்பிப்பது அ வில் என்றால் முடிப்பது ஃ இல் தானே. ஆனால் அ இல் தொடக்கி க் இல் முடித்திருக்கிறார்கள்.

**தமிழினி — பருத்தித்துறை**

**6 ஆம் திகதி பாடசாலை நடைபெறுமா?**

அண்மையில் ஒரு நண்பர் வீட்டிற்குப் போனேன். அங்கு நின்ற ஒரு வட்டு சி...பள்ளிக்கூடத்தை நடத்தலாம் தானே என்று சலித்தது அந்த வட்டு.

வியந்த நான் அவனை அழைத்து ஏன் ராஜா உனக்கு படிக்க அவ்வளவு பிடிக்குமா என்று கேட்டேன். நீங்க வேறு அங்கிள் கடுப் பேத்திட்டு அடுத்த தவணை விடுமுறையில் இதைக் கழிக்கப் போறாங்களாம் என்றவாறு சினத்துச் சீறினான் அந்தச் சின்னச் சிங்கம்.

**தர்ணிகா — கொளந்தில்**

**அவசர காலச்சட்டம் தொடருமா?**

தரமான, சிறப்பான சம்பவங்களை இனித்தான் பார்க்கப் போகிறீர்கள். இவ்வளவு நாள் பார்த்தது வெறும் ரெயிலர். இனிதான் மெயின் பிக்சரே இருக்கு. ஆட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகிவிட்டது போல. இனி என்ன கைதுகள், விசாரணைகள், விளக்கமறியல்கள். பாவம் தமிழினம்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**பிரவீன் — யாழ்ப்பாணம்**

**இந்த உலகத்தை அமைதிக்குக் கொண்டு வர என்ன செய்ய வேண்டும்?**

முதலில் மனித மனங்களில் உள்ள மதத்தை தூக்கி எறிய வேண்டும். சிவன், புத்தன், யேசு, அல்லா இவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்று கேட்டால் வானத்தை அண்ணாந்து பார்ப்போம் அல்லவா.

இவர்கள் எல்லாம் வானில் இருக்கிறார்கள் எனின் ஒன்றாய் இருக்கிறார்கள் என்பதே பொருள்.

மதம் மனிதனை மனிதனாக வாழ வைக்க உருவாகியதே தவிர மதம் பிடித்து அழிக்க அல்ல என்பதை இவ்விடத்தில் பதிவிடுகின்றோம்.

**கோகிலன் — வரணி**

**மதவாதிகளுக்கு விஞ்ஞானத்தை போதிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமல்லவா?**

விஞ்ஞானிகளுக்கு மதத்தைப் போதிப்பது தான் காலத்தின் கட்டாயம். ஏனென்றால் விஞ்ஞானம் வளர்வதற்கு முன்பே மெய்ஞ்ஞானம் கோள்கள், பூமி, வேற்றுக்கிரகம் பற்றி பல விடயங்களை சொல்லி விட்டது.

ஏன் இந்திய வம்சாவளி கல்பனாவின் விண் ஓடத்தில் விநாயகரின் சிலை இருந்தது என் பதை நினைவுபடுத்துகின்றேன்.

**ஜீபா — கரவெட்டி**

**வேதாளம் மீண்டும் முருங்கை ஏறுகின்றதே?**

என்னவென்று சொல்ல. தமிழகத்தை சூறாவளி தாக்கும் என்று இந்திய வானிலை ஆய்வாளர்கள் எதிர்வுகூறினால் அது எங்களையும் தாக்கும் என்று எம்மை நாம் திடப்படுத்தத்தானே வேண்டும்.

அதை விடுத்து அது தமிழகத்தைதானே தாக்கப் போகிறது என்று ஆ என்று இருக்க, வந்த புயல் எமக்கு ஒரு காட்டுக் காட்டிச் சென்றுவிடும். இது யாருக்குப் புரிகிறதோ இல்லையோ... வேண்டாம் கைதுகள் தொடர்கிறது.

**அனு — யாழ்**

**எனக்கு திருமணமாகி மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். திருமணமான ஒரு பையன் என்னைக் காதலிக்கின்றானே?**

அவனை உங்கள் மகனாகத் தத்தெடுத்து விட்டால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும்.

**கலை — மிருசுவில்**

**அழிவுகளைத் தடுத்துவிட யாரால் முடியும்?**

திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது.

**சேகர் — இணுவில்**

**கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் உண்மையாக இருக்கிறார்களா?**

வலைத்தளத்தில் பிடுடித்த கதை ஒன்று. தன் நண்பனுடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருக்கும் போது சார்ச் இல்லாததால் தன் மனைவியின் தொலைபேசியில் இருந்து நண்பனுக்கு அழைப்பை எடுத்தான் **Calling Aniththa** என பெயர் வந்தது.



**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 6363378 என்னும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் இவர்கள் இப்படி?

சத்திரியன்



பிஞ்சுகளைக் கொன்று குவித்து
பிசாசாகிப் போனவர்களே கேளீர்!
பிணம் தின்னும் கழுகுகளா நீவீர்!
போர் மேகம் விலகியதென்று
பெருவாழ்வு வாழ்ந்தோம் நாமும்
பேரவலம் கண்டு கலங்கிடவே
உயிர்த்த ஞாயிறு தினத்தில் நீரும்
உயிர் எடுத்தீரோ..எமது தீவில்

மதம் சொல்லவில்லை இதனை
மதம் பிடித்த கரியானீரோ..
கல்லறையில் உறங்கும் உறவுகளில்
கண்ணீர் படிந்திடவே வாழ்கின்றோம்
கடைசிவரை உம் சந்ததி
கண்ணீரின்றி வாழாது

கருவில் சுமந்த உன் அன்னையும்
கட்டியணைத்த உன் மனைவியும்
கைபிடித்து நடந்த உன் பிள்ளையும்
கருகியிருந்தால் உனக்குப் புரியும்
கண்ணீரின் வலி தான் என்னவென்று

ஏன் தான் நீவீர் இப்படி! என்ன கண்டீர் இதனால்!
உயிரைக் காப்பாற்ற போராடும்
உணர்வுள்ள வைத்தியனிடம் கேளும்
உமது நிலை உமக்கே புரியும்!
இனியும் வேண்டாம் இந்தத் துன்பம்
இருள் நீங்கி ஒளி பரவட்டும்
இரக்கமுள்ள மனிதர்களாகிடும் நீவீர்!
இறைவன் விரும்புவதும் இதனையே உம்மில்..

## இதயம் தாங்குமோ? இறைவா?

இறைவா இறைவா இது
என்ன கொடுமை இறைவா!

உன் சந்நிதியில் குண்டுகள் வெடித்ததே!
உன் புகழைப்பாடி ஆடிய பிஞ்சு
குழந்தைகளின் உடல்கள் சிதறியதே!
உயிர் மீண்ட நன்னாளிலே
அப்பாவிகளின் உயிர்கள் மாண்டு போனதே!
முள்ளிவாய்க்கால் சோகத்தை ஞாபகப்படுத்தியதே!

ஏழைகளின் பிள்ளைகளை வாழ வைத்த
மாமனிதன்! தன் பிள்ளைகளை பறிகொடுத்தாரே!
அந்த மாமனிதனின் இதயம்
எப்படிதான் தங்குமோ? இறைவா!
மணவாழ்விலே ஒன்று சேர வந்த

இளநெஞ்சங்களின் கதைகள் என்னானதோ?
மழலைச் செல்வங்களோடு
சந்தோசமாக வந்த குடும்பங்களின்
கதைகளும் என்னானதோ?
சொல்ல முடியாத சோகக் கதைகள் ஆனதே!

இறைசக்தியை தீயசக்திகள் மிஞ்சியதோ?
அதர்மம் செய்வதே தர்மம் ஆனதோ?
மனிதனை மனிதன் கொல்வதுதான்
மனிதநேயம் ஆனதோ?
இது மானிடர்கள் வாழும் உலகம் இல்லையோ?
சைத்தான்கள் வாழும் உலகம் ஆனதோ?

ச.பிரநிதன்
மட்டுவில் தெற்கு




## மக்கள் பிரதிநிதி

சேலை கலைத்தவன்
சாலை ஏறுகிறான்
சேலை கொடுத்து வாக்கு வாங்கி
மறுபடியும் சேலை கலைவதற்கு?

வங்கியிலிடப்பட்டிருந்த
வாக்குறுதிகளை
வாரி இறைக்கின்றான்
இலவசமாக ஏழைகளுக்கு...

எதிர்கால இலாபங்களை
எண்ணியபடி...

விவேகானந்தனூர் சதீஸ்
கிளிநொச்சி

## நாமுண்டு- நம் வேலையுண்டு

வட்டத்து ஆரைக் கோடுகளுக்குள்
சிக்குண்டு போன
முற்றுப்புள்ளிகளாய்
சுற்றிக் கொண்டிருக்கிறது வாழ்க்கை

மிதந்து கொண்டிருக்கும் பூமியை
முட்டி மோதிவிட
பாய்ந்துவரும் எரிகல்லாய்
சாம்பலாகிப் போகிறது
சாமானியன் வாழ்க்கை

பிறப்பும் இறப்பும்தான்
வாழ்க்கையெனின்
இடையில் இறுக்கப்பட்டவை
முடிவுகளற்று முடிந்து போகிறது
ஓர் சாண் வயிறு நிறைப்புக்காய்

கொடிகள் பிடித்து
கோசம் எழுப்பியவர்கள்
உசுப்பேத்தி உரசிவிட
பொசுங்கிப் போகிறது
நாதியற்றவர் குடிசைகள்

இந்தா வருகிறது
இப்போ வருகிறது என
வெற்றுவார்த்தை காட்டி
விசும்புபேசி ஓட்டுவாங்கி
ஒய்யாரமாய் வீற்றிருக்கிறார்
நமக்கென்ன
நாமுண்டு நம் வேலையுண்டு என...

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 445



## முள்ளுக்கம்பிக்குள்

முள்ளுக் கம்பிக்குள்
முடக்கி வைத்துன்னை
பள்ளிப் படிப்புக்கும்
பாதகம் விளைவிப்போ
அள்ளக் குறையாத
அருஞ்செல்வம் மழலை
தள்ளியா வைப்பர்
பெற்றோர் இலவாமோ...

வை.க. தவமணிதாசன்
கொக்குவில்

## மௌனத்தின் தேடல் -446



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## தவிப்புடன்

உயிர்த்த ஞாயிறு உயிர்களை
தேவன் காத்திடுவான் என்று
தேவாலயத்திற்கு
உறவுகளுடன் சென்ற சிறுமி
குண்டுவெடிப்பில்
பெற்றோரை பறிகொடுத்துவிட்டு
தவிப்பதை மனிதநேயமற்ற
மனிதனே நீ அறிவாயா?

இடைக்காடு
க.செல்வமலர்

## ஆர்த்து எழு

உயிர்த்த ஞாயிறன்று
உன்னைப்போல் எத்தனை
பயிர்கள் பறிக்கப்பட்டன
பாரே குலைநடுங்கிற்றே!
உயிரோடு இருக்கின்றாய்
உரம் பெறட்டும் வாழ்வு
அயராதே கல்வி உனக்கு
அருஞ்செல்வம் ஆர்த்து எழு

வாகை வளவன்
நாரந்தனை

## மலரும் முள்ளும்

புல்லை மிதிக்காதீர்
பூக்களைப் பறிக்காதீர்
இந்த விசாலமனம்
பந்த பாசத்திற்கும்
பொருந்தும்
வாசம் தரும்
ரோசாவுக்கு
சேதம் வராதிருக்க
முட்கள் பாதுகாப்பு
வெட்கம் தரும் விடயமாய்
இன்று சிறுவர்
நலங்கள்
நன்றென்று கூறும்
வகையில்
சிறைப்படுத்தி வருந்தாத
கல்விமுறையும் வேண்டும்

க.நாகராசா
நுணாவில்

## சிறுமிகளைப் பாதுகாப்போம்

செல்வத்துள் செல்வம்
குழந்தைச் செல்வம்
தாயின் கருவறையில்
உருவான தங்க
மகளைக்
கம்பிக் கூண்டுக்குள்
அடைத்துவைத்து
கொடுமைப்படுத்தி
வன்புணர்வுக்காளாக்கும்
மனிதநேயமற்ற
பாவிகளை
கூண்டுக்குள்
அடைக்க வேண்டும்
பெண்ணினத்தை
பேணிக் கண் போலக்
காத்திடுவோம்

துரை
தென்மட்டுவில்

## சிறுவனும் பயங்கரவாதியா?

பள்ளியில் பை
பென்சில் புத்தகங்களோடு
இருக்கவேண்டிய
சிறுவன் உன்னை
இராணுவத்தினர்
முள்ளுக்கம்பிக்குள்
சிக்கவைத்து
சித்திரவதை
செய்கின்றனரே
இந்த நாட்டில் அவர்கள்
சிறுவன் உன்னையும்
பயங்கரவாதியென
நினைத்தார்கள் போலும்


சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## விடுதலை

கண்மூடியிங்கு காலோடு
கை சேர்த்துக் கட்டி
அதர்மம் ஆட்சிகொள்ள
அடங்கினாயோ நீ
பிஞ்சு நெஞ்சையிங்கே
பிழிந்தே கசக்கி
வஞ்சம் கொண்டோர் விதித்த
வலையது காணீர்
அடடா இது என்ன
அநியாயம் என்றுணர்ந்து
அடக்கு முறைக்கு எதிராக
அணி திரள்வோம் வாரீர்
தடைகளை உடைத்து நீ
தளர்வதை விடுத்து
விடுதலை வேண்ட
விரைந்தே வா இங்கு

சி.திவ்வியா
யா/ப.மெ.ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சையெனத் திரியேல்

ஒருவாறு முண்டியடித்து நெருக்குண்டு அந்தச் சிற்றூர்தியுள் ஏறினேன். யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழி, மறவன்புலவு வழியாகச் சாவகச்சேரி செல்லும் ஊர்தி அது. அவ்வாறு ஏறியபடியால்தான் எஞ்சியிருந்த இருக்கையில் அமரக்கூடியதாக இருந்தது. இடமிருக்கு வாங்கோ வாங்கோ எனக்கூறி மேலும் பிரயாணிகள் ஏற்றிப் பின்னுக்குப் போங்கோ, பின்னுக்குப் போங்கோ என நடத்துநர் கூவிக்கொண்டிருந்தார். என் அருகில் ஒரு நடுத்தர வயசுப்பெண் இருந்தார். கைப் பையைத் திறந்து தனது முகத்தை ஒப்பனை செய்து கொண்டிருந்தாள். மக்களை முன்னுக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் முயன்று கொண்டிருக்க இவன் பின்னுக்குப் போ என விரட்டுகிறானே. உள்ளே போங்கோ என்று கூறலாம்தானே என எண்ணிக் கொண்டேன்.

அருகிலிருந்த பெண் திரும்பி "ஐயா எவ்விடம் வரை செல்கிறீர்கள்" எனக் கேட்டாள். நான் வேலன்பிராய் போக வேண்டும், தச்சன்தோப்பு மருதடிச் சந்தியில் இறங்கி விடுவேன் என்றேன். நான் மறவன்புலவு செல்கிறேன், கலை வாணி வித்தியாலயத்தில் பணி புரிகிறேன் என்றாள்.

ஓ, நீங்கள் ஆசிரியரா? மிக நன்று. பெண்கள் தான் ஆசிரியத் தொழிலுக்கு மிகவும் பொருத்தமானவர்கள். அன்பு காட்டி அரவணைத்துப் பொறுமையுடன் கற்றுத் தருவார்கள். நீங்கள் கூறுவது ஓரளவுதான் சரி. ஆண்களிலும் நிதானமிழக்காமல் பொறுப்பெடுத்துச் செயற்படக்கூடியவர் களும் உண்டு. சற்றுக் கண்டிப்புடன் அன்பும் கலந்து கற்றுத் தரும் ஆசிரியர்கள் அனைவராலும் பாராட்டப்படு வதுமுண்டு. நான் பட்டம்பெற்ற பாடத்திற்கு அங்கு வகுப்புக்கள் இல்லை. பிள்ளைகளும் ஒழுங்காக வருவதும் இல்லை. பெற்றோர்களுக்கும் அக்கறையில்லை. வாற பிள்ளைகளை ஒன்றிணைத்து எல்லாப் பாடங்களும் படிப்பிக்க வேண்டும்.

வெளிநாட்டு உதவியுடன் புனரமைக்கப்பட்டு இப் பிரதேசத்திலே பெரிய கட்டடத்தொகுதி கொண்ட பாடசாலை அது என்றல்லோ நான் அறிந்துள்ளேன். நீங்கள் அறிந் திருப்பது உண்மைதான். கட்டடங்களும் காப்பெற் வீதிகளும் அபிவிருத்தி இல்லை ஐயா. வியப்புடன் அவளைத் திரும்பிப் பார்த்தேன். இளைய தலைமுறையினர் எப்படியெல்லாம் சரியாகச் சிந்திக்கின்றனர்.

பாடசாலை, போக்குவரத்து, மின்சாரம், வைத்திய வசதிகள், விவசாய உற்பத்திகளும் சந்தைப்படுத்தலும் சீராக இருந்தால் பொருளாதார அபிவிருத்தி தானே பிள்ளை. மக்களின் வாழ்க்கைத்தரம், கல்வியறிவு, சிந்த னைத தெளிவு, புலனடக்கம், புரிந்துணர்வு, இணங்கிப் போதல், கூட்டுறவு என்பனவும் பேணப்படவேண்டும் ஐயா.

இவள் சாதாரண பெண் அல்ல என நான் எண்ணிக் கொண்டிருக்க, எனது படிப்பும், பயிற்சியும் கடந்த இரண்டு வருடங்களாக வீண்போய்விட்டன. இன்னமும் குறைந் தது மூன்று வருடங்களுக்கு வீணாகிப் போகப்போகிறது ஐயா. ஆர்வம் இல்லாத பிள்ளைகளும் அக்கறையற்ற பெற்றோர்களும் உள்ள சூழ்நிலையில் எவ்வாறுதான் முயன்றாலும் வீண்தானே ஐயா. அரசின் புதிய நியமனங்கள் கஷ்டப் பிரதேசத்தில் வழங்கும் விடாப்பிடியான கொள்கைகளால் எனது ஆற்றலும் காலமும் வீணாகிப் போகின்றன என்றாள் வேதனையுடன்.

பின்தங்கிய கிராமத்துப் பிள்ளைகளும் கற்றுயர வேண்டும்தானே. அதற்கு உங்களைப் போல பட்டம் பெற்ற இளம் பிள்ளைகள்தான் துடிப்புடன் செயற்படு வீர்கள் என்று எண்ணித்தான் அவ்வாறு நியமனங்கள் வழங்கப்படு கின்றன.

நீங்கள் சொல்வது சரிதான், இலவசக் கல்விமுறை ஆரம்பித்தபின்னா் ஒவ்வொரு கிராமத்திலும் படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் வளர்ந்திருக்கிறார்கள் தானே. அந்தந்தக் கிராமத்து இளைஞர், யுவதிகளுக்கு அவ்வவ் வூரில் நியமனங்கள் வழங்கினால் ஊர்ப்பற்றோடு படிப்பிப்பார்கள். அத்துடன் போக்குவரத்தில் இழக்கப்படுகின்ற மனிதநேரங்களும் களைப்பும் தவிர்த்துக் கொள் ளவும் கூடுமல்லவா.

வெறுமனே யாரோ வகுத்துவைத்த கொள்கை களுக்கும் கோட்பாடுகள், திட்டங்களுக்கும் அமையச் செயற்படுவது மாற்றப்படவேண்டும். கற்கும் ஆர்வமும் ஒழுங்கான வரவும் இல்லாத பிள்ளைகளைப் படிப்பித்துப் பார்த்தால்தான் தெரியும். அதை விடுங்கள் ஐயா. நீங்கள் வேலன்பிராய் போவதாகக் கூறினீர்கள். உங்களைப் பார்த்தால் அங்கு வசிப்பவர் போலத் தெரியவில்லையே.

வேலன்பிராய் நான் பிறந்த ஊர். எனது உறவும் சுற்றமும் அங்குதான். நான் படித்தது, வாழ்ந்தது, வீழ்ந்தது, எழுந்தது எல்லாம் அங்குதான். நண்பனொருவன் கிராம அபிவிருத்திக்கூட்டமொன்று நடைபெறவுள்ளது கட்டாயம் கலந்துகொள் என்றமையால் போய்க்கொண்டிருக்கின்றேன்.

உங்களுக்கும் கிராம வாழ்வு முறைக்கும் தொடர் புகள் நிறைய உண்டு என்பதைப் புரிந்துகொண்டுள் ளேன். இன்று நகரத்தில் வசிக்கும் சான்றோர்களில் பெரும் பாலானோர்கள் கிராமங்களிலிருந்தும் கஷ்டப்பட்டும் வளர்ந்து வந்தவர்கள் தான் என்பதையும் அறிந்து வைத்திருக்கின்றேன். அவர்கள் கிராமங்களை மறந்து விடுவதுதான் வேதனையாயிருக்கின்றது.

நீங்கள் சொல்வது சரிதான் அம்மா. கஷ்டத்தில் வாழ்ந்தவர்கள் வசதியான வாழ்வும் வாய்ப்புக்களும் கிடைத்ததும் பிறந்து வாழ்ந்த இடங்களை மறந்துவிடுகின்றனர் தான். ஆனால் அவர்களுக்குள்ள நெருக்கடிகளும் அலைச்சல்களுக்குமிடையில் கிராமங்களை மறந்துவிடுகின்றனர். ஆனாலும் கிராமங்களில் கிடைக் கின்ற சுத்தமான காற்று, நீர், உணவுவகை, அன்பான மக்கள், இயற்கையின் வனப்புகளுக்காக ஏங்கிக் கொண்டுதான் நகரத்து அவசர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

வேலன்பிராய் செல்லவேண்டியவர்கள் முன்னே வாங்கோ, இறங்க வேண்டும் எனக் குரல் கொடுத்தார் நடத்துநர். நான் இறங்கவேண்டும் அம்மா. உன்னைச் சந்தித்தது மிக்க மகிழ்ச்சி. நிறைய வாசிக்கிறாய் என்பது தீர்க்கமான உனது பதிலிலும் கதையிலும் பிரகாசிக்கின் றது. பெண்கள் இவ்வாறு தெளிந்த அறிவு பெற்றிருப்பது பெரும்பாக்கியம் தான். அது சரி யாழ்ப்பாணத்தில் எங்கு வசிக்கிறீர்கள்.

கந்தர்மடத்தடியில் எங்கள் கடை உள்ளது. உங்க ளுக்கு ஓய்வு கிடைக்கும் போது தொடர்பு கொண்டு பின் வாருங்கள் எனக்கூறித் தொலைபேசி இலக்கத்தைத் தந்தார். உங்களைச் சந்தித்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஐயா. இன்றைய பொழுது உங்களுக்கு நன்றாக அமை யட்டும். நன்றி அம்மா எனக்கூறி நான் இறங்கினேன். நண்பன் எனக்காகக் காத்திருந்தான்.

செழியன் வீதியில் நண்பனுடன் சென்று கொண்டிருந்தேன். வீதியின் இருமருங்கிலும் இடைவெளிவிட்டு விட்டு மருதமரங்கள் செழித்துக் கிளைபரப்பி வளர்ந்து நிழல் தந்து கொண்டிருந்தன. சுத்தமான காற்று சுகமாக உடல் வருடிச் சென்றது. குளிர்ச்சியாக இருந்தது. பட்டணத்தில் எவ்வகை குளிரூட்டப்பட்ட அறைகளிலும் இல்லாத சுகமும் ஆனந்தமுமாகவும் இருந்தது. வேலன்பிராய் குளத்தில் தாமரைகள் மலர்ந்து நிறைந்தி ருந்தன. கரையில் வெண்ணிறக் கொக்குகள் இரைக்காக ஒற்றைக்காலில் தவமிருந்தன. குளத்தில் குதித்து நீந்தி விளையாடிய பசுமையாக நினைவுகள் [illegible] எழுந்தன. இன்று எவ்விடத்திலும் அக்குளத்துப் புனித நீரில் குளித்திட வேண்டுமென எண்ணிக்கொண்டேன்.

இன்று வேலன்பிராய் கிராம அபிவிருத்திக்கூட்டம் நடைபெறவுள்ளது. அதனால்தான் தவறாது வா என அழைத்தேன் என்றான் நண்பன். ஓ, நல்லது நானும் இங்கு வரவேண்டுமென்று நெடுநாளாக எண்ணியிருந்தேன். எல்லாம் நன்மைக்கே. கிராம அபிவிருத்திக் கூட்டமென்று கூறுகிறீர்கள். அம்பலவாணர் ஐயாவையும் அழைத்திருக்கவேண்டும் அல்லவா.

ஓம், அவருக்குப் பிரதேச செயலகத்தில் கூட்டமொன்றிருக்காம். முடித்துக்கொண்டு வாறதாய்ச் சொல்லியிருக் கிறார். அம்பலவாணர் இக்கிராம முன்னேற்றத்துக்குத் தனது சொந்தப் பணத்திலே பலவித அபிவிருத்திப் பணிகளைச் செய்துவருபவர்.

கிராம அபிவிருத்திக்கூட்டம் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகியது. தலைவர், செயலாளர் என ஒருவரும் நியமிக்கப்படாத நிலையில் நண்பன் எழுந்து இன்று இங்கு நாங்கள் கூடியிருப்பதன் நோக்கம் நீங்கள் அறிவீர்கள். செழிப்பாயிருந்த எமது கிராமம் இன்று களையிழந்து போயுள்ளது. மக்கள் தொழில் செய்ய விரும்பு வதில்லை. தொழில் வாய்ப்புக்களும் மிகக் குறைவு. மாணவர் கல்வித்தரம் வீழ்ந்து விட்டது. மாறாக சமூக விரோதச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றை எவ்வாறு சரிப்படுத்தலாம் என்பது பற்றி உங்கள் கருத்துக்களை அறிந்து அதற்கான வகையில் செயற்படும் எண்ணத் தோடுதான் கூடியுள்ளோம் என்றார்.

எமது பொருளாதார வளம் மிகக் குன்றியிருப்பதே இவை யாவற்றுக்கும் முக்கிய காரணியாயிருப்பதால் சுய பொருளாதார வளர்ச்சிக்கான வழிவகைகளை ஆராயவேண்டும். கோவில்களில் அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பிக் கப்படவேண்டும். மக்களின் பொருளாதார வளம் குன்றியிருப்பதால் பல வேண்டத்தகாத சக்திகள் மீள்கட்டுமா னம், புனரமைப்பெனக் கூறிக்கொண்டு அப்பப்ப சில உதவிகளைச் செய்வதால் மக்கள் இலவசமாகக் கிடைக்கும் இவ் உதவிகள் பெறுவதற்காக அலைவதால் சுய உழைப்புகளை விட்டுவிட்ட னர். வீட்டில் பொருளா தார நெருக்கடி இருப்பதால் பிள்ளை களின் படிப்பில் பெற்றோர்கள் கவனமெடுப்பதில்லை. இவற்றுக்கான நிவர்த்திகள் அவசரமாக மேற்கொள்ள வேண்டும் என்றான் கதிரவன். இவன் ஒரு பட்டதாரி மாணவன். பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறான்.

மெத்தச்சரி, கிராமங்கள்தான் நாட்டின் இதயம் என்று மகாத்மா காந்தியும் கூறியுள்ளார். கிராமங்களின் பொருளாதாரமும் கல்வித்தரமும் ஏற்றமடைந்தால் ஏனையவை படிப்படியாக முன்னேற்றமடையும் என்றேன் நான்.

எமது குலத்தொழிலான ஆசிரியத் தொழிலுக்கு இப்ப பல தேவையுள்ளது. புனரமைப்பு- கட்டட அமைப்பு செய்வதற்கு ஆச்சாரிய உதவிகளும் ஆலோசனைகளும் தேவைப்படுவதால் இச்சந்தர்ப்பத்தில் கடுமையாக உழைத்தல் வேண்டும். அத்துடன் விவசாயத்தையும் வழமைபோலச் செய்யத் தூண்டவேண்டும்.

ஆம் அதுதான் சரி, விளைவித்து உண்ணவேண்டும். யாரிடமும் வாங்கி உண்ண நினைக்கக்கூடாது. இலவசமாகத் தந்தாலும்கூட வாங்கக்கூடாது. உடனடித் தேவைகளுக்காக உப பயிர்களான பயறு, உளுந்து, குரக்கன் போன்ற தானியங்களைப் பயிரிடுவோம். வீட்டிலேயே வளர்க்கின்ற பூக் கன்றுகளுடன் மரக்கறிச் செடிகளையும் வளர்த்தெடுப்போம்.

பயிர்வளர்த்துண்ணும் வாழ்க்கை சிறந்ததுதான். குளங்களில் நீர்மட்டம் குறைகின்றதால் கிணறுகளில் நீரில்லாமல் போகின்றது. சில பகுதிக் கிணறுகளுள் உப்பு நீர் கலக்கின்றது. குளங்களைத் தூர்வாரித் தருமாறு பல தடவைகள் நேரில் பேசியும் மகஜர்கள் அனுப்பியும் பலனில்லை.

இல்லாதவிடத்து உண்டாக்கப் பார்க்கவேண்டும். இல்லை இல்லை என்ற எதிர்மறைச் சிந்தனையையும் பேச்சையும் விட்டுவிட்டு எங்களிடமுள்ள மனிதசக் தியைக் கொண்டு குளங்களில் தூர்வாருவோம். அணைக் கட்டுக்களைச் செப்பனிடுவோம். இயந்திர வலுப்பெற வேண்டி நேரின் அம்பலவாணர் ஐயாவை நாடுவோம். துணிந்து இறங்கிச் செயற்பட்டால் தொடர்ந்து வர மக்கள் முனைவர். ஆரம்பிக்கும்போதுதான் பிரச்சினை. ஆரம்பித்துவிட்டால் எல்லாம் தானாக நடக்கும். நன்றாக வும் நடக்கும்.

தம்பி சொல்வதுதான் சரி, அரசுகளையும் தொண்டு நிறுவனங்களையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்காமல் அனுமதி பெற்றுக்கொண்டு குளங்களைத் தூர்வாருவோம். இப்பருவத்துக்குப் பெய்யும் மழைநீர் முழுவதையும் சேமிப் போம். கிணறுகளில் நன்னீர் பெறமுடியும். அத்துடன் சிறுவர் களை நெறிப்படுத்த அறநெறிப் பாடசாலைகளையும் ஆரம்பித்து இயக்குவோம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

நேரம் நண்பகல் 12 மணியாகும்போது அம்பலவாணர் ஐயா வந்து சேர்ந்தார். மக்களிடையே ஆனந்த ஆரவாரம் ஏற்பட்டது. தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை அறிந்து அம்பலவாணர் மெத்தச் சரியான முடிவுகள் எடுத்திருக் கிறீர்கள். இதுபற்றித்தான் பிரதேச சபைக் கூட்டத்திலும் வலியுறுத்திக் கதைத்துள்ளேன்.

நாங்கள் வேலைகளை ஆரம்பிப்பம். அரசு உதவி தந்தால் பெற்றுக்கொள்வோம். மேலதிகச் செலவுகளில் மக்கள் பங்களிக்கட்டும். நானும் சகல உதவிகளும் செய்வேன் என்றார். இளங்கதிரவனைத் தலைவனாகக் கொண்டு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. முயன்றால் எல்லோருக்கும் எல்லாம் முடியும்.

மயூரதன்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தா
# தொடரும் நெருக்க

உயிர்த்த ஞாயிறு தினமான ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெற்ற அதிரடியான தற்கொலைத் தாக்குதல்கள் உலகத்தின் பார்வையை மீண்டும் இலங்கையின் பக்கம் திருப்பியிருக்கின்றது.

இந்தியாவின் 'ரோ', அமெரிக்காவின் சி.ஐ.ஏ. புலனாய்வு அமைப்புகள் கொடுக்கப்பட்ட தாக்குதல் எச்சரிக்கை கண்டு கொள்ளப்படாமல் போனமைக்கு இலங்கைப் புலனாய்வுத் துறையின் குறைபாடு காரணமா?, அதிகாரிகளின் அலட்சியம் காரணமா? அல்லது அரசியல் தலைவர்கள் இதற்குப் பொறுப்பேற்க வேண்டுமா? என்ற சர்ச்சை இலங்கை அரசியலில் இப்போது விவாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.



ஜூனியர் விகடன்

இலங்கையிலிருந்து 40 முஸ்லிம் இளைஞர்கள் ஐ.எஸ். அமைப்பிடம் பயிற்சி பெறுவதற்காக சிரியாவுக்குச் சென்றுவந்திருப்பதை சர்வதேசப் புலனாய்வு அமைப்புகள் உறுதிப்படுத்தியுள்ளன. இவர்களில், ஐந்து பேர் சிரியாவில் நடைபெற்ற யுத்தத்தின்போது கொல்லப்பட்டார்கள் என்ற தகவலும் உள்ளது.

'ரோ'வின் தகவலுக்குச் சில வாரங்களுக்கு முன்னதாக அதாவது மார்ச் இறுதிப் பகுதியில் இதேபோன்ற ஒரு இரகசியத் தகவலை அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. இலங்கைக்குக் கொடுத்தது. ஆனாலும் இலங்கை அரசு இதுகுறித்து முன்கூட்டியே நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

தேசிய தௌஹீத் ஜமாத் என்ற அமைப்பின் செயற்பாடுகளை இலங்கையின் உளவுத்துறை நன்கு அறிந்தே இருந்தது. இலங்கையில் புத்தர் சிலைகளைத் தகர்த்தமை உட்பட பல வன்முறைச் சம்பவங்களில் இவ்வமைப்பு ஈடுபட்டிருந்தது. அதை விட, மற்ற மதத்தவர்களுக்கு எதிரான பிரசாரத்திலும் இந்த அமைப்பு சம்பந்தப்பட்டிருந்தது. ஆனால் குண்டுவெடிப்பு வரை அவர்கள் போவார்கள் என்று இலங்கை அரசு நினைக்காமல் இருந்திருக்கலாம்.

விடுதலைப் புலிகளுடன் 30 வருடங்களாகத் தொடர்ந்த போர் பத்து வருடங்களுக்கு முன்னர் முடிவுக்கு வந்தது. போர் முடிவுக்கு வந்தாலும் தமிழ்ப் பகுதிகளிலேயே பெருமளவு இராணுவத்தை இலங்கை அரசு குவித்து வைத்துள்ளது. தமிழர்களையே தம் எதிரிகளாகப் பார்த்துப் பழகிவிட்ட இலங்கையின் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு என்பன முஸ்லிம் அமைப்பு ஒன்று இவ்வாறான தயாரிப்புகளில் ஈடுபடுகின்றது என்ற உளவுத்துறைச் செய்தியை நம்புவதற்குத் தயாராக இருக்கவில்லை. புலிகளுடனான போரின் போது முஸ்லிம் அமைப்புகள் இலங்கைப் படைகளுக்கு ஆதரவாக இருந்தமையும் அதற்கு ஒரு காரணமாகப் பார்க்கப்படலாம்.


ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தொடரும் முரண்பாடுகளும் இன்றைய நிலைமைக்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றது. உளவுத் தகவல்களை யாரிடம் கொடுப்பது என்ற குழப்பம் உளவுப் பிரிவுக்கு இருந்திருக்கலாம். தன்னை இந்திய உளவுப் பிரிவு படுகொலை செய்வதற்கு முயற்சி செய்தது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில மாதங்களுக்கு முன்னர் பகிரங்கமாகவே சொல்லியிருந்தார். அவ்வாறானவரிடம் 'ரோ'வின் தகவலைச் செல்வதால் என்ன பலன் எனவும் அதிகாரிகள் சிந்தித்திருக்கலாம்.

இந்தக் குழப்பங்கள் எல்லாவற்றையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மிகப் பெரும் தாக்குதல் ஒன்றை தேசிய தௌஹீத் ஜமாத் நடத்தி முடித்துள்ளது. சர்வதேச ரீதியாக ஐ.எஸ். அமைப்பு அண்மைக்காலத்தில் பெரும் பின்னடைவைச் சந்தித்து வருகின்றது. சிரியாவிலும்கூட அவர்களுடைய கைகள் இப்போது அடங்கிப்போயிருக்கின்றன. தமக்கு மிகப்பெரிய வெற்றியொன்றைக் காட்டிக் கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது. பலவீனமான ஒரு முனையாக இருந்த இலங்கை, இப்போது அவர்களுடைய இலக்காகியிருக்கின்றது.

"உயிர்த்த ஞாயிறு" தாக்குதலை அடுத்து, நாடு முழுவதும் முஸ்லிம் மக்கள் அடர்த்தியாக வாழும் பிரதேசங்களில், இராணுவத்தின் தேடுதல் நடவடிக்கைகள் பாரிய அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த வாரக் கடைசி வாக்கில், கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சாய்ந்த மருது, சவளக்கடை, சம்மாந்துறை ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதலில், கணிசமான ஆயுதங்களும் வெடி பொருட்களைத் தயாரிக்கப் பயன்ப







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாக்குதல் கடிகள்

டும் வேதிப் பொருட்களும் தீவிரவாத வாசகத்துடனான கறுப்புக் கொடிகளும் கைப்பற்றப்பட்டன. ஐ.எஸ். அடையாளத்துடன் உள்ள கறுப்புடையும் திரையும் இச்சோதனையின்போது அகப்பட்டன.

தீவிரவாதக் குழுவுடன் தொடர்புடையவர்கள் மீது மட்டுமல்லாமல், சந்தேகத்துக்குரிய முஸ்லிம் பிரமுகர்கள்மீதும் இலங்கை அரசு கடுமை காட்டியுள்ளது. கொழும்பு, கொம்பனித் தெரு பகுதியில் உள்ள பள்ளிவாசலில் 46 கத்திகள் கைப்பற்றப்பட்டன. கொழும்பு மாநகர சபையின் ஐ.தே.கவின் பிரதி மேயர் நூர்தீன் முகமது தாஜுதீன் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலும் இதைப்போலவே நீர்கொழும்பு நகரின் துணைமேயரான மகிந்த ராஜபக்ஷவின் கட்சியான பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த முகமது அன்சாரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அரசியல் செல்வாக்குக் கொண்டவர்களே இராணுவத்தின் நெருக்கடிக்குத் தப்பமுடியாத நிலையில், வடக்கு- கிழக்கு மாகாணங்களிலும் தென்னிலங்கையிலும் மீன்பிடித் தொழில் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள சாதாரண முஸ்லிம் மக்கள், நெருக்கடியான சூழலுக்குள் தள்ளப்படும் நிலை உருவாகியிருக்கிறது.

இலங்கையில் செயற்படும் பொது பல சேனா போன்ற சிங்கள - பௌத்த மதவாத அமைப்புகளும் இஸ்லாமிய தீவிரவாதத்தை முழுமையாக ஒடுக்கிவிட வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளன. இவ்வமைப்பின் தலைவர் ஞானசார தேரர் தற்போது சிறையில் உள்ளபோதும், இது போன்ற அமைப்புகளின் அழுத்தங்களும் இலங்கை அரசாங்கம் கடுமையாகச் செயற்படுவதற்குத் தூண்டும்.

இஸ்லாமிய பயங்கரவாதிகளின் செயற்பாடுகள், சராசரி இஸ்லாமிய மக்களின் வாழ்க்கையில்தான் நெருக்கடியை ஏற்படுத்தும். இப்போதே பர்தாவுக்குத் தடை போன்றவை வந்துவிட்ட சூழலில் ஒவ்வொரு முஸ்லிமும் சந்தேகத்துக்குரியவராய்ப் பார்க்கப்படும் சூழல் உருவாகும்.

மேலும் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற பெயரில் இலங்கையில் மேற்கு



நாடுகளின் உளவு அமைப்புகளின் செயற்பாடுகள் தீவிரமடைந்துவிடும் ஒரு நிலைதான் எதிர்காலத்தில் பார்க்கக்கூடியதாக இருக்கும். நீண்ட இடைவெளிக்குப் பிறகு, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இலங்கையை மையமாக வைத்து, அந்நிய நாடுகளின் தலையீட்டால் அங்கு ஓர் அசாதாரணமான நிலை தோன்றும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

# மசூத் அஸார் விவகாரத்தில் சீனா இறங்கி வர காரணம் என்ன?

**(இக்கட்டுரையை எழுதிய ஸ்வரன் சிங், டில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஆவார்)**

பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பின் தலைவரான மௌலானா மசூத் அஸாரை பயங்கரவாதியாக கடந்த புதன்கிழமை அறிவித்தது ஐ.நா.

இதுநாள் வரை சீனா மசூத் அஸார் விவகாரத்தில் பாகிஸ்தான் பக்கமே நின்றது. வீட்டோ அதிகாரம் கொண்ட சீனா, மசூத் விவகாரத்தில் தற்போது தனது நிலைப்பாட்டை மாற்றி உள்ளது. மசூத் விடயத்தில் அவசரப்படக்கூடாது என்று சொல்லிவந்த சீனா, இப்போது அவரை கைவிட்டுள்ளது.

**சீனா தனது நிலைப்பாட்டை மாற்றியதற்கு என்ன காரணம்?**

மும்பை தாக்குதல், 26/11 பயங்கரவாத சம்பவத்திற்கு பின், அதாவது 2009ஆம் ஆண்டிலிருந்தே ஐ.நா. பாதுகாப்பு ஆணையத்தின் முன் மசூத் குறித்து பிரச்சினையை இந்தியா கொண்டுவந்தது. வீட்டோ அதிகாரம் கொண்ட அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ரஷ்யாவுடன், பிரான்ஸ் மறைமுகமாக இந்தியாவை ஆதரித்து வந்தன. ஐ.நா. பாதுகாப்பு ஆணையத்தில் நிரந்தர உறுப்பினராக இல்லாத பிறநாடுகளும் இந்தியாவை ஆதரித்தன. ஆனால், சீனா மட்டும் பாகிஸ்தானை பாதுகாக்கும் நோக்குடன் இதற்கு எதிராக நின்றது.



புல்வாமா தாக்குதலுக்கு பின் பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் அமெரிக்க இணைந்து ஐ.நாவில் மசூத்திற்கு எதிரான முன்மொழிவை மார்ச்சில் கொண்டு வர இருந்தது. சீனா இந்த சமயத்தில் தயக்கம் காட்டியது. இதனை குறைந்தது ஆறு மாதங்களுக்கு தள்ளிப்போட வைப்பதற்கான முயற்சியில் இறங்கியது.

இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று சீனா கூறியது. இவ்வாறு சீனா கூறுவது இது நான்காவது முறை.

ஆனால், ஆறுவார காலத்தில் சீனாவின் நிலைப்பாடு மாறி இருக்கிறது. டில்லியில் சில தினங்களுக்கு முன்பு சீன தூதரும், வெளியுறவுத் துறை அமைச்சரும் சந்தித்து பேசியது குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னரே சீனாவின் நிலைப்பாட்டில் மாற்றம் வரத் தொடங்கியது.

சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் வணிகப் போர் நடந்து வரும் சூழலில், புல்வாமா தக்குதலுக்குப் பின், ட்ரம்ப் அரசாங்கம் இது குறித்து ஐ.நாவில் பேச தன்னாலான அனைத்து முயற்சிகளிலும் இறங்கியது. இதன் பிறகே, சீனா பொது மன்றத்தில் பேசும் சூழலுக்கு தள்ளப்பட்டது.

மசூத்திற்கு எதிரான அழுத்தங்கள் அதிகரித்துள்ளன என்பதை உணர்ந்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர், மசூத்திற்கு உடல்நிலை சரியில்லை என பேசத் தொடங்கினார். அஸாருக்கு எதிராக வலுவான ஆதாரங்கள் இல்லாத போது, அவரை நீதிமன்றங்களுக்கு இழுக்கக் கூடாதென்றும் கூறினார்.

இப்படியான சூழலில் சீனாவும், பாகிஸ்தானும் யோசிக்க தொடங்கின. அதாவது இந்தியாவுக்கு எதிரான ஒரு துருப்பு சீட்டாக அஸார் இருப்பாரா? அல்லது தங்களுக்கு சுமையாக மாறுவாரா? என கணக்குப் போடத் தொடங்கின.

சீனாவில் அந்நாட்டு ஜனாதிபதி ஜி ஜின்பிங் உள்ளிட்ட பல தலைவர்களுக்கும், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கும் இடையே உச்சிமாநாடு நடைபெற்று இம்ரான் நாடு திரும்பிய அடுத்த நாள் இந்த முடிவை சீனா எடுத்துள்ளது. இந்தச் சந்திப்பில் மசூத் அஸார் குறித்த விவாதங்கள் நிச்சயம் இடம் பெற்றிருக்கும்.

தனது முடிவினை சீனா, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சொல்வதற்கு ஒரு நாளுக்கு முன்னதாகவே, அந்நாட்டு வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் இப்பிரச்சினை தீர்க்கப்படும் என்று மீண்டும் கூறினார்.

இறுதியாக இந்தியாவின் இராஜதந்திர நடவடிக்கைகளும், சீனா உள்ளிட்ட முக்கிய நாடுகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது இந்திய பிரதமர் மோடி வெளிக்காட்டிய தீவிரவாத எதிர்ப்புப் பிரசாரமும், இதில் முக்கிய இடம் பிடித்துள்ளது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

இந்திய பிரதமர் மோடி மற்றும் சீன ஜனாதிபதி ஜின்பிங் இடையே கடந்த ஏப்ரலில் நடைபெற்ற உச்சிமாநாட்டில், இது குறித்து விவாதிக்கப்படாமல் இதுமாதிரி ஒன்று நடந்திருக்க வாய்ப்பில்லை என்று கருதப்படுகிறது.

சீனா இந்த முடிவினை அறிவித்துள்ள நேரம், இந்திய மக்களவை தேர்தல் நடக்கிறது. இது ஆளுங்கட்சியின் பிம்பத்தை பெரிதுபடுத்தலாம் என்ற யூகங்களும் முன்வைக்கப்படும். ஆனால், மசூத் அஸார் விவகாரத்தில் சீனா இந்த முடிவை எடுத்துள்ளது அடையாளத்திற்கான சைகை தானே தவிர வேறொன்றும் இல்லை என்று நமக்கு தெரிகிறது.

இதற்கு சிறந்த உதாரணம் ஹஃபீஸ் சயீத் விவகாரம் தான். மும்பையில் 26/11 தாக்குதலை தொடர்ந்து, 2012ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஒபாமா அரசாங்கம், ஹஃபீஸ் சயீத் குறித்த தகவலுக்கு 10 மில்லியன் டொலர்கள் சன்மானம் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தது.

பாகிஸ்தான் பணம் இல்லாமல் ஏழ்மை நிலையில் இருந்தாலும், அவ்வளவு டொலர்கள் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பு அவர்களை கவரவில்லை. சயீதை பாதுகாப்பான காவலில் அவ்வப்போது வைத்து, அரசும் நீதிமன்றங்களும் அவரை அனைத்து குற்றச் சாட்டுகளில் இருந்தும் விடுவித்தன.

பாகிஸ்தானில் சுதந்திரமாக நடமாடும் ஹஃபீஸ் சயீத், அரசியல் கட்சி ஒன்றையும் ஆரம்பித்து, கடந்த தேர்தலில் வேட்பாளர்களையும் நிறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி B.B.C

# ஜடாயு பூமி



உலகின் மிகப்பெரிய பறவைச் சிற்பம், கேரளாவின் கொல்லம் நகரில் அமைந்துள்ளது . 'ஜடாயு எர்த் சென்டர்' எனப்படும் இதை உருவாக்கியவர், ராஜிவ் ஆஞ்சல் (Rajiv Anchal).

சினிமா இயக்குநர், 'திரைக்கதை எழுத்தாளர் சிற்பி எனப் பன்முகம் கொண்ட இவர், பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் மரியாதை என்ற கருத்தை மையமாக வைத்து, 2018 ஆம் ஆண்டில் இதை உருவாக்கினார்.

. இந்தப் பூங்கா 65 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. ஜடாயு என்ற கழுகுச் சிற்பம் 200 அடி நீளம், 150 அடி அகலம், 70 அடி உயரம் கொண்டது, தரைத்தளம் 15,000 சதுர அடி பரப்பளவு கொண்டது.

தீம் பார்க், கேபிள் கார், ஹெலிகொப்டரில் சுற்றிப் பார்க்கும் வசதி என உற்சாகத்துக்கான அத்தனை அம்சங்களுடன் சுற்றுலா பயணிகளை வசீகரித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வைக் கற்றுத்தரும் கறையான்கள்

மனிதர்களால் மட்டுமே இயங்குவதில்லை இப்பூவுலகு. மண்ணுக்கு மேலும், மண்ணுக்குள்ளும் உலகின் இயக்கத்துக்காகக் கோடிக்கணக்கான உயிர்கள் உழைத்துக்கொண்டே இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது சமூகத்தின் துப்புரவாளனான கறையான்கள். மரத்தில் இருந்து உதிரும் இலைகள் முதல் மண்ணில் விழும் பெரிய தாவரங்கள் வரை மக்க வைக்கும் அரும்பணியை ஆற்றுகின்றன கறையான்கள். ஆம், மண்ணில் விழும் இலையானாலும் சரி, மரமானாலும் சரி இவை மக்கவைத்து விடுவதால்தான் வனங்கள் வளமாக இருக்கின்றன. மழை, புயல் பாதிப்புகளால் உடைந்து விழும் மரங்களை மக்க வைத்துக் கொடுப்பவை கறையான்கள்தான்.


நாகரிகத்திலும் குழுவாக வாழ்வதிலும் மனிதர்கள்தான் முன்னோடிகள் என நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மிகநேர்த்தியான வாழ்க்கைமுறையை வாழ்ந்துகொண்டிருப்பவை கறையான்கள். கிட்டத்தட்ட 20 கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பூமியில் இருக்கும் தொல்லுயிர். தேனீக்களைப் போலவே, கூட்டம் கூட்டமாகக் காலனி அமைத்து கறையான்கள் வாழும். அதனால்தான் இதை 'சமுதாய பூச்சி' என்கிறார்கள். நவீன கட்டடக்கலை வளர்ச்சியின் இன்றைய உச்சத்தைக் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே தொட்டுவிட்டவை கறையான்கள். இதற்கு உதாரணம் கறையான் புற்றுகள். எந்த நவீன உபகரணங்களும் இல்லாமல், காற்று, மழை, பனி, வெயில் எனப் பருவங்களால் பாதிப்பு ஏற்படாத வகையில் தங்கள் குடியிருப்புகளை அமைத்துக் கொள்ளும் அறிவு அலாதியானது.

ராணி, மன்னர், படைவீரர்கள், பணியாளர்கள், ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறைகள், உணவு சேமிப்பு அறை, குஞ்சுகள் வளரும் அறை எனக் கறையான் புற்றுக்குள் சத்தமில்லாமல் ஒரு சாம்ராஜ்யமே நடந்துகொண்டு இருக்கிறது. கறையான்கள் பற்றிய தேடலில் கிடைத்த தகவல்கள் ஆச்சர்ய பள்ளத்தாக்கில் மூழ்க வைத்துவிட்டன. கறையான்தானே என ஏகத்தாளமாய் பார்க்கும் சிறிய உயிர்கள், எத்தனை ஒழுங்கோடு, நெறியோடு வாழ்கின்றன என்பதை அறிந்துகொண்டால் நீங்களும் ஆச்சர்யப்படுவீர்கள்.

"சுற்றுச்சூழலுக்கும் கறையான்களுக்கும் பெரிய தொடர்பு இருக்கிறது. இந்தப் பூமியில் கண்ணுக்குத் தெரியாத பக்றீரியாக்கள் போன்ற நுண்ணுயிரிகளிலிருந்து யானை வரை அனைத்து உயிர்களும் தேவைக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன. சூழலியல் சமன்பாட்டில் ஒவ்வோர் உயிருக்கும் ஒரு பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களைத் தவிர, மற்ற அனைத்து உயிர்களும் தங்கள் சூழலியல் கடமையைத் தவறாமல் செய்து வருகின்றன. கறையான்களை மனிதர்கள் எதிரிகளாகவே பார்த்து பழகிவிட்டோம். வீட்டில் உள்ள பொருள்களை அரித்துவிடுவதால் கறையான்கள் மீது கோபம் கொள்கிறோம். கொஞ்சம் சிந்தித்து பாருங்கள். கறையான்களின் உணவுகளை (மரங்கள்) கொண்டு நாம் வீடுகள் அமைத்துக் கொண்டோம். அதனரல் அவை தங்கள் உணவைத் தேடி வரத்தானே செய்யும். இதில் கறையான் மீது கோபம்கொள்வது எந்த வகை அறம்? உண்மையில் கறையான்கள் அரிப்பதனால் 10 சதவிகித பொருளாதார சேதாரம் ஏற்படுவது உண்மைதான். ஆனால், மீதமுள்ள 90 சதவிகிதம் தேவையில்லாத பொருட்களை மக்க வைக்கும் பணியைக் கறையான்கள் செய்கின்றன.

கறையான் தனியாக வசிக்காது. மனிதர்களைப்போல் கூட்டம் கூட்டமாகத்தான் வசிக்கும். கட்டடக்கலையில் பல வித்தைகளைச் செய்யும், வல்லுநர்களுக்கு இன்றைக்கும் வியப்பை அளிப்பவை கறையான் புற்றுகள். உண்மையில் கட்டடக் கலையின் அடிப்படையே கறையான் புற்றுகள்தான் எனச் சொல்லலாம். அவை ஒன்றுபோல இருக்காது. அந்தந்தப் பகுதியின் மழையளவு, ஈரப்பதம், வெப்பநிலை, காற்றின் அளவு போன்ற பௌதீக காரணிகளின் அடிப்படையில் பிற உயிர்களால் பாதிப்பு ஏற்படாதவாறு தங்கள் குடியிருப்புகளை அமைக்கின்றன கறையான்கள். அதிக ஈரப்பதம் இல்லாத, அதிக உலர் தன்மை இல்லாத, வடிகால் வசதி கொண்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து புற்றுகளை அமைக்கும். எந்த புறக்காரணிகளாலும் குடியிருப்பு சேதமாகாத வகையில் புற்றுகள் இருக்கும். நீர்நிலைகளில் குடியிருப்புகளை அமைக்கும் மனிதர்கள், கறையான்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு நாட்டிலும் கறையான் புற்றுகள் வெவ்வேறு வடிவில் இருக்கும்.

ஒரு புற்றில், ராணி கறையான்தான் தலைமைப் பொறுப்பில் இருக்கும். இனப்பெருக்கத்துக்காக ஆண் கறையான் (மன்னர்), பாதுகாப்புக்காகப் படைவீரர்கள், வேலைகளுக்காகப் பணியாளர்கள் என நான்கு பிரிவு ஒவ்வொரு புற்றிலும் இருக்கும். மனிதர்கள் அனைவராலும் (பெண்களில்) இனப்பெருக்கம் செய்ய முடியும். ஆனால், கறையான்களில் ராணியைத் தவிர, மற்ற கறையான்கள் இனப்பெருக்கம் செய்ய முடியாது. இந்தத் தன்மை ஒரு



சில பூச்சியினங்களுக்கு மட்டுமே இருக்கும். அதனால் இதை 'யூசோசியல் இன்செக்ட்' (Eusocial Insectes) என்கிறார்கள். ராணி கறையானின் பணி, முட்டையிட்டுக் காலனியை ஒருங்கிணைப்பது மட்டும்தான். காலனியின் தலைவியான ராணியின் அறை விசாலமாக இருக்கும். ராணி இருக்கும் இடத்தைவிட்டு வேறு எங்கும் போகாது. 10 முதல் 50 ஆண்டுகள் வரை உயிர் வாழும். அதற்குத் தேவையான உணவு உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் பணிக்கறையான்கள் செய்துகொடுக்கும். ஆண் கறையான், இனப்பெருக்கத்துக்கான வேலை தவிர, வேறு எந்த வேலையையும் செய்யாது. பிற உயிர்களிடமிருந்து காலனியைப் பாதுகாக்கும் பணியில் வாகை கறையான் என்ற படை கறையான்கள் ஈடுபடும்.

வாகைகறையான்களில் ஆண், பெண் உண்டு என்றாலும் அவற்றால் இனப்பெருக்கம் செய்ய முடியாது. இவற்றின் ஆயுட்காலம் ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள். இந்தப் படைவீரர்களில் இரண்டு வகை உண்டு. பருத்த தலையும் தலையில் அரிவாள் போன்ற அமைப்புடன் இருப்பவை முன்வரிசை படைவீரர்கள். (Mandibulate Soldiers) எதிரிகள் மீது தாக்குதல் நடத்தி, காலனியைப் பாதுகாப்பவர்கள். தங்கள் முகத்தின் முனையில் கூர்மையாக உள்ள ஊசியைப் போன்ற பகுதியைப் புற்றில் உள்ள சின்னச் சின்ன துளைகள் சொருகி நின்று காவல் காக்கும். அரண்மனையில் கையில் வாளுடன் காவல்காக்கும் போர்வீரர்கள் போன்றவர்கள். இவர்களையும் தாண்டி, தாக்க வரும் எதிரிகளை துவம்சம் செய்பவர்கள் நாஸ்டி சோல்ஜர்ஸ் (Nasute Soldiers) என்ற அழைக்கப்படும் இரண்டாம் வரிசை படைவீரர்கள். இவர்கள், துர்வாசம் வீசும் சுரப்பிகளை எதிரிகள் மீது துப்பி விரட்டியடிப்பார்கள். இதில் கவனிக்க வேண்டிய விடயம், படைகறையான்களுக்குப் பார்வைத்திறன் இல்லை. படைவீரர்கள், பணியாளர்கள் மீது பிரத்யேகமான ஒருவித வாசனை இருக்கும். எதிரிகளின் தாக்குதலில் படை கறையான்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டால், காலனியில் அந்த வாசனைக் குறையும். கறையான்களைப் பொறுத்தவரை அவை உண்ணும் உணவுக்[illegible]ளாகவோ, பணியாளர் கறையான்களாகவோ மாறும். எனவே, எந்தப் பிரிவில் எண்ணிக்கை குறைகிறதோ அந்தப் பிரிவு கறையான்கள் உருவாகத் தேவையான உணவுகள், குஞ்சுகளுக்குக் கொடுக்கப்படும். இதைப் பணியாளர்கள் செய்வார்கள். இயற்கையின் பேராற்றலை நினைத்தால் பிரமிக்காமல் இருக்க முடியவில்லை.

ராணியிடும் முட்டைகளை எடுத்துச் சென்று குஞ்சு பொரிக்கும் அறையில் வைத்து, பொரிக்கச் செய்வது பணிக்கறையான்கள்தான். காலனியில் ராணி அறையைத் தவிர, குஞ்சுகள் பராமரிப்பு அறை, உணவு சேமிப்பு அறை, பணியாளர்கள் அறை என ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான அறைகள் இருக்கும். இத்தனை ஒழுங்கு மனிதர்கள் வாழ்க்கையில்கூட இருக்காது.

மன்னரும் ராணியும் இல்லறத்தில் உண்மையானவர்களாக இருப்பார்கள். மன்னர் இறந்தால் மட்டுமே, இனப்பெருக்கத்துக்காக மட்டும் புதிய மன்னருடன் ராணி இணைசேரும். புற்றில் பல ஆண் கறையான்கள் இருக்கும். இவற்றுக்கு எந்த வேலையும் கிடையாது. உண்பது, உறங்குவது, இணைசேர்வது மட்டுமே இவர்களது பணி. உலகில் அதிக சொகுசு வாழ்க்கை வாழ்பவர்கள் இந்த ஆண் கறையான்களாகத்தான் இருக்கும். அதே போல, ஒவ்வொரு காலனியிலும் பல ராணி கறையான்கள் இருக்கும். ராணி கறையான் இறந்துவிட்டால், மற்ற ராணி கறையான்களில் ஒன்று ராணி பொறுப்பை ஏற்கும். சூழல் மாற்றம் ஏற்படும்போது வாழிடத்தை மாற்றுவது, காலனியில் உள்ள கறையான்களை வழிநடத்துவது ராணி கறையான்தான்.

பங்குனி, சித்திரை மாதங்களில் ராணி கறையான் வைக்கும் முட்டைகளைப் பணிக்கறையான்கள் எடுத்துச் சென்று ஆழத்தில் வைத்துப் பாதுகாக்கும். இந்த முட்டைகள் பொரித்து புழுக்கள் வெளியே வந்தவுடன், அவற்றுக்கு பிரத்தியேகமான உணவுகொடுத்து பராமரிப்பார்கள். அடுத்த ஐந்து மாதங்களில் புழுக்களுக்கு இறக்கை முளைத்து, பழுப்பு நிறத்தில் ஈசலாக மாறிவிடும். காலனியில் அதிக எண்ணிக்கையில் ஈசல்கள் உருவானவுடன், அவற்றைக் காலனியிலிருந்து பிரித்து வெளியே அனுப்புவார்கள். தங்கள் இனத்தைப் பரப்பும் பணிகளில் ஈடுபட்ட ஈசல்களுக்கு வழியனுப்பு விழா நடத்த ஏற்ற நாளை எதிர்பார்த்து மொத்த காலனியும் காத்திருக்கும். ஒக்டோபர், நவம்பர் போன்ற மழை மாதங்களில் தான் வழியனுப்பு விழா நடக்கும். நன்றாக மழை பெய்து, நிலமும் புற்றும் குளிர்ந்துள்ள நிலையில், புற்றின் வெளிப்புறம் பிறைவடிவில் வாசல் அமைத்து, அதில் படை கறையான்கள் காத்திருக்கும். வெளிப்பகுதியில் நல்ல ஈரப்பதம், சாதகமான காற்று, நல்ல நிலவொளி ஆகியவை ஒன்றாக அமையும் நேரத்தில், இவை ராணிக்குத் தகவல் அனுப்பும். ராணி அனுமதி கிடைத்தவுடன் வில்லிலிருந்து புறப்படும் அம்புகளைப்போல, சாரைசாரையாகப் புற்றிலிருந்து ஈசல்கள் வெளியே பறக்கும்.

இந்த நிலப்பரப்பில் ஒரு நாடும், இன்னொரு நாடும் தாக்கிக்கொண்டால் தான் போர். இரு அணிகள் மோதிக்கொண்டால்தான் சண்டை என நினைக்கிறோம். ஆனால், ஒவ்வொரு நொடியிலும் போர்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு உயிரும் உணவுக்காகவும் தற்காப்புக்காகவும் போரிட்டுக் கொண்டேயிருக்கின்றன. இந்தச் சண்டை இல்லை[illegible] உயிர் சமன்பாடு உடைந்துவிடும். கறையான்களுக்கும் அப்படிச் சூழலியல் எதிரிகள் அதிகம் இருக்கிறார்கள். பறவைகள், பாம்புகள், மனிதர்கள் எனப் பல எதிரிகளைச் சமாளிக்க வேண்டிய ஆற்றல் கறையான்களுக்கு இல்லை. புற்றிலிருந்து வெளியேறி பறக்கத் தொடங்கிய சில அடி தூரத்திலே பல ஈசல்கள் கீழே விழுந்துவிடும். இன்னும் பல பறவைகள், பாம்புகளுக்கு இரையாகும். அதிக தூரம் பறந்தவுடன் ஈசல்களுக்கு இறக்கைகள் உதிர்ந்துவிடும். அப்போது மண்ணில் விழும், ஈசல்கள் ஊர்ந்துகொண்டே செல்வதை நீங்கள் பார்த்திருக்கலாம். அவை, உயிர்வாழ்வதற்காக ஊர்வதில்லை. தனது இணைதேடி, மரண வேதனையுடன் ஊர்ந்து கொண்டிருக்கும். அந்தக் கணம்தான் கறையான்கள் வாழ்க்கையில் முக்கியமான தருணம். தங்கள் இனத்தைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், தனது இணையைத் தேடிக் கண்டுபிடிக்கும். ஆயிரம் ஈசல்கள் மண்ணில் விழுந்தால், அதில் ஒன்றிரண்டு ஈசல்களுக்கு மட்டுமே இணை கிடைக்கும். தனது இணை கிடைத்தவுடன், ஊர்ந்து கொண்டே மண்ணுக்குள் சிறு குழிபறித்து வசிக்கும். அதன் பிறகு, மண்ணுக்குள் நடக்கும் ஒரு இனத்தின் பரவலாக்கம்.


ஈசல்களின் உடல்முழுவதும் புரதமும் கொழுப்பும் நிறைந்திருக்கும். இவைதான் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டுள்ள ஈசல்களுக்கான உணவு. முட்டையிட்டுக் குஞ்சு பொரித்த பிறகு, தங்களுக்கென பிரத்தியேகமான புற்றுகளை உருவாக்கும். முட்டை களை இடும் ஈசலின் உடல் வளர்ந்து கொண்டே போகும். அதுதான் ராணி கறையானாக மாறும். இந்த ராணி, ஒவ்வொரு தேவைக்கும் தேவையான கறையான்களை உருவாக்கிக் கொள்ளும். இப்படித்தான் கறையான்களின் காலனி உருவாகிறது. ராணி கறையான் ஒருநாளைக்கு 2,000 முட்டைகள் வரை வைக்கும் திறனுடையது.

கறையான் புற்று, நிலத்தின் மேல் பகுதியில் இருக்கும் உயரத்தைவிட அதிக ஆழம் பூமிக்குள் இருக்கும். பணிக்கறையான்கள் தங்கள் வாயில் சுரக்கும் ஒருவிதமான உமிழ்நீரை, மண்ணுடன் கலந்து புற்றுகளைக் கட்டும். கட்டடக்கலைக்கு புற்றுகள் எப்படி முன்னோடியாக இருக்கிறதோ… அதேபோல விவசாயத்துக்கும் முன்னோடி கறையான்கள் தான். மனிதன் விவசாயம் செய்யத் தொடங்குவதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, தோட்டம் அமைத்து பூஞ்சைகளை உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றன கறையான்கள்.

புற்று அமைக்க இடம் தேர்வானதும், நிலமட்டத்தில் படுக்கை அமைத்து, அதில் பூஞ்சைகளைப் பயிர் செய்யும் பணியில் பணிக்கறையான்கள் ஈடுபடும். இந்தப் பூஞ்சைகள்தான் கறையான் புற்றின் வாழ்வாதாரம். கறையான்களின் உணவுப் பொருள்களை இந்தப் பூஞ்சைகள்தான் மக்க வைத்து, உண்ணும் வகையில் மாற்றித்தரும். சில புற்றுகள் மேற்பகுதி மூடியிருக்கும். சில திறந்த நிலையில் இருக்கும். மூடியிருக்கும் புற்று முழுவதும் ஏராளமான நுண்துளைகள் இருக்கும். அதன் வழியாகக் காற்றோட்டம் இருக்கும். கறையான்கள் வளர்சிதை மாற்றத்தின் போது ஏற்படும் வெப்பம் காரணமாக ஒருவித அழுத்தம் ஏற்பட்டு, வெளிக்காற்று புற்றுக்குள் போகும். அப்போது, ஏற்படும் அழுத்தம் காரணமாக புற்றுக்குள் இருக்கும் காற்று வெளியேறும். வெளிக்காற்று புற்றுக் குள் செல்வதால் புற்று எப்போது குளுமையாக இருக்கும். புற்று நிலத்தின் கீழ்ப் பகுதியில் இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்குக் கூடச் செல்லும். இத்தனை இயந்திரங்கள், ஆயிரக்கணக்கான ஆட்கள் உதவியுடன் நாம் சில கட்டடங் களை உருவாக்கி, அவற்றை உலக அதிசயம் எனக் கொண்டாடுகிறோம். உண்மையில் சின்ன உயிரியான கறையான்கள் கட்டும் ஒவ்வொரு புற்றும் இயற்கையின் அதிசயம்தான். எனவே, இயற்கையின் படைப்பில் ஒவ்வொரு உயிரும் உன்னதமானதுதான் என்ற எண்ணத்தை மனதில் வைத்து, கறையான்கள் மீதும் கனிவு காட்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி ஒருவனாக அணியை தன் தோளில் சுமந்த வீரர்




2003-ஆம் ஆண்டு நடந்த ஒரு போட்டியில் அவுஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் விளையாடிய போது டீப் மிட் விக்கெட்டில் இருந்த களத்தடுப்பாளரை மாற்றி டீப் பாயிண்டில் நிறுத்தினார் கில்கிறிஸ்ட். இப்போது மொத்தம் டீப் பொயிண்டில் இரு களத்தடுப்பாளர்கள்தவறானது என்று முணுமுணுக்கிறார் துடுப்பாட்டவீரர். அடுத்த பந்தில் டீப் மிட் விக்கெட் திசையில் சிக்ஸ் பறக்கிறது.

ஓஃப் சைடில் அடிக்கச் சொல்லி சவால் விடுகிறார் கில்கிறிஸ்ட். தற்போது டீப் பொயிண்டில் களத்தடுப்பாளர் செட் செய்யப்பட்ட இரு களத்தடுப்பாளர்களுக்கும் இடையில் இரண்டு அடுத்தடுத்த பவுண்டரிகள் அடிக்கப்படுகிறது. அந்த பட்ஸ்மேன்தான் லாரா எனும் ஜாம்பவான். நேர்த்தியாக களத்தடுப்பாளர்களுக்கு இடையே பந்தை அடிப்பதில் லாரா ஒரு மேதை.

மேற்திகந்தியத்தீவுகள் அணி அடித்த மொத்த ஓட்டங்களில் 20% ஓட்டங்கள் லாரா அடித்ததுதான். டெஸ்ட் போட்டிகளில் அணி வீரர்கள் எடுத்த மொத்த ஓட்டங்களில் 40% ஓட்டங்களுக்கு மேல் 20 முறை எடுத்துள்ளார். தான் விளையாடிய காலங்களில் தனி ஒரு வீரராக அணியை தன் தோளில் சுமந்துள்ளார் என்பதை இந்த புள்ளிவிபரங்கள்விபரிக்கின்றன. 02.05.2019 லாராவின் பிறந்தநாள்.

லாரா குடும்பத்தில் 11 குழந்தைகள் இருந்தனர். லாரா 10ஆவது குழந்தை. ஆறு வயதாக இருந்தபோது, அவரது தந்தை உள்ளூரில் ஹார்வர்டு பயிற்சியளிப்பு மையத்திற்கு அனுப்பி வைத்தார். சிறு வயதிலிருந்தே பயிற்சியில் ஈடுபட்டதன் மூலம் துடுப்பாட்ட நுட்பத்தை நன்கு அறிந்திருந்தார்.

லாராவுக்கு 1989 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகள் அணியில் விளையாடும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் தந்தை இறந்ததன் காரணமாக அப்போது பங்கேற்க முடியவில்லை. 1990இல் மேற்கிந்தியத்தீவுள் அணிக்கு முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடினார்.



டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக 2004 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிராக கப்டனாக இருந்து 43 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட 400* ஓட்டங்கள் விளாசினார். அதற்கு முன்பு இங்கிலாந்து அணியுடன் 1994ஆம் ஆண்டு 375 ஓட்டங்கள் எடுத்து அசத்தியுள்ளார்.

131 டெஸ்ட் போட்டிகளில் 11953 ஓட்டங்கள், அதிகபட்சமாக 400* ஓட்டங்கள், சராசரி 52.89.299 ஒருநாள் போட்டிகளில் 10405 ஓட்டங்கள், அதிகபட்சமாக 169 ஓட்டங்கள். 40.49 சராசரி.

லாரா அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற அணிகளுடன் அதிகமாக விளையாடியுள்ளார். ஆனால் அவர் இந்திய அணியுடன் அதிகம் விளையாடாத காரணத்தால் அவரின் சாதனைகள், திறமைகள் இங்கு பெரும்பாலும் அறியப்படாமல் உள்ளது.

சச்சின் விளையாடிய காலகட்டத்தில் சச்சினுக்கு நிகராக மிகச்சிறந்த பட்ஸ்மேனாக வலம்வந்த லாரா பல இக்கட்டான சூழ்நிலைகளில் அணிக்காக தனி ஒரு வீரராக லோவ் ஆர்டர் பட்ஸ்மேன்களுடன் அதிகமாக விளையாடியுள்ளார்.

பொதுவாக நல்ல திறமை உள்ள வெஸ்ட் இண்டீஸ் வீரர்கள் போதுமான ஆதரவு, அடிப்படை கட்டமைப்பு இல்லாமல் இருந்து வருகின்றனர். இதை கவனத்தில் கொண்டு கிரிக்கெட் வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என லாரா ஓய்வின் போது வலியுறுத்தியிருந்தார்.

### லாராவை பற்றிய தகவல்கள்

லாராவின் தாயார் புற்றுநோயால் இறந்ததன் காரணமாக பெரல் மற்றும் பண்டி லாரா அறக்கட்டளை என்ற பெயரில் ஒரு புற்றுநோய் சிகிச்சை மையம் வைத்துள்ளார்.

மிகச்சிறந்த இடதுகை துடுப்பாட்ட வீரராக லாரா 1993 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் சிட்னி மைதானத்தில் முதல் சதமாக 277 ஓட்டங்கள் அடித்து அசத்தினார். அதன் நினைவாக தனது குழந்தைக்கு சிட்னி என்ற பெயர் வைத்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா மேற்கிந்தியத்தீவுக்கு வந்தபோது, நட்சத்திர வீரரான லாராவை சந்தித்தார். லாராவின் திறமையை பாராட்டி "மைக்கேல் ஜோர்டன் ஒஃப் கிரிக்கெட்" என்று பெருமைப் படுத்தினார்.

சச்சின் டெண்டுல்கர் லாராவின் நெருங்கிய நண்பர். சச்சின் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்த லாராவின் சாதனையை முறியடித்த போது, சச்சினுக்கு பரிசு வழங்கினார். மேலும் சச்சினின் புகழ்பெற்ற மும்பை உணவகத்தை லாரா திறந்து வைத்தார். "உலகின் சிறந்த வீரர் சச்சின்" என்று லாரா கூறினார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இதுவரை 9 இரட்டை சதம், 2 முச்சதம் அடித்த ஒரே வீரர் என்ற சாதனை படைத்துள்ளார்.


டெஸ்ட் விளையாடும் அனைத்து நாடுகளுடனும் சதமடித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரே ஓவரில் அதிகபட்சமாக 28 ஓட்டங்கள் எடுத்து கலக்கியுள்ளார். ஒரே ஓவரில் 26 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விஸ்டன் கிரிக்கெட்டர் விருதை 1995 ஆம் ஆண்டு பெற்றார்.

### லாராவைப்பற்றி பிரபலங்களின் கருத்து

ஸ்பின் மற்றும் மீடியம் வேகப்பந்து வீச்சில் லாரா விளையாடுவதை போல வேறு எந்த வீரரின் ஆட்டத்தையும் கண்டதில்லை.



- மைக்கல் ஹோல்டிங்.

அணியை சோதனை காலங்களில் தனது தோளில் சுமந்து அணிக்கு மிகச்சிறந்த பங்களிப்பை அளித்துள்ளார்.




- ரிக்கி பொண்டிங்.

மிகச்சிறந்த வீரர் என்றும், பந்துவீச்சில் செய்ய கடினமான வீரர் லாரா தான் என்றும் முரளிதரன் கூறியுள்ளார்.



2001 ஆம் ஆண்டு இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்ட மேற்கிந்தியத்தீவுகள் அணியில் லாரா விளையாடிய 6 இன்னிங்ஸ்களில் 688 ஓட்டங்கள். சராசரி 114.66.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்மணி

அன்பு நிறைந்த சங்குநாத வாசகர்களே! உங்கள் அனைவருக்கும் ஜிம்மிக் குட்டி சொல்லுற வணக்கங்கள் உரித்தாகட்டும். காத்தும் மழையும் புயலும் வரப் போகுது எண்டு ஒரே வெருட்டிக் கொண்டிருக்கினம். காத்து மோசமாகத் தான் அடிக்குது. தென்னோலை, மட்டை, தேங்காய் எண்டு தொப்புத் தொப்பெண்டு கூரையிலே விழுந்து கொண்டிருக்குது. பெரியவர் செவ்வரத்தம்பூ பறிச்சு சூரிய நமஸ்காரம் செய்யிறார். இந்த வயசிலையும் கண்ணாடி போடாமல் எல்லாம் வாசிக்கிறார். ஆனால் ஆறு வயது, ஏழு



வயதுப் பிள்ளைகள் எல்லாம் கண்ணாடி போடுகினம். முத்தம்மாக்கா வாறா. நல்ல மனிசி. எங்கையோ போட்டு வாறா போல. கையிலை ஒரு சின்னப்பை மட்டுத்தான். பெரியவர் கதிரையைக் காட்டுறார். உரையாடல் தொடங்குது.

"என்ன முத்தம்மா முகம் காய்ந்துபோய்க் கிடக்கு. ஏதாவது வருத்தமோ..."

"ஓம் பெரியவர் கண்ணொண்டு மங்கலாய்க் கிடக்குது. டொக்டரிட்டைக் காட்டினது 'பூ' இன்னும் வளரேல்லையாம். உரிக்க முடியாதாம். எனக்குக் கோபம் தான் வந்தது. பூ வளரட்டும்... சாமிக்கு வைப்பம் எண்டு சொல்லிப் போட்டு வந்திட்டன்.

ஏன் பெரியவர் முந்தின காலத்திலை இப்பிடி வந்து கண்குருடாகிறேல்லையோ. பழைய ஆக்கள் நல்ல பார்வையோடை இருந்தவை. ஊசி நூல் கூடக் கோர்த்தவை. அது என்ன அதிசயம்..."

ஓம் முத்தம்மா எங்கடை குசினிக்குள்ளை வெங்காயம் உடைச்சுக் கண்ணீர் விட்டால் கண்ணுக்கு நல்லது எண்டு பெரிய ஆக்கள் சொல்லுறவை. எங்கடை ஆச்சி சாகேக்கையும் பளிச் செண்ட பார்வையோடை தான் செத்தவா. சனிக்கிழமையிலை நல்லெண்ணெய் தேய்ச்சு ஊற வைச்சு சீயாக்காய் தேச்சு முழுகுவினம். ஒரு சனியும் தவறாது. விடியக் காலையிலை சூரிய நமஸ்காரம் செய்வினம். மஞ்சள் காய் கறிகள், வெண்டிக்காய்ப் பால்கறி எண்டு கண் பார்வைக்கு நல்ல உணவுகளைத்தான் தேடித் தேடிச்சமைப்பினம். உந்தக் கொம்பியூட்டர், போன், நெற் எண்டு கண்ணுக்கு இரவிரவா வேலை, நித்திரை முழிப்பு, ரி.வி. பார்க்கிறது எல்லாம் கண்ணைக் கெடுக்கிற வேலை தானே. இரண்டு மூண்டு வயதிலேயே இப்பவெல்லாம் பிள்ளைகளுக்கு போனைக் குடுத்துப் பார்க்க விட்டிட்டுத்தான் சாப்பாடு தீத்தினம். எப்பிடி விளையாட்டு கதை சொல்லி, நிலாக்காட்டி, உணவூட்டி, அறிவூட்டிப் பிள்ளை வளர்த்த காலம் மலையேறிப் போச்சுது. தாய்மாரும் ரி.வியைப் பார்த்துக் கொண்டு சாப்பாடு ஊட்டுவினம். வாய்க்கு உள்ளை போக வேண்டிய உணவு மூக்குக்குள்ளை போறதும் பிள்ளை பிரக்கடிச்சுத் திணறுறதும் கூட நடக்குது. பெரியவர்கள் சொல்லுற புத்திமதிகளைக் கேட்டால் தானே. நல்லெண்ணெயும் சீயாக்காயும் யார் தேடினம். சம்பூ தான் நுரைக்க நுரைக்கத் தேய்ச்சுத் தோஞ்சு போட்டு காய வைக்கிற மெஷினைப் போட்டு முடியைப் பறக்க விட்டிட்டுப் போகுதுகள். கண்ணைப் பாதுகாக்கிறதோ பராமரிக்கிறதோ கிடையாது. இரண்டு மாசத்துக்கு முன்னம் பதிஞ்சால் தான் கண் ஒப்பரேஷனுக்குத் திகதி கிடைக்குதாம். சொடுக்குப் போடுற நேரத்திலை ஒப்பரேஷன் முடிஞ்சு போய் அடுத்த நாளே ரி.வி. பார்க்கலாம் எண்டு டொக்டரே சொல்லி விடுறார். ம்...கலி முற்றிப் போச்சுது.

பெரியவர் பெருமூச்சு விடுறார். லதாக்குட்டி வந்து இளநீர் குடுக்கிறா. பக்கத்திலை இருக்கிறா. ஏதோ கதைக்கப் போறா போலை.

"சூடு கூடினாலும் கண் வருத்தம் வருமாம். தாத்தா கண் களைக்காமல் இருக்க வேணுமாம். தூக்கம் கெடக் கூடாதாம். சனி நீராடு எண்டு சொன்னது போல நிறையக் குளிர்ந்த பச்சைத் தண்ணியிலை முழுக வேணும். குளிர்ச்சியான கீரை வகை, பழங்கள் சாப்பிட வேணுமாம். ஏன் தாத்தா கண்ணே என் கண்மணியே எண்டு பாடிறது ..." பெரியவர் சிரிக்கிறார்.

"அருமையான உறுப்பு கண்தான். பார்க்க, படிக்க, முகத்தை அழகுபடுத்த, கண்கள் அவசியமானவை. பண்புடைமையோடும் கண்களைப் பற்றி பேசுவார்கள். கண்ணிலே நல்ல குணம் தெரியும், கண் கெட்டுக் கதைக்காதை எண்டு சொல்வார்கள். கரட், வாவுலா, முட்டை மஞ்சட் கரு, பால் எண்டு பாவித்தால் கண்களை ஆரோக்கியமாப் பேணலாம். கண்ணாடி போடாமலே காலம் முழுக்க நட்சத்திரங்களையே எண்ணலாம்.

ஒளி படைத்த கண்ணினாய் வாவா வா! என்று பாரதியார் இறையோனை வரவேற்றுப் பாடியிருக்கிறார். கண்ணின் கருமணியில் ஒளி குறையாமல் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்க வேண்டும். கண்ணை இமை காப்பது போல எண்டு சொல்வார்கள். பாடசாலைச் சிறார்களே கண்ணைக் காப்பது உங்கள் கடமை'' பெரியவர் லதாக்குட்டியைத் தட்டிக் கொடுக்கிறார். ம்...நல்ல வேளை எனக்குத் திராட்சைப்பழம் மாதிரி சுப்பர் கண். கண் கவனம். சரி வாறன்.

திருமதி.பாரதி கணேஷ்
சுன்னாகம்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : வண்ணக்கிளி
இயற்றியவர் : ஏ.மருதகாசி
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர்கள் : திருச்சிலோகநாதன், பி.சுசீலா



அடிக்கிற கை தான் அணைக்கும்
அணைக்கிற கை தான் அடிக்கும்
அணைக்கிற கை தான் அடிக்கும்
இனிக்கிற வாழ்வே கசக்கும்
இனிக்கிற வாழ்வே கசக்கும்
கசக்கிற வாழ்வே இனிக்கும் .. ம்ம் ..பாட்ரி ..
கசக்கிற வாழ்வே இனிக்கும்

அடிக்கிற கை தான் அணைக்கும்
அணைக்கிற கை தான் அடிக்கும்
இனிக்கிற வாழ்வே கசக்கும்
கசக்கிற வாழ்வே இனிக்கும்
அடிக்கிற கை தான் அணைக்கும்

புயலுக்குப் பின்னே அமைதி
வரும் துயருக்குப் பின் சுகம் ஒரு பாதி
புயலுக்குப் பின்னே அமைதி
வரும் துயருக்குப் பின் சுகம் ஒரு பாதி
புயலுக்குப் பின்னே அமைதி
வரும் துயருக்குப் பின் சுகம் ஒரு பாதி
இருளுக்குப் பின் வரும் ஜோதி
இது தான் இயற்கையின் நியதி
இருளுக்குப் பின் வரும் ஜோதி
இது தான் இயற்கையின் நியதி

அடிக்கிற கை தான் அணைக்கும்
பலே
அணைக்கிற கை தான் அடிக்கும்
இனிக்கிற வாழ்வே கசக்கும்
கசக்கிற வாழ்வே இனிக்கும்
அடிக்கிற கை தான் அணைக்கும்

இறைக்கிற ஊற்றே சுரக்கும்
இடி இடிக்கிற வானம் கொடுக்கும்
இறைக்கிற உற்றே சுரக்கும்
இடி இடிக்கிற வானம் கொடுக்கும்
இறைக்கிற ஊற்றே சுரக்கும்
இடி இடிக்கிற வானம் கொடுக்கும்

விதைக்கிற விதை தான் முளைக்கும்
இது தான் இயற்கையின் நியதி
விதைக்கிற விதை தான் முளைக்கும்
இது தான் இயற்கையின் நியதி
இது தான் இயற்கையின் நியதி

அடிக்கிற கை தான் அணைக்கும்
சபாஷ்
அணைக்கிற கை தான் அடிக்கும்
இனிக்கிற வாழ்வே கசக்கும்
கசக்கிற வாழ்வே இனிக்கும்
அடிக்கிற கை தான் அணைக்கும்

அடிக்கிற கை தான் அணைக்கும்
அணைக்கிற கை தான் அடிக்கும்
இனிக்கிற வாழ்வே கசக்கும்
கசக்கிற வாழ்வே இனிக்கும்
அடிக்கிற கை தான் அணைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அருள்நிதி ஒரு படத்தில் கமிட் ஆகிறார் என்றாலே நம்பி திரையரங்கிற்கு போகலாம் என்ற எண்ணம் இளைஞர்களிடம் உருவாகிவிட்டது. அந்த வகையில் இரவுக்கு ஆயிரம் கண்கள் படத்தை தொடர்ந்து மீண்டும் ஒரு **K-13** சஸ்பென்ஸ் த்ரில்லரை தேர்ந்தெடுத்துள்ளார் அருள்நிதி. இந்த படமும் ரசிகர்களை கவர்ந்ததா? பார்ப்போம்.

திரையுலகில் நீண்ட நாட்களாக உதவி இயக்குநராக இருக்கும் அருள்நிதி எப்படியாவது இயக்குநராகிவிட வேண்டும் என்று முயற்சி செய்து வருகின்றார்.

அந்த நேரத்தில் நண்பர்கள் வற்புறுத்தலால் க்ளப்பிற்கு செல்ல, அங்கு ஷரதா ஸ்ரீநாத் அறிமுகம் கிடைக்கின்றது. ஷரதா ஒரு எழுத்தாளர். அவருக்கு அருள்நிதி மேல் ஒரு ஈர்ப்பு வர, அவரை தன் வீட்டிற்கு அழைத்து செல்கின்றார்.

அடுத்தநாள் காலை அருள்நிதி ஒரு சேரில் கட்டிப்போட்டு இருக்க, ஷரதா தன் கையை அறுத்துக்கொண்டு இறந்துள்ளார். அருள்நிதிக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. அவருக்கு மட்டுமில்லை நமக்கும் தான். இதை தொடர்ந்து நடக்கும் அடுத்தடுத்த திருப்பமே இந்த K-13.

அருள்நிதி தொடர்ந்து ஒரு சஸ்பென்ஸ் கதையை தேர்ந்தெடுத்து நடித்து வருகின்றார். அந்த வகையில் இதுவும் அவருக்கு ஒரு சிறந்த படைப்பே. படத்தில் அவரின் கதாபாத்திரமே பெரும்பாலும் வருகின்றது. அதனால் எந்த ஒரு இடத்திலும் கவனம் சிதறவிடாமல் அவரின் பதற்றத்தை நம்மிடம் கடத்துகின்றார்.

ஷரதா படத்தின் ஆரம்பத்தில் இறந்து போகின்றார். அதைத்தொடர்ந்து இடைவேளை வரை அவருக்கு பெரிய நடிக்கின்ற வாய்ப்பு இல்லை என்றாலும். இரண்டாம் பாதியில் அவருக்கான காட்சி தொடங்கும் போது ரசிக்க வைக்கின்றார்.

படத்தில் எந்த ஒரு காட்சியையும் முழுமையாக விவரிக்க முடியாது. ஏனெனில் டுவிஸ்ட் உடைந்துவிடும். அதிலும் அட படம் முடிந்துவிட்டது இவ்வளவு தானா? என்று இருக்க. அதைத்தொடர்ந்து அருள்நிதி பார்வையில் கதை தொடங்க. அட என்னடா இது என்று சீட்டின் நுனிக்கு வரவைக்கின்றது.

ஆனால், படத்தின் முதல் பாதியில் இருந்த பதற்றம், விறுவிறுப்பு இரண்டாம் பாதியில் கொஞ்சம் தடுமாறுகின்றது.

அருள்நிதியிடம் சேர்ந்து நாமும் கவுன்ஸிலிங் சென்றது போல் இருக்க, கிளைமேக்ஸ் டுவிஸ்ட் நிமிர்ந்து உட்கார வைக்கின்றது.


படத்தின் மிகப்பெரும் பலம் சாம் இசை தான். பின்னணியில் மிரட்டியுள்ளார்.

ஒளிப்பதிவும் படம் முழுவதும் பெரும்பாலும் ஒரு ரூம் என்றாலும். எங்குமே நமக்கு சலிப்பு தட்டாமல் காட்சிப்படுத்தியுள்ளனர். படத்தின் முதல் பாதி செம்ம விறுவிறுப்பு. படத்தின் டெக்னிக்கல் விடயங்கள். கிளைமேக்ஸ் டுவிஸ்ட்.

இரண்டாம் பாதி இன்னமும் விறுவிறுப்பு இருந்திருக்கலாம்.

கிளைமேக்ஸ் இன்னமும் எல்லோருக்கும் புரிவது போல் காட்டியிருக்கலாம்.

மொத்தத்தில் **K-13** அருள்நிதி சேரில் கட்டியிருப்பது போல். நம்மையும் படத்தின் சீட்டின் நுனியில் கட்டிப்போட்டுள்ளார் இயக்குநர் பரத் நீலகண்டன்.






சினிமாவில் தனக்கு என்று ஒரு பெரிய இடத்தை பிடிக்க போராடி வரும் கௌதம் கார்த்திக் நடிப்பில் இன்று தேவராட்டம் படம் வெளியாகியுள்ளது. கிராமத்து கதைகளில் வல்லவரான முத்தையா இயக்கிய இப்படம் எப்படி இருக்கிறது. தேவராட்டம் பட்டயை கிளப்பியதா? பார்ப்போம்.

ஊரில் எந்த தப்பு நடந்தாலும் முதல் ஆளாக தட்டிக் கேட்கின்றார் கௌதம் கார்த்திக். 5 அக்காவிற்கு கடைசி தம்பியாக இருக்கும் இவரை எல்லோரும் தம்பி என்று பார்க்காமல் தங்கள் மகனாக நினைத்து வளர்க்கின்றனர். வக்கீலுக்கும் படிக்க வைக்கின்றனர்.

அந்த நேரத்தில் பெண்களை தவறாக படம்பிடிக்கும் ஒருவனை ஒரு பெண் நடுரோட்டில் செருப்பால் அடிக்க. அந்த வீடியோ ட்ரெண்ட் ஆகின்றது. ஆனால். அதை தொடர்ந்து அந்த பெண் கடத்தப்பட்டு பலரால் பலாத்காரம் செய்யப்பட்டு. மிக மோசமான நிலைக்கு வருகின்றார்.

அந்த கேஸ் கௌதம் கார்த்திக்குவர. இந்த நாச வேலையை செய்தவன் ஊரில் பெரிய ரவுடியான பெப்சி விஜயன் மகனிடம் உதவி கேட்க. ஒரு கட்டத்தில் கௌதம் கார்த்திக்கும். பெப்சி விஜயன் மகனுக்கு மோதல் ஏற்பட. கௌதம் அவனை நடுரோட்டில் வெட்டி சாய்க்கிறார். பிறகு பெப்சி விஜயன் கௌதமை கொலை செய்தே தீர வேண்டும் என்று கங்கணம் கட்ட. பிறகு என்ன ஆனது என்பதே மீதிக்கதை.

கௌதம் கார்த்திக் இது வரை நடித்த படங்களில் இதில் கொஞ்சம் வித்தியாசம் காட்டியுள்ளார். இவருக்கு எப்படி மதுரை பையன் கதாபாத்திரம் செட் ஆகும் என்று நினைத்தால். ஆறடி உயரம் முதல் காட்சியிலேயே தப்பு செய்தவர்களை அடித்து பறக்க விடுவது. மதுரை பளபளக்குது பாடலுக்கு இறங்கி ஆடுவது என கச்சிதமாக செட் ஆகின்றார்.

மஞ்சிமாவிற்கு பெரிய வேலை இல்லை என்றாலும். கதையுடன் அவர் காட்சிகள் வருவது ரசிக்க வைக்கின்றது. சூரியின் காமெடி பல நாட்களுக்கு பிறகு சிரிக்க வைக்கின்றது. கௌதமின் மாமாவாக அவர் மட்டுமல்லாமல். மேலும் இருவர் செய்யும் கலாட்டா. கவுண்டர் என முதல் பாதி சில மணி நேரம் கலகலப்பாக்கின்றனர்.

பசி தெரியாது வளர்க்கனும்னு நினைச்சோம். இப்படி பயம் தெரியாம வளர்ந்துட்ட. என்று தன் தம்பிக்காக பாசத்தை பொழியும் அக்கா. அவருடைய கணவர் போஸ் வெங்கட் என அனைவருமே நல்ல நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். செண்டிமெண்டிற்கு பஞ்சமில்லை. ஆனால். இதை வெறும் கமர்ஷியல் படம் என்று மட்டும் ஒதுக்கி சென்றுவிட முடியாது. ஜாதி பற்றியே படம் எடுக்கவில்லை என்று முத்தையா அடித்து சொன்னாலும். இன்று திரையரங்கில் ஒரு சில காட்சிகளுக்கும். வேல் கம்பு தூக்கியவர்கள் என்று சொன்ன வசனத்திற்கு வந்த கைதட்டலுக்கும் முத்தையா எப்படி பதில் சொல்வார் என்று தெரியவில்லை. தமிழ் சினிமாவில் பல முற்போக்கு படங்கள் வந்தாலும், பெண்களை பாதுகாப்பதே ஆண் களின் வீரம் என்று வசனத்தை வைத்துவிட்டு. அதே வேலையில் பொம்பல மாதிரி என்னை ஊரை விட்டு அனுப்புகிறீர்கள் என்று பிற்போக்குத்தனமான சில காட்சிகளும் படத்தில் இருப்பதை கூறி தான் ஆக வேண்டும்.

படத்தின் மிகப்பெரும் பலம் ஒளிப்பதிவு மற்றும் இசை. மதுரையை அப்படியே கண்களில் காட்டிய ஒளிப்பதிவு. அதை விட பாடல்கள் பின்னணி இசை என நிவாஸ் பிரசன்னாவின் இசை பட்டையை கிளப்புகின்றது.

படத்தின் முதல் பாதியில் நல்ல விறுவிறுப்பாகவே செல்கின்றது. செண்டிமெண்ட் காட்சிகள். எந்த காலத்திலும் ஒர்க் அவுட் ஆகும் என்பதற்கு சான்று. படத்தின் பாடல்கள் மற்றும் பின்னணி இசை. வன்முறை காட்சிகள் படம் முழுவதும் நிரம்பி வழிகின்றது.

மொத்தத்தில் சில பிற்போக்கு விடயங்களை தவிர்த்து கமர்ஷியலாக பார்த்தால் படம் கண்டிப்பாக பி.சி.ரசிகர்களுக்கு முழுத்திருப்திதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறில் உதிரிய உறவுகளின் மனதை உருக்கும் கண்ணீர்க் கதைகள்

"அப்பா எங்களை செல்லப்பிள்ளைகளாகவே வளர்த்து வந்தார். அவருடைய உழைப்பிலேயே நாங்கள் உண்ண வேண்டும் என ஆசைப்பட்டார். "நீங்கள் ஒருபோதும் தொழில் செய்யத் தேவையில்லை. குடும்பத்துக்கு எனது உழைப்பு மாத்திரம் போதும். நீங்கள் புதிய விடயங்களைக் கற்று உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்" என அடிக்கடி கூறுவார். ஆனால் இன்று ஒருவேளை உணவுக்குக் கூட வழியில்லாமல் இருக்கின்றோம். எங்களை காத்துவந்த தெய்வம் எங்களை விட்டுப் பிரிந்து விட்டது என பெற்றோரை இழந்த ரொசிக்கா கண்ணீர் விட்டுக் கதறி அழுகின்றார்.

ஆம். ரொசிக்காவைப் போன்று எண்ணிலடங்காத பலர் இன்று நமது தேசத்தில் வீட்டுக்குள்ளேயே புலம்பி அழுது கொண்டிருக்கின்றனர். கடந்த மாதம் 21ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களின் சோக விளைவுகளே இவை.

## 9 தற்கொலைத் தாக்குதல்கள்

வழமை போன்று சந்தோஷமாகவும் ஆர்ப்பரிப்புடனும் இயங்கிய இலங்கைத் தீவு அன்று 21ஆம் திகதி காலை 8.45 மணிக்குப் பின்னர் ஆட்டம் கண்டு போனது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு. நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. இந்தச் சம்பவம் அனைத்து இன மக்களையும் அதிர்ச்சிக் குள்ளாக்கியிருந்தது.

## உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் குளறுபடி

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 359 என பொலிஸ் மற்றும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்திருந்தன. ஆனால் அந்தத் தகவல்கள் தவறானவை எனவும் 253 பேரே இதுவரை உயிரிழந்துள்ளதாகவும் 400க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் விசேட வைத்திய அதிகாரி அனில் ஜயசிங்க தெரிவித்திருந்தார்.

## 'அதிக உயிர்கள் காவுகொள்ளப்பட்ட கட்டுவபிட்டி

நீர்கொழும்பு கட்டுவபிட்டி ஆலயத்தில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலிலேயே நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் பலியாகினர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இன்னும் பலர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். பலர் ஊனமடைந்துள்ளனர்.

## முழுத்துக்கு முழும் மரண வீடுகள்

கட்டுவபிட்டி பிரதேசம் எங்கும் இனம் புரியாத ஓர் அமைதி. வீதியில் மக்களின் நடமாட்டம் இருக்கவில்லை. வீதிகள் தோறும் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

வீதியில் நடந்து செல்லும் போது வீடுகள் தனித்தே காணப்படுகின்றன. ஒவ்வொரு முழத்துக்கு முழும் மரண வீடுகள். ஒவ்வொரு வீட்டிலும் இருவர் அல்லது மூவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளார்கள் என வீட்டின் சுவர் மதில்களில் கண்ணீர் அஞ்சலி சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மரண வீடு என்பது எப்போதாவது ஒரு வீட்டில் பதிவாகும் சம்பவம். ஆனால் ஒரு கிராமத்திலுள்ள அனைத்து வீடுகளிலும் மரண வீடுகள் இருந்ததை சிறிதும் நினைத்து பார்க்க முடியவில்லை. அதுவும் ஒரு வீட்டில் பலர் பலியான சோகம்.

இவற்றைப் பார்த்துக்கொ ண்டே அங்கிருந்த ஒரு வீட்டுக்குள் நுழைந்தபோது வீட்டின் முற்றத்தில் ஆழ்ந்த யோசனையுடன் பெண்ணொருவர் அமர்ந்திருந்தார். இடது காலில் பாரிய கட்டு ஒன்று போடப்பட்டி ருந்தது. வலது கால் மற்றும் கைகளிலும் சிறு கட்டுகள் போடப்பட்டிருந்தன. அவரை அணுகிய போதும் நாம் வந்ததை அவர் அறிந்திருக்கவில்லை. அருகில் சென்று "அக்கா..!" என அழைத்த பின்னர் தன்னை சுதாகரித்துக் கொண்டு எம்மைப் பார்த்தார். அவருடைய முகத்தில் பாரிய சோகங்கள் பிரதிபலித்தன. ஒருவேளை உணவுக்கேகையேந்தும் நிலைமை. எம்மை அறிமுகம் செய்த பின்னர் எம்மோடு கதைக்க ஆரம்பித்தார் 44 வயதுடைய தினிசா.



கட்டுவபிட்டி தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் எனது 70 வயது தாயும் 8 மாத மகளும் உயிரிழந்து விட்டார்கள். எனது ஒரு கால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனது 7 மற்றும் 5 வயதுடைய இரு மகள்மார் காயமடைந்துள்ள நிலையில் 5 வயதான மகள் தொடர்ந்தும் வைத்தியசாலை யில் சிகிச்சைபெற்று வருகிறார்.

ஆலயத்தில் தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது நாம் ஆலயத்தின் நடுப்பகுதியிலேயே அமர்ந்திருந்தோம். தாக்குதலில் எனது மகளுக்கு நெஞ்சுப் பகுதியில் குண்டின் சன்னம் பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இரு வாரங்கள் கடந்துள்ளன. எமது வீட்டின் பொருளாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் உதவி செய்வதாகக் கூறினாலும்கூட உயிரிழந்தவர்களின் சடலங்களையும் 65 ஆயிரம் ரூபா பணம் கொடுத்தே பெற்றுக்கொண்டோம். இதனால் நாம் பெரும் கலக்கமடைந்தோம். இதன் பின்னர் ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. இந்தப் பணம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதா? அல்லது ஆலயக் குருவானவரால் வழங்கப்பட்டதா? என்று தெரியவில்லை.

உயிரிழந்தவர்களைப் புதைக்கும் நேரமே குறித்த ஒரு இலட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டது. எனது கணவர் வெளிநாட்டுக்குச் சென்று இரு மாதங்களே ஆன நிலையில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிலையில் எனது கணவர் மறுநாள் திங்கட்கிழமை நாடு திரும்பி விட்டார். இதனால் எனது குடும்பத்துக்கான வருமானம் அனைத்தும் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

"இந்தத் துக்கத்திலிருந்து மீள முடியுமா எனத் தெரியவில்லை. 8 மாதக்குழந்தையைப் பிரிந்தமை பெரும் மன உளைச்சலையும் வேதனையையும் இனம்புரியாத கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தொழில் துறை, உறவுகளை இழந்து தற்போது நிர்க்கதியாகியுள்ளோம் ஒருவேளை உணவுக்குக கூட பிறரிடம் கையேந்தும் நிலையேற்பட்டுள்ளது.

இதற்கு யார் பொறுப்பு...? நாங்கள் செய்த தவறா...? இந்த நிலைக்கு நாம் தள் ளப்பட்டுள்ளோம்... ஒன்று விட்ட ஒரு நாள் மருந்து கட்டவென வைத்தியசா லைக்குச் செல்ல வேண்டி யுள்ளது. அது மாத்திரமின்றி எமது உறவினர்களும் இங்கு தான் உள்ளனர். அவர்களோ தங்களது தொழில் துறைகளை விட்டு விட்டு எமக்கு ஆதரவு வழங்குவதற்காக எம்முடன் இருக்கின்றனர். அனைவரின் வருமானங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.



கடந்த ஒரு வாரமாக ஆலயங்களில் இருந்தும் விகாரைகளிலிருந்தும் உணவுகள் வழங்கப்பட்டன. எமக்கு அயலவர்கள் உணவு தருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்களும் இதே நிலையில் தான் உள்ளனர். அவர்களின் உறவுகளும் பறிபோயுள்ளன.

எதிர்காலம் என்ற ஒன்றில் நம்பிக்கையில்லாது போய்விட்டது. ஆலயத்தில் இடம்பெற்ற கொடூரச் சம்பவம் தான் என் கண் முன்னே வந்து செல்கின்றது. உணவு உண்பதற்கே மனமில்லாது போயுள்ளது.

பின்னர் அவரை ஆறுதல்படுத்தி விட்டு அங்கிருந்து அருகில் இருந்த அடுத்த வீட்டுக்குள் சென்றோம்.

அங்கு வீட்டு முற்றத்தில் ஆங்காங்கே பல வெற்றுக் கதிரைகள் காணப்பட்டன. கூடாரங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த ஒருவர் "இந்த வீட்டில் நேற்றுத்தான் இறுதி மரணச் சடங்கு இடம்பெற்றது" என்றார்.

வீட்டுக்குள் நுழைந்த போது அங்கிருந்த 44 வயதுடைய துலானி என்ற பெண் உரையாடத் தொடங்கினார். மரண ஓலங்கள் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. "அம்மா எங்களைவிட்டுப் பிரிந்து விட்டார். ஐயோ இந்த அரசாங்கம் ஏன் இப்படிச் செய்துவிட்டது" இரு கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தோட அவரின் முகத்தில் கடும் கோபம் வெளிப்பட்டது.

"எனது அம்மா இறப்பதற்கு முன் 3 செபங்கள் அடங்கிய புனித செபஸ்தியாரின் படங்களை அச்சிட்டு அவரின் பிள்ளைகளாகிய எம் மூவரிடமும் வழங்கினார். அவரே உருவாக்கிய செபம் அது. அதாவது எனது பிள்ளைகளும் அயலவர் சமூகமும் எவ்வித துன்பங்களுமின்றி வாழ வேண்டும் என அந்தச் செபத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஒருவேளை அம்மாவை மரணம் நெருங்கிவிட்டதோ என்று எண்ணத். தோன்றுகின்றது. அம்மாவை இந்த அரசாங்கம் கொலை செய்து விட்டது...." கதறி அழுகின்றார்.... சகோதரிகள் இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொள்கின்றனர்.

"சுற்றியிருந்த அயலவர்களில் அரைவாசிப் பேர் பலியாகி விட்டனர். இதற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்" கடும் கோபத்துடன் தெரிவித்தார். "இந்தக் கிராமத்துக்கே அரசாங்கம் பாவம் செய்துவிட்டது. இந்த அரசியல்வாதிகளுக்கு தெரிந்திருந்தும் ஏன் எம்மைப் பாதுகாக்கவில்லை? நாம் யாருக்கு எந்தத் தீங்கிழைத்தோம்? நாங்கள் கஷ்டப் பட்டு உழைத்து சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து கிராமத்தவர்களில் பலர் தொழில் செய்ய முடியாதுள்ளனர். உடலில் ஒவ்வொரு அங்கவீனத்துடன் காயப்பட்டுள்ளனர். ஐயோ....ஏன் இந்த நிலைமை" எனக் கதறி அழுதது எமது இதயத்தைக் கனக்கச் செய்தது. மற்றுமொரு வீட்டில் கணவனும் மனைவியும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். மனைவி கோமா நிலைக்குச் சென்றுள்ளார். கணவன் படுகாயமடைந்துள்ளார். குண்டுச் சன்னங்களை உடலிலிருந்து அகற்ற முடியாது. பல துகள்கள் உள்ளன. இவர்கள் ஒவ்வொருவருக்கும் அரசியல்வாதிகளே பொறுப்புக் கூற வேண்டும். ஒரு வேளை உணவே கேள்விக்குறியாகியுள்ளது.

சுயமாக தொழில் செய்து சந்தோஷமாக வாழ்ந்து வந்தவர்கள் நாங்கள். இன்று மற்றவர்களிடம் கையேந்தும் நிலையேற்பட்டுள்ளது. சமைத்து உண்பதற்குக்கூட வழியில்லை. மனமும் இடம் கொடுக்க மறுக்கின்றது.

எனது கணவர் படுக்கையிலேயே இருக்கின்றார். அவரால் எழுந்து நடந்து செல்லக்கூட முடியவில்லை. தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றபோது நான் ஆலயத்துக்கு வெளிப்பகுதியிலேயே இருந்தேன். அம்மா உள்ளே அமர்ந்திருந்தார். அன்று ஆலயத்தில் பக்தர்கள் அதிகமாக இருந்தமையால் அம்மாவுக்கு மாத்திரமே இருக்கை கிடைத்தது.

யுத்தத்தின் கொடூரத்தை நாம் தொலைக்காட்சிகளில் தான் பார்த்துள்ளோம். ஆனால் அன்று நாம் யுத்தத்தை நேரில் பார்த்த போது சொல்ல வார்த்தைகள் இல்லை. அன்றைய தினம் ஆலயத்தில் ஒலித்த ஐயோ..ஐயோ என்ற அவலக்குரல்களும் அலறல்களும் என்காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. சிலர் என்னைக் காப்பாற்றுங்கள் என கையை நீட்டி இரத்த வெள்ளத்தில் உயிருக்காகப் போராடியதை விபரிக்க வார்த்தைகள் இல்லை... ஒரு கணம் மூச்சை உள்வாங்குகின்றார்.

"இரத்தத்தைப் பார்த்தாலே எனக்கு பயம் பற்றிக்கொள்ளும். அங்கிருந்தவர்கள் கூறுகின்றனர் "உங்கள் அம்மா இறந்து கிடக்கின்றார் தூக்குங்கள்"என்று. அம்மா மரணித்து சுவருடன் சாய்ந்து கிடக்கின்றார். கதறி அழுகின்றார் "அம்மா எங்களைவிட்டுப் பிரிந்து விட்டீர்களே.... இனி நாங்கள் எப்படி அம்மாவின்றி வாழப்போகின்றோம்....?" நாம் அவர்களை ஆறுதல் படுத்தினோம் என விம்மியழ கண்களில் முத்துமுத்தாய் நீர் சொரிந்தபடி இருந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

facebook

# பூனையிடம் கதை கேட்ட எலிகள்



அழுதபடியே வந்தது மியா பூனைக்குட்டி மிக அழகாக இருக்கும். அது அழுவதைப் பார்த்தால் உங்களுக்கும் அழுகை வந்து விடும்.

பாட்டி பூனை, "ஏன் அழறே? கீழ விழுந்துட்டியா?" என்று கேட்டது.

"இல்லை" என்று அழுதபடியே தலை ஆட்டியது மியா.

"யாராவது அடிச்சாங்களா?"

"இல்லை" என்று தலை ஆட்டியது.

"அப்புறம் என்ன ஆச்சு? நீ அழுவதற்குக் காரணம் தெரிந்தால் தானே நான் உனக்கு உதவ முடியும்?" என்று மியாவை அணைத்துக்கொண்டது பாட்டி பூனை.

"நான் எலி வேட்டைக்குப் போனேனா..."

"ம்..."

"நிறைய எலிகளைப் பார்த்தேனா..."

"ம்..."

"ஆனா, என்னால ஒரு எலியைக்கூடப் பிடிக்க முடியல" என்று சொல்லி வருத்தப்பட்டது மியா.

"உன்னால ஏன் எலியைப் பிடிக்க முடியல?"

"எலிங்க என்னைவிட வேகமாக ஓடி, சின்னப் பொந்துல நுழைஞ்சிடுதுங்க."

"சரி. அதுக்காக யாராவது அழுவாங்களா? இல்ல... அழுதால் மட்டும் எலி கிடைச்சுடுமா?" என்று மியாவின் முதுகைத் தடவிக் கொடுத்தது பாட்டி பூனை.

"நான் எலிகளை வேட்டையாடணும்."

'மியா, அழாதே. நம் வீட்டுக்கே எலிகள் வரும்படி செய்கிறேன்" என்றது பாட்டி பூனை.

"பாட்டி, அந்த எலிகளை நம்ம வீட்டுக்கு வரவழைக்க முடியுமா?" என்று உற்சாகமாகக் கேட்டது மியா.

"முயற்சி பண்றேன்."

பாட்டியின் நம்பிக்கை மியாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

அன்று மாலையே மியா வீட்டு வாசலில், 'இங்கு எலிகளுக்கு நல்லொழுக்கக் கதைகள் கூறப்படும். கேட்கலாம்... விளையாடலாம்... வாருங்கள்' என்ற அறிவிப்புப் பலகை தொங்கியது.

பெரும்பாலான எலிகள் படித்துவிட்டுப் பயந்தன. ஒரு சில எலிகள் பயந்து பயந்து தங்களது எலிக்குஞ்சுகளை அழைத்து வந்தன.

எலிகளைக் கண்டதும் பாட்டி பூனை, "பயப்படாம வாங்க. உங்க குழந்தைகளுக்கு நன்னெறிக் கதைகள், நல்லொழுக்கக் கதைகள், சுற்றுச்சூழல் கதைகள், அறிவியல் கதைகள் எல்லாம் சொல்லப்போறேன். அதோடு உற்சாகமான விளையாட்டுகளையும் சொல்லித் தருவேன்" என்று அன்பாக அழைத்தது.

பூனையின் பேச்சில் நம்பிக்கை ஏற்பட்ட எலிகள், தைரியமாகத் தங்களது எலிக்குஞ்சுகளைக் கதை கேட்க விட்டுவிட்டுச் சென்றன. அன்று மூன்று எலிக்குஞ்சுகள் தான் வந்திருந்தன.

அவற்றுக்குப் பாட்டி பூனை அழகான கதை ஒன்று சொன்னது. அந்தக் கதை எலிக் குஞ்சுகளுக்கு மிகவும் பிடித்திருந்தது. கொஞ்சம் விளையாட்டு, ஒரு பாட்டு என அந்த ஒரு மணி நேரம் சென்றதே தெரியவில்லை. மகிழ்ச்சியோடு எலிகள் தங்களின் வீட்டுக்குச் சென்றன.

மியா உள் அறையில் இருந்து கவனித்துக்கொண்டிருந்தது.

"மியா... மியா..."

"என்ன பாட்டி?"

"இன்று வந்த எலிக்குஞ்சுகளைப் பார்த்துட்டியா? இன்னும் ரெண்டு நாள் கழிச்சு வேட்டையாடிடு. உடனே வேட்டையைத் தொடங்கினால் மீதி எலிகள் வராமல் போய்விடும்" என்றது பாட்டி பூனை. மியா மகிழ்ச்சியாகத் தலை ஆட்டியது.

எலிகள் தங்களது நண்பர்களையும் அழைத்து வந்தன. இப்போது பூனையின் வீட்டில் எலிகள் அதிகம் இருந்தன. இத்தனை நாளும் எலிக்குஞ்சுகளுக்குப் பாட்டி சொன்ன நன்னெறிக் கதைகளையும், நல்லொழுக்கக் கதைகளையும் உள் அறையில் இருந்து கேட்ட மியாவுக்கு அருகில் இருந்து கேட்க ஆசை வந்தது. அதுவும் எலிகளோடு சேர்ந்து கதை கேட்டது. விளையாடியது.

ஒரு வாரம் சென்றது.

"மியா, இன்னிக்கும் கதை கேட்க எலிகள் வரும். நான் கதை சொல்லி முடித்தவுடன் நீ வேட்டையை ஆரம்பித்துவிடு" என்றது பாட்டி பூனை. தலையை ஆட்டியது மியா. மாலை எலிகள் கதை கேட்க வந்தன.

'நம்மை நம்பி வந்தவர்களை ஒருபோதும் ஏமாற்றக் கூடாது' என்ற அழகான கருத்தைச் சொன்னது அன்றைய கதை. விளையாட்டு ஆரம்பமானது. பாட்டி பூனை கதவைத் தாழிட்டது.

"மியா, இது உன்னோட நேரம். நீ எலிகளை வேட்டையாடலாம். நான் கதவையும் ஜன்னல்களையும் மூடிவிட்டேன்" என்று சத்தமாகச் சொன்னது பாட்டி பூனை.

பாட்டியின் பேச்சைக் கேட்ட எலிகள் நடுங்கின.

"ம்.. மியா ஆரம்பமாகட்டும் உன் வேட்டை" என்றது பாட்டி பூனை.

"பாட்டி, என்னை மன்னிச்சிடு. நீ சொன்ன கதைகளால் என் மனதை மாற்றிக்கொண்டேன். இன்று நீ சொன்ன கதையில் நம்மை நம்பி வந்தவர்களை ஒரு போதும் ஏமாற்றக் கூடாது என்ற பொருள் இருந்தது. அதன்படி பார்த்தால் இந்த எலிகள் நம்மை நம்பி இங்கு பயமில்லாமல் வருகின்றன. நானும் அவர்களுக்கு நல்ல நண்பனாகி விட்டேன். என் நண்பர்களை என்னால் வேட்டையாட முடியாது" என்றது மியா.

அப்போதுதான் எலிகளுக்குப் பயம் குறைந்தது.

மியாவின் பேச்சால் அதிர்ச்சியடைந்த பாட்டி பூனை சற்று யோசித்துவிட்டு, "மியா, நீ வயசுல சின்னவனா இருந்தாலும், நான் சொன்ன கதைகளை உன் வாழ்க்கையோடு ஒப்பிட்டுத் திருந்திட்டே. ஆனால், கதைகளைச் சொன்ன நான் திருந்தாமல் இருந்துட்டேன். அது மிகப் பெரிய தவறுதான். எல்லோரும் என்னை மன்னிச்சுடுங்க. இன்று முதல் மியாவைப் போல, நீங்களும் எனக்குப் பேரக் குழந்தைகள்தான்" என்றது பாட்டி பூனை.

இப்போது அதிக அளவில் பாட்டியிடம் கதைகளைக் கேட்க ஆர்வமாக வந்துகொண்டிருக்கின்றன எலிகள்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1711

### கவிமாறன்

வாத்தியார்: கரண்ட் போகும் போது முதல்ல எதை எடுப்பீங்க? டார்ச்லைட், எமர்ஜன்சி லைட் இரண்டுமில்லை சேர், அப்பா பொக்கெட்டில இருக்கிற காசை எடுப்பேன்



### கிருபவன்

விட்டுக்கொடுக்கும் தன்மை நமக்கு இருந்தால் நாம் விட்டுக்கொடுத்த அனைத்தும் ஒருநாள் நம்மைத் தேடிவரும்



### ரவிராஜ்

கல்யாணமாகி 25 வருடத்தில ஒரேயொரு தடவைதான் உங்க கணவர்கிட்ட சண்டை போட்டீங்களா... ஆச்சரியமா இருக்கே? ஆமா... அந்தச் சண்டையில அவர் வீட்டை விட்டுப் போனவர்தான் 25 வருஷமா திரும்பியே வரலையே



### பிரசாந் சாந்தன்

பணம் இருந்தால் உன்னைத் தெரியாது... பணம் இல்லாவிட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது



### கோபிராம்

ஏம்மா குழந்தை அழுவுது... ஏன்னு தெரியலையேம்மா... சரி... சரி... ஸ்மார்ட் போன குடு... நீ குழந்தையா இருக்கும்போது நான் ஸ்மார்ட் போனத்தான் குடுத்தேன்



### வின்சன்

உண்ணமுடியாத கடவுள்களுக்கு படைப்பதைவிட உண்ண முடிந்த ஏழைகளுக்கு அந்த உணவைக் கொடுங்கள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்


# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 180

## ஆரோக்கியத்தில் விற்றமின் B யின் பங்கு

### விற்றமின் $B_1$ (தயமின்)

- தயமின் ஒருநீரில் கரையக்கூடிய விற்றமின் ஆகும்.
- இது உடலில் சக்தியைவெளிவிடும் அனுசேபத் தாக்கங்களின் துணைநொதியமாகத் தொழிற் படுகின்றது. முக்கியமாகக் காபோவைதரேற்று அனுசேபத்தாக்கப் படிகள்.
- தயமின் நரம்புசெலுத்தி (அசற்றைல்கோலின்), கலமென்சவ்வு இலிப்பிட்டுத்தொகுப்புக்கு இன்றிய மையாததாகும்.
- தயமின் உடலிற் குறைவதால் பெரிபெரி என்னும் நோய் உண்டாகின்றது.
- இந்தநோய் காபோவைதரேற்றுக் கூடிய தயமின் குறைந்த உணவை உட்கொள்ளுபவர்களுக்கு ஏற்படலாம்.
  **உ+ம் - நன்றாக தீட்டிய அரிசி.**
- தயமின் அகத்துறிஞ்சும் திறன் குறைந்தவர்களுக்கும் பெரிபெரிஉண்டாகலாம்.
  **உ+ம் - மிகை மதுபானம் அருந்துபவர்கள்.**




- இந்தநோயால் உடலில் நீர்தேங்குதல்; குருதி அமுக்கம் குறைதல், இதயக் கோளாறுகள் ஏற்படலாம்.
- இது நரம்புக்கலங்களின் தொகுப்பைப் பாதிப்பதால் தொடர்பற்ற அசைவு. உணர்ச்சிக் குழப்பம் என்பன ஏற்படும்.
- தொடர்ச்சியான தயமின் குறைபாட்டால் மறதி. புதிய விடயங்களைக் கிரகிக்க முடியாமை. மாரடைப்பு என்பன ஏற்படலாம்.
- தயமின் கொண்ட உணவுகள்.
  **உ+ம்-புழுங்கல் அரிசி, உலர்த்தப்பட்ட அவரை, தானியங்கள், ஓட்ஸ் (Oats), ஆட்டாமா, இறைச்சி (பன்றி), முட்டை, பால், பழங்கள் (குறைந்த அளவில்)**
- வளர்ந்த ஒருவர் நாளாந்தஉணவில் 1-1.5mg தயமினை உட்கொள்ள வேண்டும்.
- உயர்சக்திதேவை உடையவர்கள் (குழந்தைகள். கர்ப்பிணித் தாய்மார்கள்) உயர் அனு சேபத் தொழிற்பாடு உடையவர்கள் (காய்ச்சல். மிகைதைரொயிட் சுரப்பு) நாளாந்தஉணவில் அதிகளவு தயமினைஉட்கொள்ளவேண்டும்.
- வாயால் உட்கொள்ளப்படும் அதிகமானதயமின் உடலுக்குப் பயன்படுவதில்லை. அவைபெருங் குடலாலும், சிறுநீருடனும் கழிகிறது.

Dr.கஜானி

## விற்றமின் $B_2$ (Riboflavin)




- இறை போபிளேவின் எல்லாத் தாவரங்களிலும் நுண்ணங்கிகளிலும் தயாரிக்கப்படும். எனினும் மனிதன் உட்பட உயர் விலங்குகளில் இந்த உயிர் சத்து தயாரிக்கப்படுவதில்லை.
- எனவே. இதனை உணவின் மூலம் உள்ளெடுத்தல் அவசியமாகும்.
- இறைபோபிளவின் எமதுஉடலில் பிளேவின் மொனோ நியூக்கியோரைட்டு (Flavin Mono Nucleoride-FMN) பிளேவின் அடினைன் இரு நியூக்கிளியோரைட்டு (Flavin adenine Dinucl eotide-FAD) எனும் இருவகைப் பெறுதிகளாக மாற்றப்படும்.
- இவை உடலில் நடைபெறும் மீளும் ஒட்சியேற்ற. தாழ்த்தல் தாக்கங்களால் துணை நொதியங்களாகப் பயன்படுகின்றன.
- இறை போபிளேவின் உடல்வளர்ச்சிக்கு முக்கியமாகப் பயன்படும்.
- நீண்டகாலம் இது குறைவாக இருக்கும் போது உணவுச்சமிபாடு பாதிக்கப்படும்.
- அத்துடன் பலவீனமும் நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டுத் தேகம் மெலிவுற்றுதொற்றுநோய் களால் விரைவில் பாதிக்கப்படக்கூடியசந்தர்ப்பம் ஏற்படும்.
- இந்த உயிர்ச்சத்துக் குறைபாட்டால் விழி வெண்படலத்தின் மயிர்த்துளைக் குழாய்களில் குருதி கன்றல். கண்களிலிருந்து கண்ணீர் வடிதல், சொறிவு, எரிவு என்பன உண்டாகும்.
- வெளிச்சத்தைப் பார்க்கமுடியாமை **(Photo phobra),** கண் எரிதல் **(Burning of Eyes)** சொண்டிலும் நாக்கிலும் புண்கள். வாயின் மூலைகளில் வெடிப்புஎன்பனவும் அதிகமாகக் காணப்படும்.
- உடல் நிறைக்கு ஏற்றபடி ஒவ்வொருவரும் நாள் தோறும் உட்கொள்ள வேண்டிய இறை போபிளேவினின் அளவு வேறுபடுகிறது.
- பொதுவாக இது வளர்ந்தமனிதருக்கு 1.5-1.8 mg ஆகவும், கருவுற்று இருக்கும் பொழுதும். குழந்தைக்குப் பாலூட்டும் காலத்திலும் 2-2.5 mg ஆகவும் காணப்படுகிறது.
- இறைபோபிளேவின் விலங்குகளில் சுரப்பியுறுப்புக்களில் (உ-ம் ஈரல்) மிகவும் கூடுதலாகக் காணப்படுகிறது.
- அடுத்தபடியாக இறைச்சி. மீன். பால்.மோர். பாற்கட்டி, முட்டை. ஆகியவற்றில் உண்டு.
- தாவர இனத்துள் பச்சை இலைவகைகள். அவரை வகைகள் சிறந்தனவாகும். அவற்றுள் பசளி. கோவாஎன்பனசிறந்தன.
- தானியவகைகளைக் கூடுதலாகத் தீட்டும் போது இந்த உயிர்ச்சத்து அதிகளவில் இழக்கப்படும். எனவே அதிகளவில் தீட்டாததானியவகைகளை உப்யோகிப்பதே சிறந்தது.

Dr.சௌமியா

## விற்றமின் $B_{12}$

- வளர்ந்தஒருவரின் நாளாந்ததேவை 1-2mg
- இது பற்றீரியாக்களினால் மட்டுமே தொகுக்கப் படுவதனால். புளித்த உணவுகளில் அதிகம் காணப்படும்.
- மீன். இறைச்சி. முட்டைமஞ்சள்கரு.பால். ஈரல் ஆகியவற்றில் இது காணப்படும்.
- தாவரக்கலங்களில் இது காணப்படாமையால் பால் அருந்தாது மரக்கறி மட்டும் உண்பவர்களில் விற்றமின் $B_{12}$ குறைபாடிருக்கும்.
- சமைப்பதினால் இது அழிவதில்லை.
- தொழிற்பாடுகள் :

* செங்குருதிச் சிறுகலங்களின் உற்பத்திக்கு உதவுவதால் குருதிச் சோகையைத் தடுக்கும்.
* நரம்புக்கலங்களின் விருத்திக்கு உதவும்.
* காபோவைதரேற்றுக்கள். புரதம். கொழுப்பு என்பவற்றின் அனுசேபத்துக்கு உதவும்.

- குறைபாட்டின் விளைவுகள்

* Pernicious எனப்படும் குருதிச்சோகை
* மிகவும் விரைவாகப் பிரிவடைகின்ற கலங்களுடைய இழையங்கள் பாதிப்படையும். உ+ம்-என்புமச்சையில் குருதியுண்டாகும் இழையங்கள்.
* நரம்புத்தொகுதிபாதிக்கப்படும்




- விற்றமின் $B_{12}$ குறைபாட்டின் காரணங்கள்

* இரைப்பைஅல்லதுசிறுகுடலின் ஒருபகுதி இழக்கப்படுதல்.
* வயதாதல்
* அமிலக்குறைப்பு
* பால் அருந்தாதுமரக்கறிமட்டும் உண்பவர்கள்
* போதியளவுவிற்றமின் $B_{12}$ உள்ளெடுக்கப் படாமை

- இதனைஅதிகளவில் உள்ளெடுப்பதால் பாதிப்பு விளைவதில்லை.
- அகத்துறிஞ்சலுக்கு இரைப்பையிலிருந்து சுரக்கப்படும் அதக்காரணி (IF) தேவை.
- ஈரலில் சேமிக்கப்படும். இது2-3 வருடங்களுக்கு போதுமானது.
- விற்றமின் E & விற்றமின் $B_6$ என்பன இதன் அகத்துறிஞ்சலுக்குத் தேவைப்படும்.

Dr.A.தர்மினி

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org